**ம.க.கு.ந.க.எண். அ8/0128/2019**

**தீர்மானஎண்.410/2021** **நாள்:09-04-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மத்திய கணக்கு குழுமம் - அயற்பணி - ஓய்வூதிய பங்களிப்பு திட்டம் - அரசு பங்களிப்புத் தொகை - விடுப்பூதிய பங்களிப்புத் தொகை செலுத்த தெளிவுரை வழங்கி அரசு கடிதம் வெளியிடப்பட்டது - அரசு கடிதத்தை பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த அனுமதி.**

அரசு கூடுதல் முதன்மை செயலாளர் அவர்களின் கடிதம் எண்.49175/நிதி (PGC-I) /2020)த்துறை, நாள்.19.01.2021ல், ஓய்வூதிய பங்களிப்பு திட்டத்தின் கீழ் வரும் அயர்பணியாளர்களுக்கு. அரசு பங்களிப்புத் தொகை பிடித்தம் செய்து பின்னர் செலுத்துவதும், மற்றும், விடுப்பூதிய பங்களிப்புத் தொகை செலுத்துவதும் குறித்து தெளிவுரை வழங்கப்பட்டுள்ளது.

அரசு கடிதத்தின் விபரம் கீழ்கண்டுள்ளவாறு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

LETTER NO. 49175/Fin (PGC –I)/2020, DATED: 19.01.2021

**Sub** : CPS - Foreign Service - Matching Contribution (Employer's Contribution) - Leave Salary Contribution - Clarification - Issued - Regarding.

**Ref** : **1** G.O.Ms.No.12, Personnel & Administrative Reforms (FR.II) Department, Dated 08.01.1991.

**2** From the Accountant General, Chennai Letter No.AG (A&E)/PC II/UNIT IV/ 2019-20/28858, Dated 21.10.2020.

-oOo-

Orders have been issued in the Government Order first cited, regarding introduction of "Foreign Service Card" for those who are deputed for Foreign Service from the Government to the Departments/State Government Organizations to note the transfer and other particulars including the leave salary and pension contributions, whenever there are changes in the pay/Scales of pay due to grant of increments or promotion to higher post for the deputationist.

**2.** The AG (A&E), Chennai in the reference second cited, has requested to remit the pension contribution / leave salary contribution for the Foreign Service rendered by the employees covered under CPS.

**3.** In this Connection, the following clarification is being issued:-

**i)** The Contribution towards CPS for the employees covered under CPS and deputed to Foreign Service shall not be remitted to the AG (A&E), Chennai by the Employer.

**ii)** The Matching Contribution (Employer's Contribution) under CPS shall be remitted every month. Interest on both the contribution of the Employer and Employee (Interest shall be calculated at the rate fixed by the Government as and when for the accumulation on the account of the subscriber of CPS) shall also be remitted for the belated payment.

**iii)** Leave Salary Contribution shall be remitted by the Employer to the AG (A&E), Chennai as being done.

**for Additional Chief Secretary to Government**

<u>ம.க.கு.ந.க.எண். அ8/0128/2019</u>

எனவே, அரசு கடிதம் எண்.49175/நிதி (PGC-I) /2020) த்துறை, நாள். 19.01.2021 ஐ , பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த, சிறப்பு அதிகாரி -நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 19.02.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“அரசு கடிதத்தை பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

*******

**<u>சு.து.நக எண்.B2/ 2751/ 2020</u>**

**தீர்மான எண்.411/2021** **நாள்:09-04-2021**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுசுகாதாரத்துறை - நோவல் கொரோனா நோய் தடுப்பு பணிகள் மாநகராட்சியில் செயல்பட்டு வரும் பரிசோதனை மையங்களில் (Covid Screening Centre) ஆய்வக பணிகள் மேற்கொள்ள 50 எண்ணிக்கையில் ஆய்வக நுட்புனர்கள் (Lab Technicians) ஒப்பந்த அடிப்படையில் M/s.V.U.Assoicates நிறுவனம் மூலம் 06.07.2020 முதல் 08.01.2021 வரை 6 மாத காலத்திற்கு பணியமர்த்த ஆணை வழங்கப்பட்டது - ஒப்பத்தொகை ரூ.63,54,300/ என்பதற்கு பதிலாக ரூ.62,70,000/ நிர்வாக அனுமதி பெறப்பட்டது - மன்றத்தீர்மானத்தில் திருத்தம் மேற்கொள்ள அனுமதி.</u>**

நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID - 19) உலகமெங்கும் 200க்கும் மேற்பட்ட நாடுகளில் பரவியுள்ள நிலையில் உலக சுகாதார நிறுவனம் (WHO) உலகமெங்கும் அவசர நிலையினை (Public Health Emergency of International Concern (PHEIC)) பிரகடனப்படுத்தியுள்ளது. மேலும் கட்டுப்படுத்தக்கூடிய தொற்று நோயாகவும் (Controllable Pandemic) அறிவித்துள்ளது. நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை (P1) துறையின் அரசாணை (Ms) எண்.95 நாள்.13.03.2020ல் நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID-19) அறிவிக்கப்பட்ட நோயாக (Notified disease) அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசின் உத்திரவின்படி பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறை சார்பில் நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID - 19 ) பரவாமல் தடுக்க பல்வேறு நடிவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

சிறப்பு அதிகாரி/மன்றத்தீர்மான எண். 453/2020 நாள்:07.07.2020ல், பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் SARI/ILI (Influenza Like illness) பாதிக்கப்பட்டவர்களை RT-PCR முறையில் பரிசோதனை செய்யவும், மேலும் பரிசோதனை மையத்திற்கு வரும் நபர்களுக்கு கொரோனா மாதிரிகள் (Nasopharyngeal/ Oropharygeal) எடுக்கவும் மற்றும் இதர கோவிட் நோய் தடுப்பு பணிகளுக்கும் மொத்தம் 50 எண்ணிக்கையில் ஆய்வக தொழிற்நுட்புனர்கள் ஒப்பந்த அடிப்படையில் 06.07.2020 முதல் 08.01.2021 வரை ஆறு மாத காலத்திற்கு M/s. V.U. Associates நிறுவனம் மூலம் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

இப்பணிக்கென சிறப்பு அதிகாரி/மன்றத்தீர்மான எண். 453/2020 நாள்:07.07.2020ல் ரூ.62,70,000/- நிர்வாக அனுமதி பெறப்பட்டது.

**Lab Technicians**

| Sl.No | Name of the Agency | Salary per Month (Rs) | Allowance | Total | EPF (13%) (Rs) | ESI (3.25 %) (Rs) | Admin Charges | GST (18%) (3+4+5+6) | Total (3+4+5+6+7) | Required Number | Total six month Rs (8x9x6) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 1 | M/s. V.U. Associates | 12000 | 3000 | 15000 | 1560 | 390 | 1000 | 2950 | 20900 | 50 | 6270000 |

ஆனால் மேலே தெரிவிக்கப்பட்ட அட்டவணையில் GST கணக்கீடு தவறுதலாக கணக்கீடு செய்யப்பட்டு நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. சரியான கணக்கீடு கீழ்க்கண்டவாறு இருத்தல் வேண்டும்.

| Sl. No | Name of the Post | Salary per Month (Rs) | Allowance | Total | EPF (13%) for basic pay (Rs) | ESI (3.25 %) for Basic pay (Rs) | Admin Charges | GST (18%) (3+4+5+6) | Total (3+4+5+6+7) | Required Number | Total six month Rs (8x9x6) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 1 | Lab Technicians | 12000 | 3000 | 15000 | 1560 | 390 | 1000 | 3231 | 21181 | 50 | 6354300 |

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சியில் செயல்பட்டு வரும் கொரானோ நோய் பரிசோதனை மையங்களில் (Covid Sample Centre) தேவையான ஆய்வக தொழிற்நுட்பனர்கள்-50 எண்ணிக்கையில் அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு ஒப்பந்த அடிப்படையில் ஆறு மாத காலத்திற்கு குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள M/s.V.U.Assoicates , Chennai-21 நிறுவனம் மூலம் பணியமர்த்த ரூ.62,70,000/- என்பதை ரூ.63,54,300/ க்கு திருத்தம் மேற்கொள்ள அனுமதியும்,
2. இப்பணிக்கான திருத்திய நிர்வாக செலவினம் ரூ.63,54,300/- (ரூபாய் அறுபத்தி மூன்று லட்சத்து ஐம்பத்தி நான்காயிரத்து முன்னூறு மட்டும்) மேற்கொள்ள அனுமதியும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 12.03.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"மன்றத்தீர்மானத்தில் திருத்தம் மேற்கொள்ள, 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*******

சு.து.நக.எண்.B2/2490/2021

தீர்மான எண்.412/2021 நாள்:09-04-2021

**பெருநகர சென்னை மாநகராட்சி - பொது சுகாதாரத்துறை - நோவல் கொரோனா நோய் தடுப்பு பணிகள் மாநகராட்சியில் செயல்பட்டு வரும் பரிசோதனை மையங்களில் (Covid Screening Centre) ஊடு கதிர் பரிசோதனை செய்ய 25 எண்ணிக்கையில் ஊடுகதிர் நுட்புனர்கள் (X-ray Technicians) ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருட காலத்திற்கு அளிக்க குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள M/s. V.U. Associates நிறுவனத்தின் மூலமாக ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டதற்கு பின்னேற்பு அனுமதி.**

நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID - 19 ) உலகமெங்கும் 200 க்கும் மேற்பட்ட நாடுகளில் பரவியுள்ள நிலையில் உலக சுகாதார நிறுவனம் (WHO) உலகமெங்கும் அவசர நிலையினை (Public Health Emergency of International Concern (PHEIC)) பிரகடனப்படுத்தியுள்ளது. மேலும் கட்டுப்படுத்தக்கூடிய தொற்று நோயாகவும் (Controllable Pandemic) அறிவித்துள்ளது. நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை (P1) துறையின் அரசாணை (Ms) எண்.95 நாள்.13.03.2020ல் நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID - 19 ) அறிவிக்கப்பட்ட நோயாக (Notified disease) அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசின் உத்திரவின்படி பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறை சார்பில் நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID - 19 ) பரவாமல் தடுக்க பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. படிப்படியாக குறைந்து வந்த இந்த நோயின் தாக்கம் தற்போது அதிகரிக்க தொடங்கியுள்ளது. இதன் காரணமாக பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் பெருநகர சென்னை மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதில் ஒரு பகுதியாக கொரோனா நோய் தடுப்பிற்கென மத்திய, மாநில அரசுகளின் வழிகாட்டுதல்களின்படி, மருத்துவர்கள்,. மருத்துவ சார் பணியாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு கோவிட்-19 தடுப்பூசி போடப்பட்டு வருகின்றது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் 45 வயது முதல் 59 வயது முடிய இணை நோய் (Co-Morbid) உள்ள நோயாளிகளுக்கும், 60 வயதிற்கு மேல் அனைத்து பொதுமக்களுக்கும், கோவிட் 19 தடுப்பூசி இலவசமாக நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையங்கள் மற்றும் நகர்ப்புற சமுதாய நல மையங்களில் காலை 8.00 மணி முதல் மாலை 5.00 வரையிலும், தண்டையார்பேட்டை தொற்றுநோய் மருத்துவமனையில் காலை 9.00 மணி முதல் 5.00 மணி வரையிலும் போடப்பட்டு வருகின்றது.

தற்போது கொரோனா தொற்று நோயின் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில், நோவல் கொரோனா நோய் உறுதி செய்யப்பட்டவர்கள் உடனடியாக மாநகராட்சியில் செயல்பட்டு வரும் அனுப்பி வைக்கப்படுகின்றனர். இதில் அவர்களின் நுரையீரல் செயல்பாடு கண்டறிய ஊடு கதிர் பரிசோதனை மேற்கொள்ளப்படுகின்றன. இதனால் அதிக நோய் பாதிக்கப்பட்டவர்கள் ஊடுகதிர் பரிசோதனை மூலம் உடனுக்குடன் கண்டறியப்பட்டு மருத்துவ சிகிச்சை உடனடியாக வழங்கப்படுகின்றது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் ஏற்கெனவே 12 கொரோனா பரிசோதனை மையங்கள் (Covid-19 Screening centre) செயல்பட்டு வந்தன. அவை அனைத்தும் மூடப்பட்ட நிலையில் மீண்டும் பரிசோதனை மையங்கள் (Covid-19 Screening centre) திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. முதற்கட்டமாக மண்டலம் 4 மற்றும் 13ல் கொரோனா பரிசோதனை மையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மண்டலம் 8ல் திறப்பதற்கு பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த பரிசோதனை மையங்களில் X-Ray Unit ஒன்றிக்கு 2- ஊடு கதிர் தொழிற் நுட்பனர்கள் (X-Ray Technicians) வீதம் ((two shift basis) இரண்டு பகுதி நேரமாக அதாவது 8 மணி முதல் 2 மணி வரையிலும் மற்றும் 2 மணி முதல் 10 மணி வரைக்கும்) பணியமர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தற்போது கொரோனா நோய் அதிகரித்து வரும் நிலையில் மொத்தம் 25 எண்ணிக்கையில் ஊடு கதிர் தொழில் நுட்பனர்கள் (X-Ray Technicians) ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருட காலத்திற்கு வெளி நிறுவனம் மூலம் பணியமர்த்தி கொள்ளவும், பரிசோதனை மையங்களில் தேவைகளின் அடிப்படையில் இவர்களை பணியமர்த்தி கொண்டு கொரோனா தடுப்பு பணிகள் மேற்கொள்ளவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**சு.து.நக.எண்.B2/2490/2021**

ஏற்கெனவே கொரோனா தடுப்பு நடவடிக்கையின் போது, தகுதி வாய்ந்த ஊடுகதிர் தொழில் நுட்பனர்கள் (X-Ray Technicians) பணிக்கு கிடைக்காத காரணத்தாலும், மேலும் அவர்கள் ஊடுகதிர் பரிசோதனை செய்யும்போது கொரோனா (COVID - 19) வைரஸ் தொற்று ஏற்பட வாய்ப்பு அதிகம் உள்ளதாலும், இப்பணிக்கு பணியாளர்களை பணியமர்த்துவது சிரமமாக இருந்ததால், இந்நிலையை கருத்தில் கொண்டு கொரோனா (COVID - 19) தடுப்புப்பணிக்கு மட்டும் ஊடுகதிர் தொழில் நுட்பனர்களின் (X-Ray Technicians) மாத ஊதியம் ரூ.20,000/- ஆக நிர்ணயம் செய்து 6 மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில பணியமர்த்தப்பட்டனர். தற்போதும் இதே ஊதியத்தில் ஊடுகதிர் தொழில் நுட்பனர்கள் பணியமர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை-1**

**Qualification of Staff**

| Sl. No | Category of Staff | Qualification |
|---|---|---|
| 1 | X-Ray Technicians | X-Ray Technician Course from Govt. Recognized Institution |

ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்படும் பணியாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம், பணியாளர் இன்சூரன்ஸ், (Employee's State Insurance) மற்றும் பணியாளர் வருங்கால வைப்பு நிதி (Employee's Provident Fund), சரக்கு மற்றும் சேவைக்கட்டணம் (GST) மற்றும் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட வேண்டிய சேவைக்கட்டணம் (Administrative Charges) கீழ்க்கண்ட அளவில் வழங்கப்பட வேண்டியுள்ளது. சிறப்பு அதிகாரி/மன்றத் தீர்மான எண்.560/2020 நாள்.21.08.2020ல் ஒப்பந்ததாரருக்கு நிர்வாக கட்டணமாக 10% (Salary+ESI+EPF) (GST வரி நீங்கலாக) வழங்க அனுமதி அளித்துள்ளது.

**அட்டவணை-2**

| Employee's State Insurance (Salary upto Rs.21000) | | Employee's Provident Fund(Salary upto Rs.15000) | | GST |
|---|---|---|---|---|
| Employer Contribution in the salary | Employee Contribution in the salary | Employer Contribution in the salary | Employee Contribution in the salary | |
| 3.25% | 0.75% | 13% | 12.00% | 18% |

எனவே, இப்பணிக்கென கீழ்க்கண்ட அளவில் செலவினம் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

**அட்டவணை-3**

| Sl. No | Name of the Agency | Salary per Month (Rs) | EPF (13 %) (Rs) | ESI (3.25 %) (Rs) | Admin Charges (10%) approximately | GST (18%) (1+2+3+4) | Total (1+2+3+4+5) | Required Number | Total 12 months Rs (6x7x12) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 1 | X-Ray Technicians | 20000 | 0 | 650 | 2065 | 4089 | 26804 | 25 | 8041200 |

நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை (P1) துறையின் அரசாணை (Ms) எண்.95 நாள்.13.03.2020 மற்றும் நிதித்துறை கடிதம் எண்.74/JS(MA)/Finance(Salaries) /2020 நாள்.01.04.2020ன்படியும், கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தங்கள் சட்டம் 1998 பிரிவு 16-a ல் அவசர காலங்களில் செயல்பட ஒப்பம் கோரும் அலுவலருக்கு ஒப்ப விதிகளில் தளர்வு செய்து ஒப்பம் கோருவதில் இருந்து விலக்களித்து நேரடியாக கொள்முதல் செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

**சு.து.நக.எண்.B2/2490/2021**

Tamil Nadu Transparency in Tenders Act, 1998 Sec:16 :"Provision of Act not to apply in certain cases: The provisions of section 9 and 10 shall not apply to procurement."

(a) During natural calamities and emergencies declared by the Government;

எனவே, மேற்கண்ட சட்ட விதிகளின்படி, அவசர அவசியம் கருதியும், பொதுமக்களின் நலன் கருதியும், கோவிட் தொற்று தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், கீழ்க்கண்ட நிறுவனங்களிடம் இருந்து விலைப்புள்ளிகள் கோரி பெறப்பட்டது.

| SNo | Name of the Agency |
|---|---|
| 1 | M/s. V.U.ASSOCIATES, No.18/11,T.K.Garden, 4th Street, Old Washermenpet, Chennai-600021. |
| 2 | M/s.E.KUMAR, Civil House Keeping, Maintenance Contractor, No.1, J Block, RV Nagar, Jofferkhanpet, Chennai-600083 |
| 3 | M/s. Sundarrajan, No.32-B, Bank of Baroda Street, Ambathur, Chennai-600053 |

**அட்டவணை-4**

| Sl. No | Name of the Agency | Salary per Month (Rs) | EPF (13 %) (Rs) | ESI (3.25 %) (Rs) | Admin Charges | GST (18%) (1+2+3+4) | Total (1+2+3+4+5) | Required Number | Total 12 months Rs (6x7x12) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 1 | M/s.V.U.Associates (L1) | 20000 | 0 | 650 | 1700 | 4023 | 26373 | 25 | 7911900 |
| 2 | M/s.M.Sundarajan (L2) | 20000 | 0 | 650 | 2500 | 4167 | 27317 | 25 | 8195100 |
| 3 | M/s.E.Kumar (L3) | 20000 | 0 | 650 | 2700 | 4203 | 27553 | 25 | 8265900 |

இதில் M/s.V.U.Assoicates , Chennai-21 நிறுவனத்தினர் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ளனர். அவர்களிடம் மேலும் விலைக்குறைப்பு நடத்த பேச்சு வார்த்தை நடத்தியதில் அவர்கள் கீழ்க்கண்டவாறு விலைக்குறைப்பு செய்து அளித்துள்ளனர்.

**அட்டவணை-5**

**M/s.V.U.Assoicates quote after negotiation**

| Sl. No | Name of the Agency | Salary per Month (Rs) | EPF (13 %) (Rs) | ESI (3.25 %) (Rs) | Admin Charges | GST (18%) (1+2+3+4) | Total (1+2+3+4+5) | Required Number | Total 12 months Rs (6x7x12) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 1 | X-Ray Technicians | 20000 | 0 | 650 | 1300 | 3951 | 25901 | 25 | 7770300 |

ஒப்பந்ததாரர் அளித்துள்ள இறுதி ஒப்பத்தொகை ரூ. 77,70,300/- யானது அலுவலக மதிப்பீட்டுடன் ரூ. 80,41,200/- ஒப்பிடுகையில் (-)3.36% (lower) குறைவாக உள்ளது.

எனவே, அவசர அவசியம் கருதியும், பொதுமக்களின் நலன் கருதியும், கொரோனா நோயின் தடுப்பு நடவடிக்கை பணிகளை மேற்கொள்ள ஊடுகதிர் தொழில் நுட்பனர்களின் (X-Ray Technicians) அத்தியாவசியமாக தேவைப்படுவதாலும் M/s.V.U.Assoicates, Chennai-21 நிறுவனத்தினரின் குறைந்த விலைப்புள்ளியினை ஏற்றுகொள்ளலாம்.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சியில் செயல்பட்டு வரும் கொரோனா நோய் பரிசோதனை மையங்களில் (Covid Screening Centre) ஊடு கதிர் பரிசோதனை செய்ய 25 எண்ணிக்கையில் ஊடுகதிர் நுட்புனர்கள் (X-ray Technicians) ரூ.20,000/- மாத ஊதியத்தில் (அட்டவணை 5ல் தெரிவிக்கப்பட்டவாறு) 26.03.2021 முதல் 25.03.2022 வரையில் ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த குறைந்த விலைப்புள்ளி ரூ.77,70,300/- (ரூபாய் எழுபத்தி ஏழு லட்சத்து எழுபதாயிரத்து முன்னூறு மட்டும்) அளித்துள்ள M/s.V.U.Assoicates நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று பணியாணை வழங்கியதற்கு பின்னேற்பு அனுமதியும்,
2. நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை (P1) துறையின் அரசாணை (Ms) எண்.95 நாள்.13.03.2020ல் நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID -19) அறிவிக்கப்பட்ட நோயாக (Notified disease) அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தங்கள் சட்டம் 1998 பிரிவு 16-a ல் அவசர காலங்களில் செயல்பட ஒப்பம் கோரும் அலுவலருக்கு ஒப்ப விதிகளில் தளர்வு செய்து கொள்முதல் செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டதின் அடிப்படையில் ஒப்பம் கோருவதில் இருந்து விலக்களித்து நேரடியாக M/s.V.U.Assoicates நிறுவனத்தின் மூலம் 25 எண்ணிக்கையில் ஊடுகதிர் நுட்புனர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தியதற்கு பின்னேற்பு அனுமதியும்,
3. இப்பணிக்கான நிர்வாக செலவினம் ரூ.77,70,300/- (ரூபாய் எழுபத்தி ஏழு லட்சத்து எழுபதாயிரத்து முன்னூறு மட்டும்) மேற்கொள்ள அனுமதியும்,
4. மேற்கண்ட நிறுவனத்தினரிடம் பிணை வைப்பு தொகையாக பெறுவதில் இருந்து விலக்கு அளிக்கவும் மற்றும் ஒப்பந்தம் செய்வதில் இருந்து விலக்கு அளிக்கவும்,
5. இச்செலவினம் மாநகராட்சி நிதியின் கீழ் பிரிவு குறியீடு 30-31-01 கணக்கு குறியீடு 230-70-12-03 என்ற தலைப்பின் கீழ் மேற்கொள்ள அனுமதியும்,

மேற்கண்ட *1* முதல் *5* வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் பின்னேற்பு அனுமதி கோரிய ஆணையரது 26.03.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் பின்னேற்பு அனுமதி அளிக்கப்பட்டது”.**

*******

**ம.க.கு.ந.க.எண். அ8/0129/2021**

**தீர்மானஎண்.413/2021** **நாள்:09-04-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மத்திய கணக்கு குழுமம் - பொது வருங்கால வைப்பு நிதி (தமிழ் நாடு) மற்றும் - ஓய்வூதிய பங்களிப்பு திட்டம் 01.01.2021 முதல் 31.03.2021 வரை உள்ள காலத்திற்கு வட்டி விகிதம் 7.1% என நிர்ணயித்து (ஏழு புள்ளி ஒன்று சதவீதமாக) அரசாரணைகள் வழங்கப்பட்டது - பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த அனுமதி.**

அரசாணை(நிலை) எண்.30, நிதி(படிகள்)த்துறை நாள்:22.01.2021 மற்றும் அரசாணை(நிலை) எண்.51, நிதி(PGC-)த்துறை, நாள்:.22.02.2021ல் தமிழ்நாடு பொது வருங்கால வைப்பு நிதி மற்றும் ஓய்வூதிய பங்களிப்பு திட்டம் (2020-2021) 01.01.2021 முதல் 31.03.2021 வரை உள்ள காலத்திற்கான வட்டி விகிதம் 7.1% என (ஏழு புள்ளி ஒன்று சதவீதமாக) நிர்ணயித்து அரசாணைகள் வெளியிடப்பட்டது.

அரசாணைகள் விபரம் கீழ்கண்டுள்ளவாறு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

**FINANCE [Allowances] DEPARTMENT**

**G.O.Ms.No.30, Dated 22nd Jan 2021.**

*(sarvari, Thai-09 , Thiruvalluvar Aandu 2052)*

**ABSTRACT**

**Provident Fund-** General Provident Fund(Tamil Nadu) – Rate of Interest for the financial year 2020- 2021 – with effect from 01.01.2021 to 31.03.2021 – Orders – Issued.

**Read the following:-**

1. G.O.Ms.No.231, Finance (Allowances) Department, dated 23.04.2020.
2. G.O.Ms.No.306, Finance (Allowances) Department, dated 27.07.2020.
3. G.O.Ms.No.386, Finance (Allowances) Department, dated 02.11.2020.
4. From the Government of India, Ministry of Finance, Department of Economic Affairs (Budget Division), New Delhi, Resolution No.F.No.5(2)-B(PD)/2020, dated: 06.01.2021.

-oOo-

**ORDER:**

In the Government Order first to third read above, orders were issued regarding fixation of the rate of interest on the accumulation at the credit of the subscribers of G.P.F.(TN) during the financial year 2020-2021 as detailed below:

| Sl.No. | Quarter | Period | Rate of Interest |
|---|---|---|---|
| 1. | I | 01-04-2020 to 30-06-2020 | 7.1% |
| 2. | II | 01-07-2020 to 30-09-2020 | 7.1% |
| 3. | III | 01-10-2020 to 31-12-2020 | 7.1% |

2.The Government of India, in its resolution fourth read above, announced that during the year 2020-2021, accumulation at the credit of subscribers to the General Provident Fund and other similar funds shall carry interest at the rate of 7.1% (Seven point one percent) with effect from 1st January, 2021 to 31st March, 2021.

3. The Government now directs that the rate of interest on the accumulation at the credit of the subscribers to General Provident Fund (Tamil Nadu) shall carry interest at the rate of **7.1%** (Seven point one percent) with effect from 1st January, 2021 to 31st March, 2021.

4. The rate of interest on belated final payment of Provident Fund accumulation remaining unpaid for more than three months of its becoming payable shall be at the same rates as ordered in para-3 above.

**(BY ORDER OF THE GOVERNOR)**

**S. KRISHANAN**
***ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT***

**FINANCE [PGC-I] DEPARTMENT**

**G.O.Ms.No.51, Dated 22nd February 2021**
*(Sarvari, Maasi 10, Thiruvalluvar Aandu 2052*

**ABSTRACT**

Pension – Contributory Pension Scheme (Tamil Nadu) – Accumulations at the credit of subscribers to the Contributory Pension Scheme (both Employees and Employers Contribution) **Rate of interest for the Financial Year 2020-2021** – With effect from **01.01.2021 to 31.03.2021**–Orders- Issued.

---

## Read the following:-

1. G.O.Ms.No.394,Finance(PGC-I)Department, dated: 10.11.2020.
2. G.O.Ms.No.30, Finance (Allowances) Department,dated:22.01.2021.

**-oOo-**

**ORDER:**

In the Government Orders first read above, orders were issued fixing the rate of interest on the accumulation at the credit of the subscribers of Contributory Pension Scheme at **7.1% (Seven point one percent)** for the period from 1st October 2020 to 31st December 2020.

2. In the Government Order second read above, the rate of interest for accumulation at the credit of subscribers to the General Provident Fund (Tamil Nadu) were fixed at the rate of **7.1%** (Seven point one percent) for the period from 1st January 2021 to 31st March 2021.

3. The Government now direct that, the rate of interest on the accumulations at the credit of the subscribers to the Contributory Pension Scheme (Tamil Nadu) shall be fixed at **7.1%** (Seven point one percent) for the period from 1st January 2021 to 31st March 2021.

**(BY ORDER OF THE GOVERNOR)**

**S. KRISHNAN**

**ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT**

**ம.க.கு.ந.க.எண். அ8/0129/2021**

எனவே, பொது வருங்கால வைப்பு நிதி *01.01.2021* முதல் *31.03.2021* வரை உள்ள காலத்திற்கான வட்டி விகிதம் 7.1% (ஏழு புள்ளி ஒன்று சதவிகிதம்) என நிர்ணயித்து வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண்.*30*, நிதி(படிகள்)த்துறை, நாள். *22.01.2021* மற்றும் ஓய்வூதிய பங்களிப்பு திட்டம் *01.01.2021* முதல் *31.03.2021* வரை உள்ள காலத்திற்கு வட்டி விகிதம் 7.1% என நிர்ணயித்து (ஏழு புள்ளி ஒன்று சதவீதமாக) வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண்.*51* நிதி(*PCG-I*)த்துறை, நாள். *22.02.2021*யை, பெருநகர சென்னை மாநகராட்சி பணியாளர்களுக்கு நடைமுறைபடுத்த, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 08.04.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"அரசாணைகளை பெருநகர சென்னை மாநகராட்சி பணியாளர்களுக்கு நடைமுறைபடுத்த, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

***********

**H.D.C.No.Vet.Sec.A2/0128/2021**

**Resolution No.414/2021** **Date:19-04-2021**

**Greater Chennai Corporation – Public Health Department - Veterinary Section – "Chennai - Care for Animals Project (C-CAP)" – up gradation – new building construction & renovation of existing Animal Birth Control (ABC) centers - increase in holding capacity and sterilization of stray dogs - fund and project – execution by special project department – For approval.**

In the Greater Chennai Corporation area, dog population estimation was carried out in October 2018 and approximately 57,366 stray dogs were numbered. Out of the total population sterilized male and female dogs account for 27%, unsterilized dogs including puppies account for 73%. As per "National Rabies Control Programme" at least 70% of the dog population should be covered under mass sterilization and mass immunization for effective dog population control and Rabies.

To control the increase in population of stray dogs in Greater Chennai Corporation areas Animal Birth Control (Dogs) Rules, 2001 is followed which is an approved and scientific manner mandated by Animal Welfare Board of India. As per the Animal Birth Control (Dogs) Rules, 2001, street dogs are to be sterilized, vaccinated and subsequently released into the same area from where they were captured. In this way the numbers of animals is expected to decrease slowly at the rate of natural mortality without affecting the ecological balance.

For implementing the Animal Birth Control programme for stray dogs in Greater Chennai Corporation area, three Animal Birth Control Centers are already functioning at Pulianthope, Lloyds colony and Kannammapet. Unsterilized dogs caught from various zones of Greater Chennai Corporation are brought to the ABC centers where they are sterilized and immunized. After post operative care the dogs are released back to the place from where they were caught. Apart from 3 GCC maintained ABC centers, Blue Cross of India and SPCA are also involved in conducting the ABC programme.

Animal Birth Control centers functioning at Pulianthope has totally 16 kennels, Kannamapettai has 8 kennels and Lloyd's colony has 24 kennels with holding capacity of 8 -10 dogs per room. The number of stray dog sterilizations performed in the 3 GCC centers, BCI and SPCA from November 2018 to Feb 2021 is 24,134. Around 10 surgeries per day are performed in each of the centers during this period.

Based on dog population estimation conducted in year 2018 the following projections may be arrived at for the increase in number of stray dogs in the city as of now

| | | As per Dog Census 2018 Non sterilized | | | | Total |
|---|---|---|---|---|---|---|
| | | Female | Male | Lactating Dog | Puppy | |
| 1 | Non Sterilized dogs as per 2018 | 13,837 | 19,861 | 2,425 | 5,665 | 41,788 |
| 2 | Less Sterilized (October 2018 to February 2021) | 12,067 | 12,067 | - | - | 24,134 |
| 3 | Unsterilized population | 1,770 | 7,794 | 2,425 | 5,665 | 17,654 |
| 4 | Assumed Growth (3 puppies per litter-1770*5litter*3) | 26,550 | - | 36,375 | - | 62,925 |
| 5 | Total No of Dogs to be Sterilized | 28,320 | 7,794 | 38,800 | 5,665 | 80,579 |

As per the above table, number of fertile stray dogs to be sterilized is around 81,000.

## H.D.C.No.Vet.Sec.A2/0128/2021

To control the stray dog population in an effective manner and to achieve the target of sterilizing 81,000 stray dogs within a reasonable time frame, the existing capacity of each ABC centre needs to be increased with better infrastructure facilities and required manpower. ABC centers at Kannamapet and Pulianthope needs renovation and an additional capacity is required to meet the need. As the ABC centre at Lloyd's colony is in dilapidated condition, the same has to be demolished and a new structure to be constructed.

Proposed additional facilities (New Ground +1 Floor structure) for each ABC centers are as follows:

| S.No | Particulars | No of rooms/ kennels |
|---|---|---|
| 1 | Kennels | 20 |
| 2 | Doctors room with toilet | 2 |
| 3 | Reception cum admin | 1 |
| 4 | Lab | 1 |
| 5 | Wash room and toilet | 2 |
| 6 | Service area | 1 |
| 7 | Operation theatre | 2 |
| 8 | Storage room | 1 |
| 9 | kitchen | 1 |

Based on the proposed additional facilities the target of sterilizing 81,000 stray dogs will be achieved within a span of 3 years. The details are mentioned below:

| **Centres** | | **Plan** | **Kennels** | **dogs/ kennel** | **Total - dogs** | **Catch per day** | **No at any given point** | **Surgeries/ day** | **Surgeries/ month** | **Surgries/year** | **To achieve target-years** |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| New | Kannamapettai | G+1 | 18 | 8 | 144 | 30 | 150 | 30 | 660 | 7,920 | |
| | Pulianthope | G+1 | 18 | 8 | 144 | 30 | 150 | 30 | 660 | 7,920 | |
| | Lloyds | G+1 | 20 | 8 | 160 | 30 | 150 | 30 | 660 | 7,920 | |
| Existing | Kannamapettai | | | | | | | 10 | 220 | 2,640 | **2.56** |
| | Pulianthope | | | | | | | 10 | 220 | 2,640 | |
| | Blue Cross | | | | | | | 10 | 220 | 2,640 | |
| | **Total** | | | | **448** | **90** | **450** | **120** | **2,640** | **31,680** | |

As per the request for additional facilities, the Special Projects department has forwarded the approximate capital cost expenses along with the preliminary drawings.

**Approximate Cost estimate for the** "**Chennai - Care for Animals Project (C-CAP)"** is **as follows:**

1. The capital expenses for the proposed project – **Rs.9,18,69,000/-** (Nine Crores Eighteen Lakhs and Sixty Nine Thousand only)(Details enclosed).

2. The Operational expenses for the proposed project per annum – **Rs.4,92,37,000 /-** (Rupees Four crores ninety two lakhs thirty seven thousand approximately) (Details enclosed).

| **Operational Cost per Center / month (Rs.)** | **For Three Centers / month (Rs.)** | **Total Operational cost /annum (Rs.)** |
|---|---|---|
| 13,67,700 | 41,03,100 | 4,92,37,200 |

**H.D.C.No.Vet.Sec.A2/0128/2021**

The operation of all the three centers or a part of it, entire centre operations of each centre or a part of it, may be outsourced to an external agency for increased efficiency, specialized skills, reduction in recruitment, training and administrative costs, continuity of services, staffing flexibility and other benefits. The external agency will be functioning under Veterinary Department, GCC.

3. IT related expense-Rs.15,00,000/- (Fifteen Lakhs only)(One time)

Detailed estimation of Capex & Opex costing are attached (Annexure –1&2), as provided by Special Projects Department and Public Health Department, Veterinary Section.

The infrastructures developed in this "**Chennai - Care for Animals Project (C-CAP)"** can be effectively used in following ways in the future:

1. The part of the structure can be continued for routine ABC - ARV programme and isolation ward for monitoring rabies suspected dogs.
2. While the other areas can be utilized for pet clinics, animal health and welfare centers, pet boarding and care facilities, community interaction centers, urban forest, day care centers, pet shop and stores, pet café, human-pet therapy centres and other animal welfare amenities.

Hence,

1. To approve the "**Chennai - Care for Animals Project (C-CAP)"**.
2. To approve the estimated capital cost of **Rs.9,18,69,000/-** (Rupees Nine crores eighteen lakhs and sixty nine thousand only)
3. To approve the approximate operational cost of **Rs.4,92,37,000/-** (Rupees Four crores ninety two lakhs thirty seven thousand only) annually for 3 years.
4. To approve IT related expenses - **Rs.15,00,000/-** (Rupees Fifteen lakhs only).
5. To approve the procurement of fuel for Dog Vehicles & Generators from Greater Chennai Corporation's lorry depots.
6. To allocate necessary funds from the Budget for the FY 2021-22.
7. To authorize Chennai Smart City Limited & Special Project Department, Greater Chennai Corporation to be the implementing agency to undertake and complete the project.
8. To call for tender for Design Consultants / external agencies and for respective work execution.

Sl.No 1 to 8 above, orders of the Special Officer- Standing Committee (Health), Standing Committee (Works), Standing Committee (Taxation and Finance) and Council are requested. Commissioner's Note dated.12.04.2021 is read.

**"Sl.No. 1 to 8 are approved by Special Officer- Standing Committee (Health), Standing Committee (Works), Standing Committee (Taxation and Finance) and Council."**

***********

பொ.து.ந.க.எண்.ஈ3/ 52271/ 1991

**தீர்மானஎண்.415/2021** **நாள்:19-04-2021**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - தற்காலிகமாக தோற்றுவிக்கப்பட்ட 4 துணை ஆணையர் பதவிகள் மற்றும் அதனைச் சார்ந்த துணைப்பணியாளர் பதவிகள் 01.04.2021 முதல் மேலும் மூன்று ஆண்டுகளுக்கு நீட்டிப்பு செய்வது குறித்து அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சியில், அரசாணை (பல்வகை) எண். 328, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்:04.12.1991ன்படி, தற்காலிகமாக தோற்றுவிக்கப்பட்ட 5 துணை ஆணையர் பதவிகள் மற்றும் அதனைச் சார்ந்த துணைப் பணியாளர் பதவியில் ஒவ்வொரு ஆண்டும் அரசின் அனுமதி பெற்று நீட்டிக்கப்பட்டு வந்தது.

அரசாணை (பல்வகை) எண். 83, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்: 06.04.1993ன்படி, சென்னை மாநகராட்சியில் ஒரு துணை ஆணையர் (போக்குவரத்து) பதவியும், அதனைச் சார்ந்த துணைப் பணியாளர் பதவிகளும் கலைக்கப்பட்டன, மற்ற 4 துணை ஆணையர் பதவிகளான துணை ஆணையர் (கல்வி), துணை ஆணையர் (வருவாய் (ம) நிதி), துணை ஆணையர் (சுகாதாரம்) மற்றும் துணை ஆணையர் (பணிகள்) மற்றும் அதனைச் சார்ந்த துணைப் பணியாளர் பதவிகளான 4 சுருக்கெழுத்து தட்டச்சர் பதவிகளும் ஒவ்வொரு ஆண்டும் அரசின் அனுமதி பெற்று நீட்டிக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட பதவிகளுக்கு அரசாணை (பல்வகை) எண்.409, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந.3) துறை, நாள்: 15.10.2018ன்படி, 01.04.2018 முதல் 31.03.2021 வரையில் கடைசியாக பணிநீட்டிப்பு வழங்கி அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

மேற்கண்ட 4 துணை ஆணையர் பணியிடங்களான துணை ஆணையர் (கல்வி), துணை ஆணையர் (வருவாய் (ம) நிதி), துணை ஆணையர் (சுகாதாரம்) மற்றும் துணை ஆணையர் (பணிகள்) மற்றும் அதனைச் சார்ந்த துணைப் பணியாளர் பதவிகளான 4 சுருக்கெழுத்து தட்டச்சர் (புதிய ஊதிய விகிதம் ரூ.35400 – 112400 (நிலை 11) மற்றும் இதர படிகள்) ஆகிய தற்காலிக பணியிடங்கள் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு அவசியமானதால் மேற்கண்ட தற்காலிக பணியிடங்களை 01.04.2021 முதல் மேலும் மூன்று ஆண்டுகள் நீட்டிப்பு செய்வது குறித்து அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப, சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 17.04.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப, சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

*******

**பொ.து.ந.க.எண்.ஈ3/ 30984/ 1997**

**தீர்மானஎண்.416/2021** **நாள்:19-04-2021**

**பணியமைப்பு – பெருநகர சென்னை மாநகராட்சி – பொதுத்துறை – அனைத்து துறைகளிலும் தற்காலிகமாக தோற்றுவிக்கப்பட்டு நீட்டிப்பு பெறப்பட்டு வரும் 746 பதவிகளுக்கு 01.04.2021 முதல் மேலும் மூன்று ஆண்டுகளுக்கு நீட்டிப்பு செய்வது குறித்து அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் அனைத்து துறைகளிலும் தற்காலிகமாக தோற்றுவிக்கப்பட்ட 1896 பணியிடங்களில் 1150 தற்காலிக பணியிடங்கள் அவசியம் இல்லாததாக கருதப்பட்டதால், மன்றத்தீர்மான எண்.528/2012, நாள்: 29.11.2012ன் படி, அரசுக்கு ஒப்புவிக்கப்பட்டு மீதமுள்ள 746 தற்காலிக பணியிடங்களுக்கு அரசாணை (ப) எண்.64, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.3) துறை, நாள்: 07.02.2013ல் 31.03.2013 வரை தொடர் நீட்டிப்பு அளித்து அரசு ஆணையிட்டுள்ளது.

மேற்கண்ட 746 பணியிடங்களுக்கு, 03.05.2019 நாளிட்ட அரசாணை (ப) எண்.75, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந-3) துறையின்படி, 01.04.2018 முதல் 31.03.2021 வரையில் மூன்று ஆண்டுகள் தொடர் நீட்டிப்பு வழங்கி அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி எல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ள நிலையில், பணிகள் தொய்வின்றி மேற்கொள்வது அவசியமானதால், தற்காலிகமாக தோற்றுவிக்கப்பட்ட 746 தற்காலிக பணியிடங்களை (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது) 01.04.2021 முதல் மேலும் மூன்று ஆண்டுகளுக்கு நீட்டிப்பு செய்வது குறித்து அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 17.04.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப, சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

*******

**பொ.து.ந.க.எண். ஈ3/ 5842/ 2021**

**தீர்மானஎண்.417/2021** **நாள்:19-04-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - அயற்பணி - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - பெருநகர சென்னை மாநகராட்சி, அயற்பணியில் பணியேற்ற அலுவலர்களின் விவரம் தகவல் மற்றும் பதிவிற்கும் அனுமதி.**

அரசாணை (2டி) எண். 232, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, பணிகள் அலகு, பணி-1 பிரிவு, நாள்: 29.12.2020, சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை, எண். ந.க. அ1/001/2021, நாள்: 20.01.2021, அரசாணை (2டி) எண். 14, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, பணிகள் அலகு, பணி-1 பிரிவு, நாள்: 22.01.2021, அரசாணை (டி) எண். 60, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.ப.1) துறை, நாள்: 15.02.2021, அரசாணை (டி) எண். 21, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ம.ந.3) துறை, நாள்: 25.01.2021 மற்றும் அரசாணை (வாலாயம்) எண்.510, பொது (சிறப்பு-அ) துறை, நாள்: 11.02.2021 ன்படி, கீழ்க்காணும் அலுவலர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி அயற்பணியில் பணியேற்ற விவரம் சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களின் தகவலுக்கும் மற்றும் பதிவுக்கும் சமர்ப்பித்த ஆணையரது 17.04.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

| வ. எண் | பெயர் (ம) பதவி | அரசாணை எண். மற்றும் நாள் | அயற்பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|---|
| 1. | திருமதி. பா. சரளாதேவி துணை ஆட்சியர்(வருவாய்) வட்டார துணை ஆணையர் (தெற்கு) அலுவலகம் பெருநகர சென்னை மாநகராட்சி | அரசாணை (2டி) எண். 232, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, பணிகள் அலகு, பணி-1 பிரிவு, நாள்: 29.12.2020. | 31.12.2020 பி.ப. |
| 2. | திருமதி. என். பி. சுமதி துணை ஆட்சியர்(நிர்வாகம்) வட்டார துணை ஆணையர் (வடக்கு) அலுவலகம் பெருநகர சென்னை மாநகராட்சி | அரசாணை (2டி) எண். 232, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, பணிகள் அலகு, பணி-1 பிரிவு, நாள்: 29.12.2020. | 08.01.2021 மு.ப. |
| 3. | திரு. எஸ். வெங்கடாசலபதி, தனி வட்டாட்சியர், தெற்கு வட்டார அலுவலகம், பெருநகர சென்னை மாநகராட்சி | சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை, எண். ந.க. அ1/001/2021, நாள்: 20.01.2021. | 21.01.2021 மு.ப. |
| 4. | திரு. த. சந்திரசேகரன், தனி வட்டாட்சியர், மத்திய வட்டார அலுவலகம், பெருநகர சென்னை மாநகராட்சி | சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை, எண். ந.க. அ1/001/2021, நாள்: 20.01.2021. | 01.02.2021 மு.ப. |
| 5. | திருமதி. சி. முத்தரசி துணை ஆட்சியர்(வருவாய்) வட்டார துணை ஆணையர் (மத்தியம்) அலுவலகம் பெருநகர சென்னை மாநகராட்சி | அரசாணை (2டி) எண். 14, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, பணிகள் அலகு, பணி-1 பிரிவு, நாள்: 22.01.2021. | 01.02.2021 மு.ப. |
| 6. | திருமதி. வ. விஜயகுமாரி நகராட்சி நிர்வாக இணை இயக்குநர்/மண்டல அலுவலர், மண்டலம்-7 | அரசாணை (டி) எண். 60, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.ப.1) துறை, நாள்: 15.02.2021 | 17.02.2021 மு.ப. |

**பொ.து.ந.க.எண். ஈ3/ 5842/ 2021**

| | | | |
|---|---|---|---|
| 7. | திரு. பி. கார்த்திகேயன்<br>நீதிபதி/ தலைவர் ,<br>வரிவிதிப்பு மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம்<br>பெருநகர சென்னை மாநகராட்சி | அரசாணை (டி) எண். 21, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ம.ந.3) துறை, நாள்: 25.01.2021 | 18.02.2021<br>மு.ப. |
| 8. | திரு. கு. குலாம் ஜீலானி பாபா<br>மாவட்ட வருவாய் அலுவலர்/<br>உதவி ஆணையர்(பொ.நி.ம.ப)<br>பெருநகர சென்னை மாநகராட்சி | அரசாணை (வாலாயம்) எண்.510, பொது (சிறப்பு-அ) துறை, நாள்: 11.02.2021 | 21.02.2021<br>பி.ப. |

**"தகவல் மற்றும் பதிவிற்கு, சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*******

**சுது நக எண்.NUHM/ பி2/ 1341/ 2020**

**தீர்மானஎண்.418/2021** **நாள்:20-04-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - பொது சுகாதாரத்துறை - தேசிய நகர்ப்புற சுகாதார திட்டத்தில் 91 மருத்துவ அலுவலர்கள் மற்றும் மாநகராட்சி நிதியிலிருந்து 30 மருத்துவ அலுவலர்கள் மொத்தம் 121 மருத்துவ அலுவலர்கள் ஒப்பந்த அடிப்படையில் 01.09.2020 முதல் 31.07.2021 வரையில் 11 மாத காலத்திற்கு பணியமர்த்த M/s. Janishree Corporate Service Pvt Ltd நிறுவனத்திற்கு பணியாணை வழங்கப்பட்டது - மேற்கண்ட மருத்துவ அலுவலர்களுக்கு மினிகிளினிக்கில் பணியமர்த்தப்பட்டுள்ள மருத்துவ அலுவலர்களுக்கு வழங்கப்படுவதைப்போல மாத ஊதியத்தினை ரூ. 40000/ லிருந்து ரூ. 60000/ ஆக உயர்த்தி 01.04.2021 முதல் 31.07.2021 வரையில் நான்கு மாத காலத்திற்கு திருத்திய பணியாணை வழங்க அனுமதி.**

சிறப்பு அதிகாரி/மன்றத்தீர்மான எண்.418/2020, நாள்.29.06.2020 மற்றும் சிறப்பு அதிகாரி/மன்றத்தீர்மான எண்.580/2020, நாள்.28.08.2020ன்படி 2020-2021ம் நிதியாண்டில் ஒப்பளிக்கப்பட்ட நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையங்களுக்கு தேவையான 84 மருத்துவ அலுவலர்கள் (Medical Officers) மற்றும் பாடி, ஆலந்தூர் நகர்ப்புற சமுதாய நல மையங்களுக்கு தேவையான 2 மருத்துவ அலுவலர்கள், 5-நடமாடும் மருத்துவமனை ஊர்திகளுக்கு (Mobile Medical Units) தேவையான 5 மருத்துவ அலுவலர்கள் மொத்தம் 91 மருத்துவ அலுவலர்கள் மற்றும் மாநகராட்சி நிதியிலிருந்து திருவொற்றியூர், மணலி, புழல், வளசரவாக்கம்,பெருங்குடி கண்ணகி நகர் மற்றும் ஈஞ்சம்பாக்கம் நகர்ப்புற சமுதாய நல மையங்களுக்கு தேவையான 30 மருத்துவ அலுவலர்கள் மொத்தம் 121 மருத்துவ அலுவலர்கள் ரூ.40000/ மாத ஊதியத்தில் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த 01.09.2020 முதல் 31.07.2021 வரையில் பதினொரு மாத காலத்திற்கு பணியமர்த்த M/s. Janishree Corporate Service Pvt Ltd நிறுவனத்திற்கு பணியாணை வழங்கப்பட்டது.

அட்டவணை எண்.1

| Sl. No | Fund | UP HCs | MMU | Thiruvottiyur UCHC | Manali UCHC | Puzhal UCHC | Padi UCHC | Valasaravakkam UCHC | Alanthur UCHC | Perungudi UCHC | Injambakkam UCHC | Kannagi Nagar UCHC | Total |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | NUHM | 84 | 5 | - | - | - | 1 | - | 1 | - | - | - | 91 |
| 2 | Corporation | - | | 4 | 4 | 4 | - | 5 | - | 5 | 4 | 4 | 30 |
| | | | | | | | | | | | | | 121 |

அட்டவணை எண்.2

M/s.Janishree Corporate Sevices Pvt Ltd (Contract Period 01.09.2020 to 31.07.2021)

| Sl. No | Category of Staff | Salary per Month (Rs) | EPF (13%) | ESI (3.25 %)(Rs) | Admin Charges | GST (18%) (1+2+3+4) | Total (1+2+3+4+5) | Required Number of Staff | Total 11 months Rs (6x7x8) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 1 | Medical Officers | 40000 | 0 | 0 | 3900 | 7902 | 51802 | 121 | 6,89,48,462 |

நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை (N2) துறையின் அரசாணை (Ms) எண்.530 நாள்.05.12.2020ன்படி, பொதுமக்களுக்கு மருத்துவ சேவைகள் வழங்க தமிழக அரசானது தமிழகம் முழுவதும் 2000 மினி கிளினிக்குகளை வாரத்தில் ஆறு நாட்கள் (சனிக்கிழமை தவிர) (காலை 8.00மணி முதல் 12.00மணி வரை மற்றும் மாலை 4.00மணி முதல் 8.00மணி வரையில்) திறந்து செயல்படுத்த உத்திரவிடப்பட்டுள்ளது. இதில் வார்டுக்கு ஒன்று வீதம் 200 மினி கிளினிக்குகள் பெருநகர சென்னை மாநகராட்சியில் திறக்கப்பட்டுள்ளன. ஒரு மினிகிளினிக்கு ஒரு மருத்துவ அலுவலர், ஒரு செவிலியர்கள் மற்றும் ஒரு மருத்துவமனை பணியாளர் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

**சுது நக எண்.NUHM/ பி2/ 1341/ 2020**

நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை (N2) துறையின் அரசாணை (Ms) எண்.588 நாள்.30.12.2020ல் மினிகிளினிக்குகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்படும் மருத்துவ அலுவலர்களுக்கு மாத ஊதியமாக ரூ.60,000/ நிர்ணயம் செய்யப்பட்டு தற்போது 156 மருத்துவ அலுவலர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

சிறப்பு அதிகாரி/மன்றத்தீர்மான எண்.397 /2021 நாள்.24.03.2021ன்படி கோவிட் நோயினை தடுக்கவும், பொதுமக்களுக்கு கோவிட்-19 தடுப்பூசி தடையின்றி போடவும், பெருநகர சென்னை மாநகராட்சியில் செயல்பட்டு வரும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களின் பணி நேரத்தினை காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை (உணவு இடைவேளை மதியம் 1.00 முதல் 2.00 வரை) மாற்றி அமைத்து ஆணை பெறப்பட்டுள்ளது.
எனவே, மினி கிளினிக்கில் பணிபுரியும் மருத்துவ அலுவலர்களும், ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் மருத்துவ அலுவலர்களும் ஒரே மாதிரியான பணியினையே மேற்கொண்டு வருகின்றனர்.. ஆனால் ஒப்பந்த அடிப்படையிலான மருத்துவ அலுவலர்களுக்கு மாத ஊதியம் ரூ.40,000/ ஆகவும், மினி கிளினிக்கில் பணிபுரியும் மருத்துவ அலுவலர்களுக்கு மாத ஊதியம் ரூ.60,000/ ஆகவும் உள்ளது.

தற்போது கொரோனா நோய் அதிகரித்து வரும் நிலையில் மருத்துவ அலுவலர்களுக்கு ஊதியம் வித்தியாசம் இருப்பதால் மருத்துவ அலுவலர்கள் பணிக்கு கிடைப்பது சிரமாக இருக்கும் எனவும் கருதபப்படுகின்றது.

எனவே, தற்போது ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்படும் மருத்துவ அலுவலர்களுக்கும் 01.04.2021 முதல் 31.07.2021 வரையில் நான்கு மாத காலத்திற்கு ஒப்பந்ததாரரின் நிர்வாக கட்டணம் மாற்றாமல் மாத ஊதியம் ரூ.60,000/ ஆக நிர்ணயம் செய்து வழங்கவும், இதற்கென தேவைப்படும் கூடுதல் நிதியினை மாநகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்ட நிதி (NUHM)**

தேசிய நகர்ப்புற சுகதாரத்திட்டத்தில் 91 மருத்துவ அலுவலர்கள் பணியமர்த்த மாத ஊதியம் ரூ.40,000/த்தில் நான்கு மாத காலத்திற்கு ரூ 17395560/ அளிக்கப்பட்டுள்ளது. இந்த 91 மருத்துவ அலுவலர்களுக்கும் மாத ஊதியம் ரூ.60,000/ ஆக நிர்ணயம் செய்து வழங்கும் போது கூடுதலாக தேவைப்படும் நிதி விவரம் பின்வருமாறு

அட்டவணை எண்.3

| Medical Officers | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| Sl. No | Description | Salary per Month (Rs) | EPF (13%) (Rs) | ESI (3.25 %) (Rs) | Admin Charge | GST (18%) (1+2+3+4) | Total (1+2+3+4+5) | Required Number of Staff | Total 4 months Rs (6x7x4) |
| | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 1 | Revised Medical Officer Salary | 60000 | 0 | 0 | 3900 | 11502 | 75402 | 91 | 27446328 |
| 2 | Fund provided by NUHM for posting of 91 Medical Officers | 40000 | 0 | 0 | 500 | 7290 | 47790 | 91 | 17395560 |
| | Difference amount | | | | | | | | 10050768 |

**பெருநகர சென்னை மாநகராட்சி நிதி**

திருவொற்றியூர், மணலி, புழல், வளசரவாக்கம், பெருங்குடி, ஈஞ்சம்பாக்கம் மற்றும் கண்ணகி நகர் நகர்ப்புற சமுதாய நல மையங்களுக்கு தேவையான 30 மருத்துவ அலுவலர்கள் பணியிடங்கள் தேசிய நகர்ப்புற சுகாதார திட்டத்தில் அனுமதி அளிக்கப்படாத நிலையில், இப்பணியிடங்கள் மாநகராட்சி நிதியில் இருந்து மேற்கொள்ள அனுமதி பெறப்பட்டுள்ளது.

**சுது நக எண்.NUHM/ பி2/ 1341/ 2020**

அட்டவணை எண்.4

**Medical Officers Posted (Corporation Fund)**

| Sl. No | Fund | Thiruvottiyur UCHC | Manali UCHC | Puzhal UCHC | Valasaravakkam UCHC | Perungudi UCHC | Injambakkam UCHC | Kannagi Nagar UCHC | Total |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | Corporation | 4 | 4 | 4 | 5 | 5 | 4 | 4 | 30 |

பெருநகர சென்னை மாநகராட்சி நிதியில் மாத ஊதியம் ரூ.40,000/ த்தில் நான்கு மாத காலத்திற்கு 30 மருத்துவ அலுவலர்கள் பணியமர்த்த ரூ.62,16,240/த்திற்கு அனுமதி பெறப்பட்டுள்ளது. இந்த 30 மருத்துவ அலுவலர்களுக்கும் மாத ஊதியம் ரூ.60,000/ ஆக நிர்ணயம் செய்து வழங்கும் போது கூடுதலாக தேவைப்படும் நிதி விவரம் பின்வருமாறு

அட்டவணை எண்.5

| Sl. No | Description | Salary per Month (Rs) | EPF (13%) (Rs) | ESI (3.25 %) (Rs) | Admin Charges | GST (18%) (1+2+3+4) | Total (1+2+3+4+5) | Required Number of Staff | Total 4 months Rs (6x7x4) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 1 | Revised Medical Officer Salary | 60000 | 0 | 0 | 3900 | 11502 | 75402 | 30 | 9048240 |
| 2 | Medical Officers Salary already approved | 40000 | 0 | 0 | 3900 | 7902 | 51802 | 30 | 6216240 |
| | | | | | | | | | 2832000 |

மருத்துவ அலுவலர்கள் ஊதியம் ரூ.60,000/ ஆக உயர்த்தப்படும் போது கூடுதலாக தேவைப்படும் மொத்த நிதி விவரம்

அட்டவணை எண்.6

| Sno | No of Medical Officers | Fund | Different amount required from GCC due to increase of MO Salary |
|---|---|---|---|
| 1 | 91 | NUHM | 1,00,50,768 |
| 2 | 30 | GCC | 28,32,000 |
| | 121 | | 1,28,82,768 |

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறையில் தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்டத்தில் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி நிதியில் 01.09.2020 முதல் 31.07.2021 வரையில் பதினோரு மாத காலத்திற்கு M/s. Janishree Corporate Service Pvt Ltd நிறுவனத்தின் மூலம் பணியமர்த்தப்பட்டது. இந்த 121 மருத்துவ அலுவலர்களுக்கும் மினிகிளினிக்கில் பணியமர்த்தப்பட்டுள்ள மருத்துவ அலுவலர்களுக்கு வழங்கப்படுவதைப் போல (ஒப்பந்ததாரரின் நிர்வாக கட்டணத்தினை உயர்த்தாமல்) மாத ஊதியத்தினை ரூ. 40000/ லிருந்து ரூ.60000/ ஆக 01.04.2021 முதல் 31.07.2021 வரையில் நான்கு மாத காலத்திற்கு உயர்த்தி வழங்க அனுமதியும்,

2. இதற்கான கூடுதல் செலவினம் (அட்டவணை-6ல் தெரிவிக்கப்பட்டவாறு) ரூ.1,28,82,768/- (ரூபாய் ஒரு கோடியே இருபத்தி எட்டு லட்சத்து எண்பத்தி இரண்டாயிரத்து எழுநூற்றி அறுபத்தி எட்டு மட்டும்) மாநகராட்சி நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கும்,
3. இதற்கான மொத்த செலவினம் ரூ.8,03,70,862/- (ரூபாய் எட்டு கோடியே மூன்று லட்சத்து எழுபதாயிரத்து எண்ணூற்றி அறுபத்தி இரண்டு மட்டும்) மேற்கொள்ள திருத்திய நிர்வாக அனுமதிக்கும்,
4. ஒப்பந்தாரரின் நிர்வாக கட்டணம் மாற்றாமல் மருத்துவ அலுவலர்கள் ஊதியம் உயர்த்தப்பட்ட நிலையில், ஏற்கெனவே பிணை வைப்பு தொகை அளித்து ஒப்பந்ததாரர் ஒப்பந்தம் மேற்கொண்ட நிலையில் புதிய ஒப்பந்தம் மேற்கொள்வதில் இருந்தும் பிணை வைப்பு தொகை பெறுவதில் இருந்து விலக்கு அளிக்க அனுமதியும்,
5. தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்டத்தில் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை விட கூடுதலாக தேவைப்படும் செலவினத்தினை மாநகராட்சி நிதி பிரிவு குறியீடு 30-31-01 கணக்கு குறியீடு 230-15-09-00 என்ற தலைப்பின் கீழ் மேற்கொள்ள அனுமதிக்கும்,

மேற்கண்ட *1* முதல் *5* வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 29.03.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"*1* முதல் *5* வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*******

**சு.து.ந.க.எண். பி2 / 2514/ 2021**

**தீர்மானஎண்.419 / 2021** **நாள்:20-04-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - பொது சுகாதாரத்துறை - கொரோனா நோய் தடுப்பு பணி - பேரிடர் பணிகள் மேற்கொள்ளவும் - 1 முதல் 15 வரையிலான மண்டலங்களில் பரிசோதனை மையங்களில் (Covid Screening Centre) கொரோனா மாதிரிகள் எடுக்கவும் மற்றும் மண்டலங்களில் ஆய்வக பணிகள் மேற்கொள்ளவும், 100 எண்ணிக்கையில் ஆய்வக நுட்புனர்கள் (Lab Technicians), 31.03.2021 முதல் 30.03.2022 வரையில் ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள M/s. SRI SAI SASTHA PROTECTION AGENCY நிறுவனத்திற்கு பணியாணை வழங்க அனுமதி.**

நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID - 19 ) உலகமெங்கும் 200 க்கும் மேற்பட்ட நாடுகளில் பரவியுள்ள நிலையில் உலக சுகாதார நிறுவனம் (WHO) உலகமெங்கும் அவசர நிலையினை (Public Health Emergency of International Concern (PHEIC)) பிரகடனப்படுத்தியுள்ளது. மேலும் கட்டுப்படுத்தக்கூடிய தொற்று நோயாகவும் (Controllable Pandemic) அறிவித்துள்ளது. நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை (P1) துறையின் அரசாணை (Ms) எண்.95 நாள்.13.03.2020ல் நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID-19) அறிவிக்கப்பட்ட நோயாக (Notified disease) அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசின் உத்திரவின்படி பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறை சார்பில் நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID - 19 ) பரவாமல் தடுக்க பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. படிப்படியாக குறைந்து வந்த இந்த நோயின் தாக்கம் தற்போது அதிகரிக்க தொடங்கியுள்ளது. இதன் காரணமாக பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் பெருநகர சென்னை மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதில் ஒரு பகுதியாக கொரோனா நோய் தடுப்பிற்கென மத்திய, மாநில அரசுகளின் வழிகாட்டுதல்களின்படி, மருத்துவர்கள்,. மருத்துவ சார் பணியாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு கோவிட்-19 தடுப்பூசி போடப்பட்டு வருகின்றது. பெருநகர சென்னை மாநகராட்சியில் 45 வயது முதல் 59 வயது முடிய இணை நோய் (Co-Morbid) உள்ள நோயாளிகளுக்கும், 60 வயதிற்கு மேல் அனைத்து பொதுமக்களுக்கும், கோவிட் 19 தடுப்பூசி இலவசமாக நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையங்கள் மற்றும் நகர்ப்புற சமுதாய நல மையங்களில் காலை 8.00 மணி முதல் மாலை 5.00 வரையிலும், தண்டையார்பேட்டை தொற்றுநோய் மருத்துவமனையில் காலை 9.00 மணி முதல் 5.00 மணி வரையிலும் போடப்பட்டு வருகின்றது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் தற்போதுள்ள ஆய்வக நுட்புனர்களை கொண்டு அன்றாட மாநகராட்சி மருத்துவமனைகளில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பணிக்கே தற்போதுள்ளவர்கள் போதுமானதாக உள்ளனர்.

மார்ச் 2020 முதல் ஜனவரி 2021 வரையில் கொரோனா தடுப்பு பணிக்கென வெவ்வேறு மாவட்டங்களில் இருந்து ஆய்வக நுட்புனர்களை பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரிந்து வந்தனர். இதனால் கொரோனா தடுப்பு பணிகள் பெருநகர சென்னை மாநகராட்சியில் சிறப்புடன் நடைபெற்றன. தற்போது மற்ற மாவட்டங்களில் கொரோனா நோய் அதிகரித்ததின் காரணமாக அவர்கள் அனைவரும் அவர்களின் மாவட்டத்திற்கு பணி மாற்றம் செய்யப்பட்டனர்.

தற்போது கோவிட் தொற்று நோயின் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில், இதற்கென பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளோடு கோவிட் மாதிரிகள் எடுக்கும் பணியினையும் தீவிரப்படுத்த வேண்டியுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் SARI/ILI (Influenza Like illness) பாதிக்கப்பட்டவர்களை RT-PCR முறையில் பரிசோதனை செய்யவும், மேலும் பரிசோதனை மையத்திற்கு வரும் நபர்களுக்கு கொரோனா மாதிரிகள் (Nasopharyngeal/ Oropharygeal) எடுக்கவும் ஆய்வக தொழிற்நுட்பனர்கள் மிகவும் அத்தியாவசியமாக தேவைப்படுகின்றனர்.

இப்பணிக்கென கூடுதலாக 100 ஆய்வக நுட்புனர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தி வழங்க 30.03.2021 நாளிட்ட கடிதத்தில் பெருநகர மருத்துவ அலுவலர் அவர்கள் கோரியுள்ளார்.

| Sno | Zone | Required Lab Technician |
|---|---|---|
| 1 | 1 | 2 |
| 2 | 2 | 2 |
| 3 | 3 | 2 |
| 4 | 4 | 10 |
| 5 | 5 | 10 |
| 6 | 6 | 7 |
| 7 | 7 | 6 |
| 8 | 8 | 10 |
| 9 | 9 | 10 |
| 10 | 10 | 10 |
| 11 | 11 | 5 |
| 12 | 12 | 5 |
| 13 | 13 | 10 |
| 14 | 14 | 5 |
| 15 | 15 | 5 |
| 16 | Ripon Building Dispensary | 1 |
| | | 100 |

எனவே, 100 ஆய்வக நுட்புனர்கள் கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கைகாக ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருட காலத்திற்கு பணியமர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இயக்குநர், பொதுசுகாதாரம் மற்றும் நோய்தடுப்புத்துறை அவர்களின் 22.04.2020 நாளிட்ட கடிதத்தில் மேற்கண்ட பணிக்கென ஆய்வக தொழிற்நுட்பனர்களின் மாத ஊதியம் ரூ.12,000/த்துடன் பயண படியாக ரூ.3,000 சேர்த்து மாதம் ரூ.15,000/-த்தில் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த தெரிவிக்கப்பட்டுள்ளது.

**Qualification of Staff**

| Sl.No | Category of Staff | Qualification |
|---|---|---|
| 1 | Lab Technician | Higher Secondary Course + Diploma in Lab Technician Course (2years course) Government recognized institutions |

ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்படும் பணியாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம், பணியாளர் இன்சூரன்ஸ், (Employee's State Insurance) மற்றும் பணியாளர் வருங்கால வைப்பு நிதி (Employee's Provident Fund), சரக்கு மற்றும் சேவைக்கட்டணம் (GST) மற்றும் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட வேண்டிய சேவைக்கட்டணம்(Administrative Charges) கீழ்க்கண்ட அளவில் வழங்கப்பட வேண்டியுள்ளது. சிறப்பு அதிகாரி/மன்றத் தீர்மான எண்.560/2020, நாள்.21.08.2020ல் ஒப்பந்ததாரருக்கு நிர்வாக கட்டணமாக 10% (Salary+ESI+EPF) (GST வரி நீங்கலாக) வழங்க அனுமதி அளித்துள்ளது.

| Employee's State Insurance (Salary upto Rs.21000) | | Employee's Provident Fund(Salary upto Rs.15000) | | GST |
|---|---|---|---|---|
| Employer Contribution in the salary | Employee Contribution in the salary | Employer Contribution in the salary | Employee Contribution in the salary | |
| 3.25% | 0.75% | 13% | 12.00% | 18% |

எனவே, இப்பணிக்கென கீழ்க்கண்ட அளவில் செலவினம் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

**Office Workable Rate**

| Sl. No | Name of the post | Salary per Month (Rs) | Allow ance | Total | EPF (13%) (Rs) | ESI (3.25 %) (Rs) | Admin Charges | GST (18%) (3+4+5+6) | Total (3+4+5+6+7) | Required Number | Total one year Rs (8x9x12) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 1 | Lab Technician | 12000 | 3000 | 15000 | 1560 | 390 | 1695 | 3356 | 22001 | 100 | 26401200 |

நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை (P1) துறையின் அரசாணை (Ms) எண்.95 நாள்.13.03.2020 மற்றும் நிதித்துறை கடிதம் எண்.74/JS(MA)/Finance(Salaries) /2020 நாள்.01.04.2020ன்படியும், கொரானா நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தங்கள் சட்டம் 1998 பிரிவு 16-a ல் அவசர காலங்களில் செயல்பட ஒப்பம் கோரும் அலுவலருக்கு ஒப்ப விதிகளில் தளர்வு செய்து ஒப்பம் கோருவதில் இருந்து விலக்களித்து நேரடியாக கொள்முதல் செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

Tamil Nadu Transparency in Tenders Act, 1998 Sec:16 :"Provision of Act not to apply in certain cases: The provisions of section 9 and 10 shall not apply to procurement."

(b) During natural calamities and emergencies declared by the Government;

எனவே, மேற்கண்ட சட்ட விதிகளின்படி, அவசர அவசியம் கருதியும், பொதுமக்களின் நலன் கருதியும், கோவிட் தொற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், கீழ்க்கண்ட நிறுவனங்களிடம் இருந்து விலைப்புள்ளிகள் கோரி பெறப்பட்டது.

| SNo | Name of the Agency |
|---|---|
| 1 | M/s. Sri Sai Sastha Protection Agency,<br>No.5B, 2nd Street, Sivasankarapuram, Thirumullaivoyal, Chennai-600062. |
| 2 | M/s. V.M. NARAYANA MURTHY,<br>No.6/27, Vysar Street, T.Nagar, Chennai-600017 |
| 3 | M/s.R.K.Enterprises,<br>No.380, T.H.Road, Thiruvottiyur, Chennai-600019 |

விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்க்கண்டவாறு உள்ளது.

| Sl.No | Name of the Agency | Salary per Month (Rs) | Allowance | Total | EPF (13%) (Rs) | ESI (3.25 %) (Rs) | Admin Charges | GST (18%) (3+4+5+6) | Total (3+4+5+6+7) | Required Number | Total one year Rs (8x9x12) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 1 | M/s.Sri Sai Sastha Protection Agency (L1) | 12000 | 3000 | 15000 | 1560 | 390 | 1695 | 3356 | 22001 | 100 | 26401200 |
| 2 | M/s. V.M. Narayana Murthy (L2) | 12000 | 3000 | 15000 | 1560 | 390 | 2034 | 3417 | 22401 | 100 | 26881200 |
| 3 | M/s. R.K.Enterprises (L3) | 12000 | 3000 | 15000 | 1560 | 390 | 2204 | 3448 | 22602 | 100 | 27122400 |

இதில் M/s. SRI SAI SASTHA PROTECTION AGENCY நிறுவனத்தினர் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ளனர். அவர்களிடம் விலைக்குறைப்பு தொடர்பான பேச்சு வார்த்தை நடத்தியதில் கீழ்க்கண்டவாறு விலைக்குறைப்பு செய்து அளித்துள்னர்.

**M/s.Sri Sai Sastha Protection Agency / After Negotiation**

| Sl. No | Name of the Agency | Salary per Month (Rs) | Allowance | Total | EPF (13%) (Rs) | ESI (3.25 %) (Rs) | Admin Charges | GST (18%) (3+4+5+6) | Total (3+4+5+6+7) | Required Number | Total one year Rs (8x9x12) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 1 | M/s.Sri Sai Sastha Protection Agency (L1) | 12000 | 3000 | 15000 | 1560 | 390 | 1000 | 3231 | 21181 | 100 | 25417200 |

ஒப்பந்ததாரர் அளித்துள்ள இறுதி ஒப்பத்தொகை ரூ. 2,54,17,200/- யானது அலுவலக மதிப்பீட்டு ரூ. 2,64,01,200/- உடன் ஒப்பிடுகையில் (-)3.73% (lower) குறைவாக உள்ளது.

எனவே, அவசர அவசியம் கருதியும், பொதுமக்களின் நலன் கருதியும், கொரோனா நோயின் தடுப்பு நடவடிக்கை பணிகளை மேற்கொள்ள ஆய்வகநுட்புனர்கள் அத்தியாவசியமாக தேவைப்படுவதாலும் M/s. SRI SAI SASTHA PROTECTION AGENCY நிறுவனத்தினரின் குறைந்த விலைப்புள்ளியினை ஏற்றுகொள்ளலாம்.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறையில் கொரோனா நோய் தடுப்பு பணி மேற்கொள்ளவும், 1 முதல் 15 வரையிலான மண்டலங்களில் செயல்பட உள்ள பரிசோதனை மையங்களில் (Covid Screening Centre) கொரோனா மாதிரிகள் எடுக்கவும் மற்றும் ஆய்வக பணிகள் மேற்கொள்ளவும், 100 எண்ணிக்கையில் ஆய்வக நுட்புனர்கள் (Lab Technicians), 31.03.2021 முதல் 30.03.2022 வரையில் ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் 1 முதல் 15 மண்டலங்களில் பணியமர்த்த குறைந்த விலைப்புள்ளி ரூ. 2,54,17,200/- (ரூபாய் இரண்டு கோடியே ஐம்பத்தி நான்கு லட்சத்து பதினேழாயிரத்து இருநூறு மட்டும்) அளித்துள்ள M/s. SRI SAI SASTHA PROTECTION AGENCY நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று பணியாணை வழங்க அனுமதியும்,

2. நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை (P1) துறையின் அரசாணை (Ms) எண்.95 நாள்.13.03.2020ல் நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID-19) அறிவிக்கப்பட்ட நோயாக (Notified disease) அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தங்கள் சட்டம் 1998 பிரிவு 16-aல் அவசர காலங்களில் செயல்பட ஒப்பம் கோரும் அலுவலருக்கு ஒப்ப விதிகளில் தளர்வு செய்து கொள்முதல் செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டதின் அடிப்படையில் ஒப்பம் கோருவதில் இருந்து விலக்களித்து நேரடியாக M/s. Sri Sai Sastha Protection Agency நிறுவனத்தின் மூலம் ஆய்வக நுட்புனர்கள் (Lab Technicians) ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த அனுமதிக்கும்,

3. இப்பணிக்கான நிர்வாக செலவினம் ரூ. 2,54,17,200/- (ரூபாய் இரண்டு கோடியே ஐம்பத்தி நான்கு லட்சத்து பதினேழாயிரத்து இருநூறு மட்டும்) மேற்கொள்ள அனுமதிக்கும்,

4. மேற்கண்ட நிறுவனத்தினரிடம் பிணை வைப்பு தொகையாக பெறுவதில் இருந்து விலக்கு அளிக்கவும் மற்றும் ஒப்பந்தம் செய்வதில் இருந்து விலக்கு அளிக்க அனுமதிக்கும்,

5. பணி முடிந்து சம்பந்தப்பட்ட மண்டல நல அலுவலர்கள்/ மண்டல மருத்துவ அலுவலர்களிடம் இருந்து வருகை பதிவு சான்று பெற்று பட்டி தீர்வு செய்ய அனுமதிக்கும்,

6. இச்செலவினம் பெருநகர சென்னை மாநகராட்சி கோவிட் நிதியின் கீழ் பிரிவு குறியீடு 30-31-01 கணக்கு குறியீடு 230-70-12-03 என்ற தலைப்பின் கீழ் மேற்கொள்ள அனுமதியும் மற்றும் நிதி ஒதுக்கீடு செய்ய அனுமதிக்கும்,

மேற்கண்ட 1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 30.03.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

*******

சு.து.ந.க.எண்.பி2 / 2515/ 2021

**தீர்மானஎண்.420/2021** **நாள்:20-04-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - பொது சுகாதாரத்துறை - நோவல் கொரோனா நோய் தடுப்பு பணி - பேரிடர் பணிகள் மேற்கொள்ளவும் - கோவிட் தடுப்பூசி பணிகளை தீவிரப்படுத்தவும், அவசர அவசியம் கருதி 200 கணினி பதிவாளர்களை 31.03.2021 முதல் 30.03.2022 வரை ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள M/s. S.R. Enterprises நிறுவனத்திற்கு பணியாணை வழங்க அனுமதி.**

நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID - 19) உலகமெங்கும் 200 க்கும் மேற்பட்ட நாடுகளில் பரவியுள்ள நிலையில் உலக சுகாதார நிறுவனம் (WHO) உலகமெங்கும் அவசர நிலையினை (Public Health Emergency of International Concern (PHEIC)) பிரகடனப்படுத்தியுள்ளது. மேலும் கட்டுப்படுத்தக்கூடிய தொற்று நோயாகவும் (Controllable Pandemic) அறிவித்துள்ளது. நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை (P1) துறையின் அரசாணை (Ms) எண்.95 நாள்.13.03.2020ல் நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID - 19 ) அறிவிக்கப்பட்ட நோயாக (Notified disease) அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசின் உத்திரவின்படி பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறை சார்பில் நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID - 19 ) பரவாமல் தடுக்க பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. படிப்படியாக குறைந்து வந்த இந்த நோயின் தாக்கம் தற்போது அதிகரிக்க தொடங்கியுள்ளது. இதன் காரணமாக பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் பெருநகர சென்னை மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதில் ஒரு பகுதியாக கொரோனா நோய் தடுப்பிற்கென மத்திய, மாநில அரசுகளின் வழிகாட்டுதல்களின்படி, மருத்துவர்கள்,. மருத்துவ சார் பணியாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு கோவிட்-19 தடுப்பூசி போடப்பட்டு வருகின்றது. பெருநகர சென்னை மாநகராட்சியில் 45 வயது முதல் 59 வயது முடிய இணை நோய் (Co-Morbid) உள்ள நோயாளிகளுக்கும், 60 வயதிற்கு மேல் அனைத்து பொதுமக்களுக்கும், கோவிட் 19 தடுப்பூசி இலவசமாக நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையங்கள் மற்றும் நகர்ப்புற சமுதாய நல மையங்களில் காலை 8.00 மணி முதல் மாலை 5.00 வரையிலும், தண்டையார்பேட்டை தொற்றுநோய் மருத்துவமனையில் காலை 9.00 மணி முதல் 5.00 மணி வரையிலும் போடப்பட்டு வருகின்றது.

தடுப்பூசி போடுபவர்களின் விவரங்கள் உடனுக்குடன் மத்திய அரசின் Web Portal லில் பதிவேற்றம் செய்ய வேண்டியுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் பொது சுகாதாரத்துறையின் சார்பாக ரிப்பன் கட்டடத்தில் மாநகர நல அலுவலர் அவர்களின் தலைமையில் ஒரு கட்டுப்பாட்டு அறை செயல்பட்டு வருகின்றது.

- இந்த கட்டுப்பாட்டு அறையில் தினந்தோறும் அரசிடம் இருந்து கோவிட் நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் விவரங்கள் பெறப்பட்டு அனைத்து மண்டலங்களுக்கும் அளிக்கப்படுகின்றன.
- மேலும் நோய் பாதித்தவர்களின் உடனிருப்பவர்கள் (Contact Tracing) விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன.
- பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் SARI/ILI (Influenza Like illness) பாதிக்கப்பட்டவர்கள் கண்டறியப்பட்டும் மற்றும் ஏற்கெனவே நோயினால் பாதிக்கப்பட்டவர்களுடன் தொடர்பில் இருப்பவர்களின் கொரோனா மாதிரிகள் (Nasopharyngeal/ Oropharygeal) எடுக்கப்பட்டு RT-PCR முறையில் பரிசோதனை செய்யபடுகின்றனர். இதற்கான முடிவுகள் 24 மணிநேரம் கழித்து உரிய ஆய்வகங்களில் இருந்து கட்டுப்பாட்டு அறைக்கு அளிக்கப்படுகின்றது. இந்த அறிக்கை மண்டலங்களுக்கு அளிக்கப்பட வேண்டியுள்ளது.

- மாநகராட்சி பகுதிகளில் எடுக்கப்படும் பரிசோதனை மாதிரிகள் State Public Health Lab மற்றும் King Institute க்கு அனுப்பப்படுகின்றன. இந்த பரிசோதனை கூடத்தில் அறிக்கைகள் அனுப்ப கணினி பதிவாளர்கள் தேவைப்படுகின்றனர்.

**சு.து.ந.க.எண். பி2 / 2515/ 2021**

- ஸ்டேன்லி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, ஓமந்தூரார் அரசு கல்லூரி மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, ராஜீவ் காந்தி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, ஆகிய மருத்துவமனைகளிலும் மாநகராட்சிப்பகுதிகளில் கோவிட் நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் விவரங்களை சேகரிக்க கணினி பதிவாளர்கள் தேவைப்படுகினறனர்.
- இயக்குநகரகம், பொதுசுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்புத்துறை மற்றும் கிங் இன்ஸ்டிடியூட் ஆகிய இடங்களிலும் தரவுகள் சேகரிக்க கணினி பதிவாளர்கள் தேவைப்படுகின்றனர்.
- கோவிட் நோயினால் ஏற்படும் இறப்புகள் குறித்த அறிக்கைகள் மருத்துவமனை மற்றும் மண்டலங்களில் இருந்து பெறப்பட வேண்டியுள்ளது. இதற்கெனவும் கணினி பதிவாளர்கள் பணியமர்த்தப்பட வேண்டியுள்ளது.
- பொது சுகாதாத்துறை அன்றி, மருத்துவ சேவைகள் துறை, பொதுத்துறை போன்ற இதர துறைகளிலும் கோவிட் நோய் கட்டுப்பாட்டு பணிகள் மேற்கொள்ள கணினி பதிவாளர்கள் தேவைப்படுகின்றனர்.

எனவே, இப்பணிக்கென சுமார் 200 கணினி பதிவாளர்கள் தேவைப்படும் என உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த கணினி பதிவாளர்களை தேவையின் அடிப்படையில் தேவைப்படும் இடங்களில் பணியமர்த்தலாம்.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தேவையான 200 கணினி பதிவாளர்களை 31.03.2021 முதல் 30.03.2022 வரையில் ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தலாம்.

2020-2021 ம் ஆண்டிற்கான குறைந்தபட்ட ஊதிய நிர்ணயத்தில், சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் 07.07.2020 நாளிட்ட செயல்முறை ஆணையில் கணினி பதிவாளர்களுக்கு தினக்கூலியாக ஒரு நாளைக்கு ரூ.448/- என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. எனவே, ஒரு மாத கால ஊதியம் 31x448= ரூ.13,888/-ஆகும். இதனடிப்படையிலேயே மாநகராட்சி மூலம் பணியமர்த்தப்படும் கணினி பதிவாளர்களுக்கு மாத ஊதியமாக ரூ.13,890/-ஆக நிர்ணயம் செய்து வழங்கலாம்.

| Sl.No | Category of Staff | Qualification |
|---|---|---|
| 1 | Data Entry Operator | Must have passed any Degree, typewriting in Tamil &, English (lower level) , Certificate Course in computer on Office Automation. |

ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்படும் பணியாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம், பணியாளர் இன்சூரன்ஸ், (Employee’s State Insurance) மற்றும் பணியாளர் வருங்கால வைப்பு நிதி (Employee’s Provident Fund), சரக்கு மற்றும் சேவைக்கட்டணம் (GST) மற்றும் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட வேண்டிய சேவைக்கட்டணம் (Administrative Charges) கீழ்க்கண்ட அளவில் வழங்கப்பட வேண்டியுள்ளது. சிறப்பு அதிகாரி/மன்றத் தீர்மான எண்.560/2020, நாள்.21.08.2020ல் ஒப்பந்ததாரருக்கு நிர்வாக கட்டணமாக 10% (Salary+ESI+EPF) (GST வரி நீங்கலாக) வழங்க அனுமதி அளித்துள்ளது.

| Employee’s State Insurance | | Employee’s Provident Fund | | GST |
|---|---|---|---|---|
| Employer Contribution in the salary | Employee Contribution in the salary | Employer Contribution in the salary | Employee Contribution in the salary | |
| 3.25% | 0.75% | 13% | 12.00% | 18% |

எனவே, இப்பணிக்கென கீழ்க்கண்ட அளவில் செலவினம் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

| Office workable rate | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| Sl. No | Name of the Post | Salary per Month (Rs) | EPF (13%) (Rs) | ESI (3.25 %) (Rs) | Admin Charges (10%) approximately | GST (18%) (1+2+3+4) | Total (1+2+3+4+5) | Required Number | Total 12 months Rs (6x7x12) |
| | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 1 | Data Entry Operators | 13890 | 1806 | 451 | 1615 | 3197 | 20959 | 200 | 50301600 |

நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை (P1) துறையின் அரசாணை (Ms) எண்.95 நாள்.13.03.2020 மற்றும் 3. நிதித்துறை கடிதம் எண்.74/JS(MA)/Finance(Salaries) /2020 நாள்.01.04.2020ன்படியும், கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தங்கள் சட்டம் 1998 பிரிவு 16-a ல் அவசர காலங்களில் செயல்பட ஒப்பம் கோரும் அலுவலருக்கு ஒப்ப விதிகளில் தளர்வு செய்து ஒப்பம் கோருவதில் இருந்து விலக்களித்து நேரடியாக கொள்முதல் செய்ய அதிகாரம் அளிக்கப்படுள்ளது.

Tamil Nadu Transparency in Tenders Act, 1998 Sec:16 :"Provision of Act not to apply in certain cases: The provisions of section 9 and 10 shall not apply to procurement."

(c) During natural calamities and emergencies declared by the Government;

எனவே, மேற்கண்ட சட்ட விதிகளின்படி, அவசர அவசியம் கருதியும், பொதுமக்களின் நலன் கருதியும், கோவிட் தொற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், கீழ்க்கண்ட நிறுவனங்களிடம் இருந்து விலைப்புள்ளிகள் கோரி பெறப்பட்டது.

| SNo | Name of the Agency |
|---|---|
| 1 | M/s. SR Enterprises ,<br>No.18 Old well Street ,Chennai-600 019. |
| 2 | M/s. JAY KAY TRANS<br>No.9/11,Valarmathi Nagar, Redhills Road, Kolathaur, Chennai-600004 |
| 3 | M/s. SB& Co.,<br>No1,ESI Nagar, Thiruvanchery, Aagarm Main Road, Selaiyur, Chennai-600073. |

விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்க்கண்டவாறு உள்ளது.

Data Entry Operators

| Sl. No | Name of the Post | Salary per Month (Rs) | EPF (13%) (Rs) | ESI (3.25 %) (Rs) | Admin Charges | GST (18%) (1+2+3+4) | Total (1+2+3+4+5) | Required Number | Total 12 months Rs (6x7x12) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 1 | M/s. SR Enterprises | 13890 | 1806 | 451 | 1695 | 3212 | 21054 | 200 | 50529600 |
| 2 | M/s. JAY KAY TRANS | 13890 | 1806 | 451 | 2116 | 3287 | 21550 | 200 | 51720000 |
| 3 | M/s. SB& Co. | 13890 | 1806 | 451 | 2261 | 3313 | 21721 | 200 | 52130400 |

இதில் M/s. SR Enterprises நிறுவனத்தினர் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ளனர். அவர்களிடம் விலைக்குறைப்பு தொடர்பான பேச்சு வார்த்தை நடத்தியதில் கீழ்க்கண்டவாறு விலைக்குறைப்பு செய்து அளித்துள்னர்.

**சு.து.ந.க.எண். பி2 / 2515/ 2021**

M/s. SR Enterprises (L1) After Negotiation

| Sl. No | Name of the Post | Salary per Month (Rs) | EPF (13% ) (Rs) | ESI (3.25 %) (Rs) | Admin Charges | GST (18%) (1+2+3+4) | Total (1+2+3+4+5) | Required Number | Total 12 months Rs (6x7x12) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 1 | Data Entry Operators | 13890 | 1806 | 451 | 1000 | 3086 | 20233 | 200 | 48559200 |

ஒப்பந்ததாரர் அளித்துள்ள இறுதி ஒப்பத்தொகை ரூ.4,85,59,200/- யானது அலுவலக மதிப்பீட்டுடன் ரூ. 5,03,01,600/- ஒப்பிடுகையில் (-)3.46% (lower) குறைவாக உள்ளது.

எனவே, அவசர அவசியம் கருதியும், பொதுமக்களின் நலன் கருதியும், கொரோனா நோயின் தடுப்பு நடவடிக்கை பணிகளை சிறப்புடன் மேற்கொள்ள கணினி பதிவாளர்கள் அத்தியாவசியமாக தேவைப்படுவதாலும் M/s. SR Enterprises நிறுவனத்தினரின் குறைந்த விலைப்புள்ளியினை ஏற்றுகொள்ளலாம்.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறையில் கொரோனா நோய் தடுப்பு பணி மற்றும் பேரிடர் பணிகள் மேற்கொள்ள, அவசர அவசியம் கருதி 200 கணினி பதிவாளர்களை 31.03.2021 முதல் 30.03.2022 வரையில் ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் தேவையின் அடிப்படையில் தேவைப்படும் இடங்களில் பணியமர்த்த குறைந்த விலைப்புள்ளி ரூ. 4,85,59,200/- (ரூபாய் நான்கு கோடியே எண்பத்தி ஐந்து லட்சத்து ஐம்பத்தி ஒன்பதாயிரத்து இருநூறு மட்டும்) அளித்துள்ள M/s. SR Enterprises நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்கவும் மற்றும் பணியாணை வழங்க அனுமதியும்,
2. நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை (P1) துறையின் அரசாணை (Ms) எண்.95 நாள்.13.03.2020ல் நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID - 19 ) அறிவிக்கப்பட்ட நோயாக (Notified disease) அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தங்கள் சட்டம் 1998 பிரிவு 16-a ல் அவசர காலங்களில் செயல்பட ஒப்பம் கோரும் அலுவலருக்கு ஒப்ப விதிகளில் தளர்வு செய்து கொள்முதல் செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டதின் அடிப்படையில் ஒப்பம் கோருவதில் இருந்து விலக்களித்து நேரடியாக M/s. SR Enterprises நிறுவனத்தின் மூலம் 200 கணினி பதிவாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த அனுமதிக்கும்,
3. இப்பணிக்கான நிர்வாக செலவினம் ரூ. 4,85,59,200/- (ரூபாய் நான்கு கோடியே எண்பத்தி ஐந்து லட்சத்து ஐம்பத்தி ஒன்பதாயிரத்து இருநூறு மட்டும்)மேற்கொள்ள அனுமதிக்கும்,
4. மேற்கண்ட நிறுவனத்தினரிடம் பிணை வைப்பு தொகையாக பெறுவதில் இருந்து விலக்கு அளிக்கவும் மற்றும் ஒப்பந்தம் செய்வதில் இருந்து விலக்கு அளிக்க அனுமதிக்கும்,
5. பணி முடிந்து சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் இருந்து வருகை பதிவு சான்று பெற்று பட்டி தீர்வு செய்ய அனுமதிக்கும்,
6. இச்செலவினம் பெருநகர சென்னை மாநகராட்சி கோவிட் நிதியின் கீழ் பிரிவு குறியீடு 30-31-01 கணக்கு குறியீடு 230-70-12-03 என்ற தலைப்பின் கீழ் மேற்கொள்ள அனுமதியும் மற்றும் நிதி ஒதுக்கீடு செய்ய அனுமதிக்கும்,

**சு.து.ந.க.எண். பி2 / 2515/ 2021**

மேற்கண்ட 1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய குறிப்பில்,

**இணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களின் 30.03.2021 நாளிட்ட மேற்குறிப்பில்,**

**" Sir, may be permitted for six months and work order and contract may be modified accordingly" என தெரிவித்துள்ளார்.**

ஆணையரது 30.03.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"இணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களின் மேற்குறிப்புடன், 1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*******

சு.து.நக.எண்.B2/ 2682/ 2020

தீர்மான எண்.421/2021 நாள்:20-04-2021

**பெருநகர சென்னை மாநகராட்சி - பொது சுகாதாரத்துறை - தண்டையார்பேட்டை தொற்றுநோய் மருத்துவமனைக்கு தேவையான மருத்துவ அலுவலர்கள் மற்றும் RT PCR LAB க்கு தேவையான மருத்துவ சார் பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் 01.07.2020 முதல் 31.12.2020 வரை 6 மாத காலத்திற்கு M/s. Janishree Corporate Sevices Pvt Ltd நிறுவனம் மூலம் பணியமர்த்தப்பட்டு, அதில் 8 மருத்துவ சார் பணியாளர்கள் பணியிடங்கள் மட்டும் (01.01.2021 முதல் 31.03.2021) 3 மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்யப்பட்டது - கொரோனா நோய் தடுப்பு பணிகள் தொடர்ந்து மேற்கொள்ள ஏதுவாக மேலும் 01.04.2021 முதல் 31.08.2021 வரை ஐந்து மாத காலத்திற்கு M/s. Janishree Corporate Sevices Pvt Ltd நிறுவனத்திற்கு பணி நீட்டிப்பு செய்ய அனுமதி.**

நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID - 19 ) உலகமெங்கும் 200 க்கும் மேற்பட்ட நாடுகளில் பரவியுள்ள நிலையில் உலக சுகாதார நிறுவனம் (WHO) உலகமெங்கும் அவசர நிலையினை (Public Health Emergency of International Concern (PHEIC)) பிரகடனப்படுத்தியுள்ளது. மேலும், கட்டுப்படுத்தக்கூடிய தொற்று நோயாகவும் (Controllable Pandemic) அறிவித்துள்ளது. நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை (P1) துறையின் அரசாணை (Ms) எண்.95 நாள்.13.03.2020ல் நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID-19) அறிவிக்கப்பட்ட நோயாக (Notified disease) அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசின் உத்திரவின்படி பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறை சார்பில் நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID - 19 ) பரவாமல் தடுக்க பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

சிறப்பு அதிகாரி/மன்றத்தீர்மான எண்.399/2020, நாள்:24.06.2020ல், தண்டையார்பேட்டை தொற்றுநோய் மருத்துவமனையில் செயல்பட்டு வரும் Covid Screening Centre, Covid Care Centre காய்ச்சல் பிரிவு மற்றும் RT PCR LAB க்கு தேவையான மருத்துவ அலுவலர்கள் மற்றும் மருத்துவ சார் பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் 01.07.2020 முதல் 31.12.2020 வரை ஆறு மாத காலத்திற்கு M/s. Janishree Corporate Sevices Pvt Ltd நிறுவனம் மூலம் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

| Sl.No | Category of Staff | Salary per Month (Rs) | EPF (13%) (Rs) | ESI (3.25%)(Rs) | Admin Charge | GST (18%) (1+2+3+4) | Total (1+2+3+4+5) | Required Staff | Total 6 months Rs (6x7x6) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 1 | Medical Officer | 40000 | 0 | 0 | 3000 | 7740 | 50740 | 5 | 1522200 |
| 2 | Staff Nurse | 14000 | 1820 | 455 | 1000 | 3110 | 20385 | 9 | 1100790 |
| 3 | Lab Technician | 15000 | 1950 | 488 | 1000 | 3319 | 21757 | 9 | 1174878 |
| 4 | Microbiologist | 30000 | 0 | 0 | 1000 | 5580 | 36580 | 1 | 219480 |
| 5 | Data Entry Operator | 10350 | 1346 | 336 | 1000 | 2346 | 15378 | 2 | 184536 |
| 6 | Lab Attender | 10000 | 1300 | 325 | 1000 | 2273 | 14898 | 3 | 268164 |
| 7 | Male ward Attender | 10000 | 1300 | 325 | 1000 | 2273 | 14898 | 15 | 1340820 |
| | | | | | | | | 44 | 58,10,868 |

ஆணையர் அவர்களின் 30.12.2020 நாளிட்ட ஆணையில், கீழ்க்கண்ட அட்டவணையில் தெரிவிக்கப்பட்ட 8 பணியாளர்கள் பணியிடங்கள் மட்டும் M/s. Janishree Corporate Sevices Pvt Ltd நிறுவனத்திற்கு (01.01.2021 முதல் 31.03.2021 வரை) மூன்று மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்து ஆணை பெறப்பட்டுள்ளது.

சு.து.ந.க.எண்.B2/ 2682/ 2020

| SNo | Name of the Post | Required Numbers |
|---|---|---|
| 1 | Lab Technicians | 4 |
| 2 | Micro Biologist | 1 |
| 3 | Data Entry Operator | 1 |
| 4 | Lab Attenter | 2 |
| | Total | 8 |

| Sl.No | Category of Staff | Salary per Month (Rs) | EPF (13%) (Rs) | ESI (3.25%)(Rs) | Admin Charge | GST (18%) (1+2+3+4) | Total (1+2+3+4+5) | Required Staff | Total 3 months Rs (6x7x3) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 1 | Lab Technician | 15000 | 1950 | 488 | 1000 | 3319 | 21757 | 4 | 261084 |
| 2 | Microbiologist | 30000 | 0 | 0 | 1000 | 5580 | 36580 | 1 | 109740 |
| 3 | Data Entry Operator | 10350 | 1346 | 336 | 1000 | 2346 | 15378 | 1 | 46134 |
| 4 | Lab Attender | 10000 | 1300 | 325 | 1000 | 2273 | 14898 | 2 | 89388 |
| | | | | | | | | 8 | 506346 |

தற்போது கோவிட் நோயின் தாக்கம் சற்றே அதிகரித்துள்ள நிலையில் தொற்றுநோய் மருத்துவமனையில் செயல்பட்டு வரும் RT PCR LAB க்கு மேற்கண்ட பணியாளர்கள் அத்தியாவசியமாக தேவைப்படுகின்றனர். எனவே, மேற்கண்ட 8 பணியிடங்களை மட்டும் மேலும் 5 மாத காலத்திற்கு பணிநீட்டிப்பு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| Sl.No | Category of Staff | Salary per Month (Rs) | EPF (13%) (Rs) | ESI (3.25%)(Rs) | Admin Charge | GST (18%) (1+2+3+4) | Total (1+2+3+4+5) | Required Staff | Total 5 months Rs (6x7x5) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 1 | Lab Technician | 15000 | 1950 | 488 | 1000 | 3319 | 21757 | 4 | 435140 |
| 2 | Microbiologist | 30000 | 0 | 0 | 1000 | 5580 | 36580 | 1 | 182900 |
| 3 | Data Entry Operator | 10350 | 1346 | 336 | 1000 | 2346 | 15378 | 1 | 76890 |
| 4 | Lab Attender | 10000 | 1300 | 325 | 1000 | 2273 | 14898 | 2 | 148980 |
| | | | | | | | | 8 | 8,43,910 |

The Tamil Nadu Transparency Tender Act-1998 Section 10 (2) விதியின்படி Tender Accepting Authority ஏற்கெனவே உள்ள ஒப்பந்தத்தின் மதிப்பில் 25% வரையில் பணி நீட்டிப்பு செய்ய அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| Total Contract Value | Rs. 58,10,868 |
| **25% of Contract value** | **Rs. 14,52,717** |
| 1 st Extension work value | Rs. 5,06,346 |
| 2nd Extension work value | Rs. 8,43,910 |
| **Total Extension work Value** | **Rs. 13,50,256** |

ஆணையர் அவர்களின் 30.12.2020 நாளிட்ட ஆணையில் பணி நீட்டிப்பு தொகை ரூ.5,06,346/-க்கு அனுமதி பெறப்பட்டுள்ளது. இரண்டாவதாக பணி நீட்டிப்பு செய்ய ரூ.8,43,910/ செலவினம் ஆகும் என கணக்கிடப்பட்டுள்ளது. மொத்த பணி நீட்டிப்பு தொகை ரூ. 13,50,256/- ஆகும்.

<u>சு.து.நகஎண்.*B2/ 2682/ 2020*</u>

ஒப்பந்த மதிப்பிற்கான 25% தொகை **ரூ. 14,52,717/-க்கு** பணி நீட்டிப்பு செய்யும் தொகை **ரூ. 13,50,256/- ஆனது (-7.05%) குறைவாக** உள்ளது.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சியில் தண்டையார்பேட்டை தொற்றுநோய் மருத்துவமனைக்கு தேவையான மருத்துவ அலுவலர்கள் மற்றும் RT PCR LAB க்கு தேவையான மருத்துவ சார் பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் 01.07.2020 முதல் 31.12.2020 வரை 6 மாத காலத்திற்கு M/s. Janishree Corporate Sevices Pvt Ltd நிறுவனம் மூலம் பணியமர்த்தப்பட்டு, மேலும் 8 பணியாளர்களுக்கான பணியிடங்களை மட்டும் (01.01.2021 முதல் 31.03.2021) 3 மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்யப்பட்டது, கொரோனா நோய் தடுப்பு பணிகள் தொடர்ந்து மேற்கொள்ள ஏதுவாக, மேற்கண்ட 8 பணியாளர்களை மட்டும் M/s. Janishree Corporate Sevices Pvt Ltd நிறுவனத்திற்கு 01.04.2021 முதல் 31.08.2021 வரையில் 5 மாத காலத்திற்கு பணிநீட்டிப்பு செய்ய அனுமதியும்,
2. ஏற்கெனவே 8 பணியாளர்களுக்கான பணியிடங்களை மட்டும் (01.01.2021 முதல் 31.03.2021) 3 மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்யப்பட்டத்திற்கு பின்னேற்பு அனுமதியும் ,
3. இப்பணிக்கான நிர்வாக செலவினம் ரூ.13,50,256/- (ரூபாய் பதிமூன்று லட்சத்து ஐம்பதாயிரத்து இருநூற்றி ஐம்பத்தி ஆறு மட்டும்) மேற்கொள்ள அனுமதியும்,
4. மேற்கண்ட நிறுவனத்தினரிடம் பிணை வைப்பு தொகையாக பெறுவதில் இருந்தும் மற்றும் ஒப்பந்தம் செய்வதில் இருந்தும் விலக்கு அளிக்க அனுமதியும்,
5. இச்செலவினம் மாநகராட்சி நிதியின் கீழ் பிரிவு குறியீடு 30-31-01 கணக்கு குறியீடு 230-70-12-03 என்ற தலைப்பின் கீழ் மேற்கொள்ள அனுமதியும்,

மேற்கண்ட *1* முதல் *5* வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 29.03.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“*1* முதல் *5* வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

*******

**சு.து.ந.க.எண். பி2 / 2701 / 2021**

**தீர்மானஎண்.422/2021** **நாள்:20-04-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - பொது சுகாதாரத்துறை - நோவல் கொரோனா நோய் தடுப்பு பணி - பேரிடர் பணிகள் மேற்கொள்ளவும் - கோவிட் தடுப்பூசி பணிகளை தீவிரப்படுத்தவும், அவசர அவசியம் கருதி 1 முதல் 15 வரையிலான மண்டலங்களில் 200 செவிலியர்களை ரூ.14,000/ மாத ஊதியத்தில் 10.04.2021 முதல் 09.04.2022 வரையில் ஒரு வருட காலத்திற்கு சென்னை மாநகர நல சங்கம் மூலமாக ஏற்கெனவே உள்ள விதிகளின்படி ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தியதற்கு பின்னேற்பு அனுமதி.**

நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID - 19 ) உலகமெங்கும் பரவியுள்ள நிலையில் உலக சுகாதார நிறுவனம் (WHO) உலகமெங்கும் அவசர நிலையினை (Public Health Emergency of International Concern (PHEIC)) பிரகடனப்படுத்தியுள்ளது. மேலும் கட்டுப்படுத்தக்கூடிய தொற்று நோயாகவும் (Controllable Pandemic) அறிவித்துள்ளது. நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை (P1) துறையின் அரசாணை (Ms) எண்.95 நாள்.13.03.2020ல் நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID - 19 ) அறிவிக்கப்பட்ட நோயாக (Notified disease) அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசின் உத்திரவின்படி பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறை சார்பில் நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID - 19 ) பரவாமல் தடுக்க பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சலின் தாக்கம் தற்போது அதிகரிக்க தொடங்கியுள்ளது. இதன் காரணமாக பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் பெருநகர சென்னை மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதில் ஒரு பகுதியாக கொரோனா நோய் தடுப்பிற்கென மத்திய, மாநில அரசுகளின் வழிகாட்டுதல்களின்படி, மருத்துவர்கள்,. மருத்துவ சார் பணியாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு கோவிட்-19 தடுப்பூசி போடப்பட்டு வருகின்றது. பெருநகர சென்னை மாநகராட்சியில் 45 வயதிற்கு மேல் அனைத்து பொதுமக்களுக்கும், கோவிட் 19 தடுப்பூசி இலவசமாக நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையங்கள் மற்றும் , நகர்ப்புற சமுதாய நல மையங்களில் காலை 8.00 மணி முதல் மாலை 5.00 வரையிலும், தண்டையார்பேட்டை தொற்றுநோய் மருத்துவமனையில் காலை 8.00 மணி முதல் 5.00 மணி வரையிலும் போடப்பட்டு வருகின்றது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் தற்போதுள்ள செவிலியர்களை கொண்டு அன்றாட மருத்துவ சேவைகள் பொதுமக்களுக்கு அளிக்கப்பட்டு வருகின்றன. இப்பணிக்கே இவர்கள் போதுமானதாக உள்ளனர்.

மார்ச் 2020 முதல் பிப்ரவரி 2021 வரையில் கொரோனா தடுப்பு பணிக்கென வெவ்வேறு மாவட்டங்களில் இருந்து செவிலியர்கள் பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரிந்து வந்தனர். இதனால் கொரோனா தடுப்பு பணிகள் பெருநகர சென்னை மாநகராட்சியில் சிறப்புடன் நடைபெற்றன. தற்போது மற்ற மாவட்டங்களில் கொரோனா நோய் அதிகரித்ததின் காரணமாக அவர்கள் அனைவரும் அவர்களின் மாவட்டத்திற்கு பணி மாற்றம் செய்யப்பட்டனர்.

தற்போது கோவிட் தொற்று நோயின் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில், இதற்கென பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளோடு கோவிட் தடுப்பூசி போடும் பணியினையும் தீவிரப்படுத்த வேண்டியுள்ளது. மேலும், காய்ச்சல் மருத்துவ முகாம்கள் 1 முதல் 15 மண்டலங்களில் நடத்த வேண்டியுள்ளது. இப்பணிக்கென கூடுதலாக 200 செவிலியர்கள் தேவைப்படுகின்றனர்.

பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறை வாயிலாக செயல்பட்டு வரும் 200 மினி கிளினிக்களுக்கு தேவையான 200 செவிலியர்கள் தேர்வு செய்ய நேர்காணல் நடத்தப்பட்டு 142 செவிலியர்கள் தேர்வு செய்யப்பட்டனர். ஆனால் தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் அறிவிக்கப்பட்ட நிலையில் இவர்களுக்கு பணியாணை வழங்கப்படவில்லை.

**சு.து.ந.க.எண். பி2 / 2701 / 2021**

தற்போது உடனடியாக செவிலியர்களை நேர்காணல் மூலம் நேரடி நியமனம் செய்ய இயலாத காரணத்தினால், கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள அவசர அவசியம் கருதி பெருநகர சென்னை மாநகராட்சி, மினி கிளினிக்களுக்கு தேர்வு செய்யப்பட்ட 142 செவிலியர்களை பணியமர்த்தவும், மீதமுள்ள 58 செவிலியர்களை பொதுசுகாதாரத்துறையில் செவிலியர் பணிக்கு பெறப்பட்ட விண்ணப்பங்களை கொண்டு நேர்காணல் மூலம் தேர்வு செய்து பணியமர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**Qualification of Staff**

| Sl.No | Category of Staff | Qualification |
|---|---|---|
| 1 | Staff Nurse | Higher Secondary Course +B.sc. Nursing (4 years) or Diploma in Nursing or Diploma in General Nursing and Midwife (3 years) (Registration with Nursing council) |

மேலும், தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்டத்தில் செவிலியர்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்ட மாத ஊதியம் ரூ.14000/ த்தினையே மேற்கண்ட செவிலியர்களுக்கும் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்படும் பணியாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம்,பணியாளர் இன்சூரன்ஸ், (Employee's State Insurance) மற்றும் பணியாளர் வருங்கால வைப்பு நிதி (Employee's Provident Fund), கீழ்க்கண்ட அளவில் வழங்கப்பட வேண்டியுள்ளது.

| Employee's State Insurance | | Employee's Provident Fund | |
|---|---|---|---|
| Employer Contribution in the salary | Employee Contribution in the salary | Employer Contribution in the salary | Employee Contribution in the salary |
| 3.25% | 0.75% | 13% | 12.00% |

எனவே, இப்பணிக்கென கீழ்க்கண்ட அளவில் செலவினம் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

| Sl.No | Name of the Post | Salary per Month (Rs) | EPF (13%) (Rs) | ESI (3.25 %) (Rs) | Total (1+2+3) | Required Number | Total 12 months Rs (4x5x12) |
|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | Staff Nurse | 14000 | 1820 | 455 | 16275 | 200 | 3,90,60,000 |

நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை (P1) துறையின் அரசாணை (Ms) எண்.95 நாள்.13.03.2020 மற்றும் நிதித்துறை கடிதம் எண்.74/JS(MA)/Finance(Salaries) /2020 நாள்.01.04.2020ன்படியும், கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தங்கள் சட்டம் 1998 பிரிவு 16-a ல் அவசர காலங்களில் செயல்பட ஒப்பம் கோரும் அலுவலருக்கு ஒப்ப விதிகளில் தளர்வு செய்து ஒப்பம் கோருவதில் இருந்து விலக்களித்து நேரடியாக கொள்முதல் செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

Tamil Nadu Transparency in Tenders Act, 1998 Sec:16 :"Provision of Act not to apply in certain cases: The provisions of section 9 and 10 shall not apply to procurement."

(d) During natural calamities and emergencies declared by the Government;

**சு.து.ந.க.எண். பி2 / 2701 / 2021**

சென்னை மாநகர நல சங்கம் (Chennai City Urban Health Mission) 2015 பதிவு செய்யப்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சியில் தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்டங்கள் அனைத்தும் இச்சங்கத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதில் மாநகர நல அலுவலர், உறுப்பினர்/செயலர் ஆக உள்ளார். இச்சங்க விதிமுறைகளில் உறுப்பினர்/செயலர்க்கு ஒப்பந்தங்கள் மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. (Authorize the Member Secretary to execute on behalf of the Society as it may deem fit in the conduct of the business of the Society). இதனடிப்படையில் ஒப்பந்தத்தில் தேர்ந்தெடுக்கப்படும் செவிலியர்களை உறுப்பினர்/செயலர், சென்னை மாநகர நல சங்கம் அவர்களுடன் ஆணையர் அவர்களின் ஆணை பெற்று ஒப்பம் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறையில் நோவல் கொரோனா நோய் தடுப்பு பணி மற்றும் கோவிட் தடுப்பூசி பணிகளை தீவிரப்படுத்தவும், சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தவும் மற்றும் அவசர அவசியம் கருதி பொதுமக்களுக்கு மருத்துவ சேவைகள் அளிக்க 200 செவிலியர்களை ரூ.14,000/ மாத ஊதியத்தில் ஒப்பந்த அடிப்படையில் 1 முதல் 15 மண்டலங்களில் 10.04.2021 முதல் 09.04.2022 வரை ஒரு வருட காலத்திற்கு சென்னை மாநகர நல சங்கம் மூலமாக ஏற்கெனவே உள்ள விதிகளின்படி நேரடி நியமனம் மூலம் பணியமர்த்தியதற்கு பின்னேற்பு அனுமதிக்கும்,

2. தற்போது உடனடியாக செவிலியர்களை நேர்காணல் மூலம் நேரடி நியமனம் செய்ய இயலாத காரணத்தினால், கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள அவசர அவசியம் கருதி பெருநகர சென்னை மாநகராட்சி, மினி கிளினிக்களுக்கு தேர்வு செய்யப்பட்ட 142 செவிலியர்களை பணியமர்த்தவும், மீதமுள்ள 58 செவிலியர்களை பொதுசுகாதாரத்துறையில் செவிலியர் பணிக்கு பெறப்பட்ட விண்ணப்பங்களை கொண்டு நேர்காணல் மூலம் தேர்வு செய்து பணியமர்த்த அனுமதிக்கும்,

3. நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை (P1) துறையின் அரசாணை (Ms) எண்.95 நாள்.13.03.2020ல் நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID-19) அறிவிக்கப்பட்ட நோயாக (Notified disease) அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தங்கள் சட்டம் 1998 பிரிவு 16-aல் அவசர காலங்களில் செயல்பட ஒப்பம் கோரும் அலுவலருக்கு ஒப்ப விதிகளில் தளர்வு செய்து நேரடியாக கொள்முதல் செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டதின் அடிப்படையில் 10.04.2021 முதல் 09.04.2022 வரையில் ஒரு வருட காலத்திற்கு சென்னை மாநகர நல சங்கம் மூலமாக ஏற்கெனவே உள்ள விதிகளின்படி நேரடியாக 200 செவிலியர்களை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த அனுமதிக்கும்,

4. இப்பணிக்கான நிர்வாக செலவினம் ரூ.3,90,60,000/- (ரூபாய் மூன்று கோடியே தொண்ணூறு லட்சத்து அறுபதாயிரம் மட்டும்) மேற்கொள்ள அனுமதிக்கும்,

5. சென்னை மாநகர நல சங்க விதிமுறைகளின்படி உறுப்பினர்/ செயலர் அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, ஒப்பந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படும் செவிலியர்களுடன் ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்தம் மேற்கொள்ளவும்,

6. சம்பந்தபட்ட மண்டல நல அலுவலர்களின் வருகை சான்றின்படி மாத ஊதியம் வழங்க அனுமதியும்,

7. இச்செலவினம் பெருநகர சென்னை மாநகராட்சி கோவிட் நிதியின் கீழ் பிரிவு குறியீடு 30-31-01 கணக்கு குறியீடு 230-70-12-03 என்ற தலைப்பின் கீழ் மேற்கொள்ள அனுமதியும் மற்றும் நிதி ஒதுக்கீடு செய்ய அனுமதிக்கும்,

மேற்கண்ட 1 முதல் 7 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் பின்னேற்பு அனுமதி கோரிய ஆணையரது 12.04.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“1 முதல் 7 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் பின்னேற்பு அனுமதி அளிக்கப்பட்டது”.**

*******

மக.கு.ந.க.எண்.அ8/1075/2018

**தீர்மானஎண்.423/2021** **நாள்:20-04-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மத்திய கணக்கு குழுமம் - பணியமைப்பு - கடன்கள் மற்றும் முன்பணங்கள் - வீடுகட்டும் முன்பணம் - அரசுப் பணியாளர்கள் வீடுகட்டும் முன்பணம் பெறுவதற்கு பணிபூர்த்தி செய்வது 6 ஆண்டுகளிலிருந்து 4 ஆண்டுகளாக குறைக்கப்பட்டு வெளியிடப்பட்ட அராசாணையினை பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் பணியளார்களுக்கு நீட்டித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளதை பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த அனுமதி.**

அரசாணை (நிலை) எண்.46, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் (எச்.பி.எ.) துறை, நாள்.10.04.2018ல் வீடுகட்டும் முன்பணம் பெறுவதற்கு அரசு ஊழியர்கள் மற்றும் அனைத்து இந்திய பணி அலுவலர்கள் (All Indian Service Officers) விண்ணப்ப நாளில் 4 ஆண்டுகள் முறையாக பணிப்புரிந்திருக்க வேண்டும் மற்றும் தகுதிகான் பருவம் பூர்த்தி செய்திருக்க வேண்டும் என ஆணையிடப்பட்டுள்ளது. இவ்வரசாணையில் ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை-600 003 எனக் குறிப்பிடப்படாமல் வெளியிடப்பட்டுள்ளது.

ஆதலால் பெருநகர சென்னை மாநகராட்சியால் அரசிற்கு அனுப்பிய 14/07/2018 மற்றும் 26/01/2019 நாளிட்ட கடிதத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி பணியாளர்களும் அரசாணை (நிலை) எண்.46, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (எச்.பி.எ.) துறை, நாள்: 10.04.2018-ல் வழங்கப்பட்டுள்ள சலுகைகளை பெற்று பயன்பெறும் வகையில் வீடுகட்டும் முன்பணம் பெறுவதற்கு பணிபூர்த்தி செய்வது 6 ஆண்டுகளிலிருந்து 4 ஆண்டுகளாக குறைக்கப்பட்டு வெளியிடப்பட்ட அரசாணையை பெருநகர சென்னை மாநகராட்சிக்கும் பொருந்தும் வகையில் இவ்வரசாணையை அமல்படுத்துவதற்கு ஏதுவாக ஆணை வழங்கும்படி அரசை கேட்டுக்கொள்ளப்பட்டது.

> " அரசாணை (நிலை) எண்.75, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந-3) துறை, நாள். 31.07.2020-ல் அரசாணை (நிலை) எண்.46, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (எச்.பி.எ.) துறை, நாள்: 10.04.2018-ல் வீடு கட்டும் முன்பணம் பெறுவதற்கு அரசு ஊழியர்கள் மற்றும் அணைத்து இந்திய பணி அலுவலர்கள் (All Indian Service Officers) விண்ணப்ப நாளில் 4 ஆண்டுகள் முறையாக பணிப்புரிந்திருக்க வேண்டும் மற்றும் தகுதிகாண் பருவம் பூர்த்தி செய்திருக்க வேண்டும் என ஆணையிடப்பட்டுள்ளது.
>
> 2. பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் கடிதம் ம.க.கு.ந.க.எண்.அ8/1075/2018, நாள் 26.01.2019ல் பின்வரும் விவரங்களை அரசிற்கு தெரிவிக்கப்பட்டு ஆணை வேண்டப்பட்டது.:-
>
> - அரசுப் பணியாளர்களுக்கு வீடுகட்டும் முன்பணம் வழங்குவதற்கு அரசால் வெளியிடப்படும் அரசாணைகள், சென்னை மாநகராட்சியால் அமல்படுத்தப்பட்டு, 6 ஆண்டுகள் முறையாக பணிபூர்த்தி செய்திருக்க வேண்டும் என்ற வீடுகட்டும் முன்பண விதிகளின்படி, சென்னை மாநகராட்சி பணியாளர்களுக்கு வழங்கப்படுகிறது..
> - தற்போது, அரசாணை (நிலை) எண்.46, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை, நாள்:10.04.2018-ல் வீடுகட்டும் முன்பணம் பெறுவதற்கு அரசு ஊழியர்கள் மற்றும் அனைத்து இந்திய பணி அலுவலர்கள் (All Indian Service Officers) விண்ணப்ப நாளில் 4 ஆண்டுகள் முறையாக பணிபுரிந்திருக்க வேண்டும் மற்றும் தகுதிகாண் பருவம் பூர்த்தி செய்திருக்க வேண்டும் என ஆணையிடப்பட்டுள்ளது. ஆனால்,

இவ்வரசாணையில் மேற்படி சலுகைகள் சென்னை மாநகராட்சி பணியாளர்களுக்கும் பொருந்தும் என ஆணை ஏதும் வழங்கப்படவில்லை.

- பெருநகர சென்னை மாநகராட்சி, மத்திய கணக்கு குழுமத்தில் பணியாற்றும் திருமதி S,ஷர்மிளா மற்றும் உதவியாளர்கள் தங்களது 06.06.2018-ஆம் நாளிட்ட கடிதத்தில், தாங்கள் மத்திய கணக்கு குழுமத்தில் பணியமர்த்தப்பட்டு 4 ஆண்டுகள் பணி பூர்த்தி செய்யப்பட்டுள்ளதால், மேற்கண்ட அரசாணையின்படி, வீடுகட்டும் முன்பணம் பெறுவதற்கு ஆவண செய்யும்படி கேட்டுக்கொண்டுள்ளனர்.
- அரசுப் பணியாளர்களுக்கு வீடுகட்டும் முன்பணம் வழங்குவதை முறைபடுத்தும் மாநில விதிகளின் (G.O.(Ms). No.1546, Industries Labour and Co-operation (Housing), dated 23.03.1960 and (G.O.(Ms). No.690, Housing and Urban Development, Dated: 29.08.1984) அடிப்படையில், 6 ஆண்டுகள் பணிபூர்த்தி செய்த சென்னை மாநகராட்சி பணியாளர்களுக்கு வீடுகட்டும் முன்பணம் வழங்கப்பட்டு வருகிறது. ஆனால், இது குறித்து அரசின் ஆணை ஏதும் பெறப்படவில்லை.
- வீடுகட்டும் முன்பணம் மற்றும் கடன் பெறும் சலுகையை பொருத்தவரை அரசால் வெளியிடப்படும் அரசாணைகளை மன்ற தீர்மானம் பெறப்பட்டதன் அடிப்படையில், பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்தப்படுகிறது. தற்போது அரசு அரசாணைகளில் ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை – 600 003 என குறிப்பிடாமல் வெளியிடப்படும் அரசாணைகள் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு பொருந்துமா என வினா எழுப்பப்பட்டு, அரசின் தெளிவுரை பெற்று இதனை நடைமுறைபடுத்தும்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

3, எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி பணியாளர்களும் இச்சலுகைகளை பெற்று பயன்பெறும் வகையில் வீடுகட்டும் முன்பணம் பெறுவதற்கு பணிபூர்த்தி செய்வது 6 ஆண்டுகளிலிருந்து 4 ஆண்டுகளாக குறைக்கப்பட்டு வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண்.46, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (எச்.பி.எ.) துறை, நாள்.10.04.2018ஐ பெருநகர சென்னை மாநகராட்சிக்கும் பொருந்தும் வகையில், இவ்வரசாணையை அமல்படுத்துவதற்கு ஆணை வழங்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டார்.

4. நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.38742/2009 எல்ஏ1, நாள் 05.09.2019ல் அரசுப் பணியாளர்களுக்கு அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள், நகராட்சி மற்றும் மாநகராட்சி பணியாளர்களுக்கும் நீட்டித்து அரசாணை வழங்கப்பட்டு வருகிறது என்றும், அதன் அடிப்படையில் தகுதியுள்ள அரசு ஊழியர்களுக்கு வீடு கட்டும் முன்பணம் பெறுவதற்கான பணிக்காலத்தகுதியினை 6 வருடங்களிலிருந்து 4 வருடங்களாக குறைத்தது போல நகராட்சி மற்றும் மாநகராட்சி பணியாளர்களுக்கும் பணிக்காலத்தகுதியினை 6 வருடங்களிலிருந்து 4 வருடங்களாக குறைத்து ஆணை வழங்குமாறு ம் அரசினை கேட்டுக் கொள்ளப்பட்டது.

<u>ம.க.கு.ந.க.எண்.அ8/1075/2018</u>

5.மேற்படி பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயற்குறிப்பு அரசால் விரிவாக பரிசீலிக்கப்பட்டது. பரிசீலனைக்குபின், வீடுகட்டும் முன்பணம் பெறுவதற்கு 6 ஆண்டுகள் முறையாக பணிபுரிந்திருக்க வேண்டும் என்பதை 4 ஆண்டுகளாக குறைக்கப்பட்டு வெளியிடப்பட்ட அரசாணை(நிலை) எண்.46, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (எச்.பி.எ.) துறை, நாள்.10.04.2018-ஐ பெருநகர சென்னை மாநகராட்சி, மற்ற மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கும் நீட்டிக்கலாம் என முடிவு செய்து, அரசு ஆணையிட்டுள்ளது."

6) ஆகையால், அரசாணை (நிலை) எண்.46, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் (எச்.பி.எ.) துறை, நாள்.10.04.2018;ல் வழங்கியுள்ள ஆணையினை வீடுகட்டும் முன்பணம் பெறும் பெருநகர சென்னை மாநகராட்சி பணியாளர்களுக்கும் பயன் பெறும் பொருட்டு நீட்டித்து வழங்கியுள்ள அரசாணை (நிலை) எண்.75, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந-3) துறை, நாள். 31.07.2020-ல் வழங்கியுள்ள பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் ஊழியர்கள் வீடுகட்டும் முன்பணம் பெறுவதற்கு 6 ஆண்டுகள் முறையாக பணிபுரிந்திருக்க வேண்டும் என்பதை 4 ஆண்டுகளாக குறைக்கப்பட்டு மற்றும் தகுதிகாண் பருவம் பூர்த்தி செய்திருக்க வேண்டும் என்ற அரசு ஆணையினை பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைபடுத்துவதற்கு சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 19.04.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"அரசாணையை பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*******

**சு.து.ந.க.எண்.பி2/ 889/2021**

**தீர்மானஎண்.424/2021** **நாள்:21-04-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - பொது சுகாதாரத்துறை வாயிலாக செயல்பட்டு வரும் 200 மினி கிளினிக்குகளுக்கு தேவையான 200 மருத்துவ அலுவலர்களை தேர்வு செய்ய நேர்காணல் நடத்தப்பட்டு மதிப்பெண்கள் மற்றும் இனசுழற்சி அடிப்படையில் 198 மருத்துவ அலுவலர்கள் தேர்வு செய்யப்பட்டனர் - இதில் 42 மருத்துவ அலுவலர்கள் பணியில் சேராமலும் பணி துறப்பும் செய்துள்ளனர்- காலியாக உள்ள 42 பணியிடங்களையும் இன சுழற்சியின் தொடர்ச்சியாக அடுத்த இடத்தில் உள்ள மருத்துவ அலுவலர்களை மதிப்பெண்கள் அடிப்படையில் தேர்வு செய்து ஓராண்டு காலத்திற்கு சென்னை மாநகர நல சங்கம் மூலமாக ஏற்கெனவே உள்ள விதிகளின்படி நேரடியாக ஓராண்டு காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த அனுமதி.**

நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை (N2) துறையின் அரசாணை (Ms) எண்.530 நாள்.05.12.2020ன்படி, தமிழகத்தில் உள்ள நகர்ப்புற மற்றும் கிராமப்புறங்களில் வசித்து வரும் ஏழை எளிய மக்களுக்கு அடிப்படை சுகாதார கவனிப்பை மிக எளிய வழியில் மருத்துவ சேவைகளை வழங்கிட ஏதுவாக தமிழகம் முழுவதும் 2000 மினி கிளினிக்குகளை வாரத்தில் ஆறு நாட்கள் நகர்ப்புறங்களில் (காலை 8.00மணி முதல் 12.00மணி வரை மற்றும் மாலை 4.00மணி முதல் 8.00மணி வரையில்) (சனிக்கிழமை வார விடுமுறை) திறந்து செயல்படுத்த உத்திரவிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட 200 கோட்டங்களில் தலா ஒன்று வீதம் இதில் வார்டுக்கு ஒன்று வீதம் 200 மினி கிளினிக்குகள் பெருநகர சென்னை மாநகராட்சியில் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு 191 மினி கிளினிக்குகள் செயல்பட்டு வருகின்றன.

நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை (N2) துறையின் அரசாணை (Ms) எண்.588 நாள்.30.12.2020ன்படி, இந்த கிளினிக்குகளுக்கு தேவையான மருத்துவ அலுவலர்களை மாதம் ரூ.60,000/ (ரூபாய் அறுபதாயிரம் மட்டும்) ஊதியத்தில், சென்னை மாநகர நல சங்கம் மூலமாக நேரடி நியமனம் ( *Walk in interview)* மூலம் ஓராண்டு காலத்திற்கு தற்காலிகமாக பணியமர்த்த அனுமதி அளிக்கப்பட்டதின்பேரில் 198 மருத்துவ அலுவலர்கள் தேர்வு செய்யப்பட்டு சிறப்பு அதிகாரி/மன்றத்தீர்மான எண்.370/2021 நாள்.26.02.2021ன்படி பணியமர்த்த ஆணை பெறப்பட்டு பணியாணைகள் வழங்கப்பட்டன.

இந்த 198 மருத்துவ அலுவலர்களில் 23 மருத்துவ அலுவலர்கள் பணியாணை பெற்றும் பணியில் சேரவில்லை. 3 மருத்துவ அலுவலர்கள் பணிதுறப்பு செய்துவிட்டனர். மேலும் 19 மருத்துவ அலுவலர்கள் பொதுசுகாதாரத்துறை தலைமையிடத்தில் பணியில் சேர்ந்து அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட மினிகிளினிக்குகளுக்கு பணிக்கு செல்லவில்லை.

**அட்டவணை எண்.1**

**Medical Officers who are not joined in duty after getting the order**

| S.No | Name of the Medical Officer | Community |
|---|---|---|
| 1 | S. John Alfred Chandran | BC |
| 2 | E. Priyanka | NA |
| 3 | A. Shrividhya | BC |
| 4 | Poornima Sekar | NA |
| 5 | Keerthana Ayyapan | SCA |
| 6 | A. Anushka | BC |
| 7 | T. Nivetha | SC |
| 8 | S. Naveena | SC |
| 9 | Leka Sree Anbarasan | MBC |
| 10 | B.N. Murukesan | BC |
| 11 | M. Geethanjali | MBC |
| 12 | S. Ishwariya@ Sankari | BC |
| 13 | Vigneswaran | SC |
| 14 | M. Jeyamalar | SC |
| 15 | S. Sivaranjini | BC |

| | | |
|---|---|---|
| 16 | A. Karthikniresh | SC |
| 17 | G. Hemalatha | MBC |
| 18 | V.P Jayanth | SC |
| 19 | Gopinath Shanmugamyadav | BC |
| 20 | M. Deebika | BC |
| 21 | V. Dinesh | SC |
| 22 | Priya Roopan Mohan | SC |
| 23 | Ganingston | BC |

**அட்டவணை எண்.2**

**Resigned Medical Officers List**

| S.No | Name of the Medical Officer | Community |
|---|---|---|
| 1 | A Nivetha | BC |
| 2 | Subhashini raja jegadeesan | SC |
| 3 | E. Karthick | SC |

**அட்டவணை எண்.3**

**Reported and joined in Public Health Department GCC. But not joined in duty in their allotted Mini Clinics**

| | | |
|---|---|---|
| 1 | S. Loshini | MBC |
| 2 | R Gokul | SC |
| 3 | Katheejathul Nauzia Fathima | BCM |
| 4 | P. Janani | SC |
| 5 | S.R. Keerthana | SCA |
| 6 | Sidharth | BC |
| 7 | Shruti laya | BC |
| 8 | G.V. Vignesh Kani | BC |
| 9 | Sheik abuthahir | BCM |
| 10 | K Simya | MBC |
| 11 | C.A Kiran varma | BC |
| 12 | S. Rhevathi | BC |
| 13 | S. Goutham | SCA |
| 14 | K. Papitha | MBC |
| 15 | V.A. Achyutha raman | BC |
| 16 | S. Hariharasuthan | BC |

அட்டவணை எண் 1ல் தெரிவிக்கப்பட்ட 23 மருத்துவ அலுவலர்கள் பணியாணை வழங்கப்பட்டும் பணியில் சேரவில்லை. அட்டவணை எண் 2ல் தெரிவிக்கப்பட்ட 3 மருத்துவ அலுவலர்கள் பணி துறப்பு செய்து கடிதம் அளித்துள்ளனர். அட்டவணை எண் 3ல் தெரிவிக்கபட்ட 16 மருத்துவ அலுவலர்கள் பணியில் சேர்ந்தும் எந்த வித முன்னறிவிப்பும் இன்றி பணிக்கு வரவில்லை. எனவே, இந்த 16 மருத்துவ அலுவலர்களையும் பணியில் சேராதவர்களாக கருதலாம்.

இதனால் தற்போது மினி கிளினிக்குகளில் 42 மருத்துவ அலுவலர் பணியிடங்கள் காலியாக உள்ளன.

| Sno | Description | Total |
|---|---|---|
| 1 | Total Medical Officers appointed | 198 |
| 2 | Medical Officers joined in duty | 175 |
| 3 | Medical Officers not joined in duty | **23** |
| 4 | Medical Officers resigned the duty | **3** |
| 5 | Medical Officer left without Notice | **16** |
| 6 | Total vacancies | **42** |
| 7 | Present Medical Officers | 156 |

**சு.து.ந.க.எண்.பி2/ 889/2021**

சிறப்பு அதிகாரி/மன்றத்தீர்மான எண்.370/2021 நாள்.26.02.2021ல் இன சுழற்சியின் தொடர்ச்சியாக அடுத்த இடத்தில் உள்ள 30 மருத்துவ அலுவலர்களை மதிப்பெண்கள் மற்றும் இனசுழற்சி அடிப்படையில் தேர்வு செய்து காத்திருப்போர் பட்டியலில் வைக்கவும், தேர்வு செய்யப்பட்டவர்கள் யாரும் பணியில் கலந்து கொள்ளாத பட்சத்தில் அந்த இடங்களில் காத்திருப்போர் பட்டியலில் உள்ளோரை கொண்டு பணியமர்த்த ஆணை பெறப்பட்டுள்ளது. தற்போது 42 மருத்துவ அலுவலர்கள் பணியமர்த்த வேண்டியுள்ளதால் அடுத்த இடத்தில் உள்ள 42 மருத்துவ அலுவலர்களையும் மதிப்பெண்கள் மற்றும் இனசுழற்சி அடிப்படையில் கீழ்க்கண்ட மருத்துவ அலுவலர்கள் தேர்வு செய்யப்பட்டள்ளனர். இவர்களை காலியாக உள்ள மினி கிளினிக் பணியிடங்களில் பணியமர்த்தலாம்.

| S.NO | NAME OF THE MEDICAL OFFICER | FATHER/HUSBAND NAME | DATE OF BIRTH | COMMU NITY | MARKS |
|---|---|---|---|---|---|
| 1 | DR. A.RASHEKA | T. ANAGALAN | 04.07.1997 | SC | 38 |
| 2 | DR. B. PAVITHRA VARSHINI | BOOMI NATHAN | 29.07.1996 | SC | 37 |
| 3 | R.LOKESH | C.RAJENDRAN | 01.01.1996 | SC | 37 |
| 4 | DR. V. VITHIYARTHINI | VEERAPPAN | 16.12.1994 | SC | 34 |
| 5 | R. SRIRAM SANKAR | M.R. RADHAKRISHNAN | 17.11.1995 | SC | 32 |
| 6 | ABINAYA ILAYAPERUMAL | N. ILLAYA PERUMAL | 18.06.1988 | SC | 30 |
| 7 | JAIPRIYA DESIGAN | K.DESIGAN | 17.02.1996 | SC | 30 |
| 8 | G. HARI PRIYA | L. GOPINATHAN | 27.07.1995 | SC | 26 |
| 9 | G. AJITH KUMAR | M. GOVINDASAMY | 03.06.1994 | SC | 25 |
| 10 | M. KARTHICK | R. MUNIRAJ | 06.11.1990 | SC | 18 |
| 11 | M.SANTHOSH | V.MANIMARAN | 25.09.1995 | SC | 36 |
| 12 | DR.S.NIVEDHA | SURESH KUMAR | 23.12.1996 | SC | 34 |
| 13 | SIDDARTHAN.M | P.MANIMUTHU | 20.09.1996 | SC | 36 |
| 14 | K. RENUKA | K. KESAVAN | 05.03.1991 | SC | 34 |
| 15 | P. NIRANJANI | S. PANDIAN | 12.09.1994 | SC | 34 |
| 16 | DR.JOSETTE CAROLINE MARTIN | MARTIN RANJAN | 18-10-1995 | OC | 42 |
| 17 | DR. J .N .ANJANA | G THIRUVARANGA PRASATH | 2.12.1992 | OC | 39 |
| 18 | M. VINOTH KUMAR | B. MANIKANNAN | 02.05.1995 | MBC | 35 |
| 19 | DR. T.V. VIGNESH | VALAYAPATHI | 13.08.1995 | MBC | 34 |
| 20 | DR. S. NARENDHIRAN | SRINICASAN | 26.03.1997 | MBC | 32 |
| 21 | SUBHASHREE PRIYA | CHANDRADSEKARAN | 04.18.1996 | MBC | 31 |
| 22 | V. GANGADHARAN | V.MUNIRATHINAM | 11.15.1968 | MBC | 34 |
| 23 | S. SANDHIYA | V. SENTHIL KUMAR | 30.06.1996 | MBC | 22 |
| 24 | AZARUDEEN | KUDDUS.A | 13.12.1987 | BC M | 33 |
| 25 | SHARIFA FATHIMA.M | A.MOHAMED JAFFAR | 26.04.1994 | BC M | 26 |
| 26 | ANGELINE JEYA.R | B.RAVINDRAN JACOB JABARAJ | 13.10.1994 | BC | 39 |
| 27 | P.HARSHA VARDHANAN.P | B.PARTHIBAN | 28-07-1995 | BC | 39 |
| 28 | V.S.AMBRISH | P.VENUGOPAL | 21.07.1995 | BC | 39 |
| 29 | DR.Divya.J | G.M. Janakiraman | 21-01-1992 | BC | 38 |
| 30 | J.SUBI MANEESHA | A.JAGADEESAN | 18.07.1996 | BC | 38 |
| 31 | K.ULAGANATHAN | R.KANNAPPAN | 30.07.1994 | BC | 38 |
| 32 | S.IRENE SEPHORA | SOLOMOM PRABHAKARAN | 11.11.1995 | BC | 38 |
| 33 | V. MEENAKSHI | G. VAIRAPPAN | 30.03.1997 | BC | 38 |
| 34 | DR. J. AKSHAYA | JAYAVEL | 03.09.1996 | BC | 37 |
| 35 | PAVITHRA. H | S.HARIDASS | 04.02.1995 | BC | 37 |
| 36 | v.sri LAKSHMI | C.VINOTHAN | 19.08.1994 | BC | 37 |
| 37 | DR. HAREESH.U | UMAPATHY | 08.06.1997 | BC | 36 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 38 | R.S.ABANAH KARUNYA | DR.SIDDHARTHAR.R | 27.02.1992 | BC | 36 |
| 39 | Dr. Srinithi Pradepa | M. Baskarn | 16.07.1995 | BC | 35 |
| 40 | DR. M.MEKALA | MOHAN | 28.07.1996 | BC | 34 |
| 41 | R.R.ILANGHOVAN | S.R.RAVI | 03.08.1995 | BC | 34 |
| 42 | SAKTHI SREE.J | T.R.JAYAKUMAR | 11.12.1994 | BC | 30 |

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறை வாயிலாக செயல்பட்டு வரும் 200 மினி கிளினிக்குகளுக்கு தேவையான 200 மருத்துவ அலுவலர்களை தேர்வு செய்ய நேர்காணல் நடத்தப்பட்டு மதிப்பெண்கள் மற்றும் இனசுழற்சி அடிப்படையில் 198 மருத்துவ அலுவலர்கள் தேர்வு செய்யப்பட்டனர். இதில் 42 மருத்துவ அலுவலர்கள் பணியில் சேராமலும் பணி துறப்பும் செய்துள்ளனர். தற்போது 156 மருத்துவ அலுவலர்கள் பணியில் உள்ளனர். 42 காலி பணியிடங்கள் உள்ளன. 42 காலிபணியிடங்களுக்கு இன சுழற்சியின் தொடர்ச்சியாக அடுத்த இடத்தில் உள்ள மேற்கண்ட 42 மருத்துவ அலுவலர்களை மதிப்பெண்கள் அடிப்படையில் தேர்வு செய்து ஓராண்டு காலத்திற்கு சென்னை மாநகர நல சங்கம் மூலமாக ஏற்கெனவே உள்ள விதிகளின்படி நேரடியாக ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த அனுமதியும்,

2. சென்னை மாநகர நல சங்க விதிமுறைகளின்படி உறுப்பினர் செயலர் அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, ஒப்பந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படும் மருத்துவ அலுவலர்களுடன் ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்தம் மேற்கொள்ளவும், சம்பந்தபட்ட மண்டல நல அலுவலர்களின் வருகை சான்றின்படி மாத ஊதியம் வழங்கவும் மற்றும் வருமான வரி பிடித்தம் செய்ய அனுமதியும்,

மேற்கண்ட *1* மற்றும் *2* ஆகிய இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 19.04.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"*1* மற்றும் *2* ஆகிய இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

***********

**சு.து.ந.க.எண். பி2/2701/2021**

**தீர்மான எண்.425/2021** **நாள்:21-04-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - பொது சுகாதாரத்துறை - நோவல் கொரோனா நோய் தடுப்பு பணி - பேரிடர் பணிகள் மேற்கொள்ளவும் - கோவிட் தடுப்பூசி பணிகளை தீவிரப்படுத்தவும், அவசர அவசியம் கருதி 1 முதல் 15 வரையிலான மண்டலங்களில் 100 மருத்துவ அலுவலர்களை 19.04.2021 முதல் 18.04.2022 வரையில் ஒரு வருட காலத்திற்கு சென்னை மாநகர நல சங்கம் மூலமாக ஏற்கெனவே உள்ள விதிகளின்படி ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த அனுமதி.**

நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID - 19) உலகமெங்கும் பரவியுள்ள நிலையில் உலக சுகாதார நிறுவனம் (WHO) உலகமெங்கும் அவசர நிலையினை (Public Health Emergency of International Concern (PHEIC)) பிரகடனப்படுத்தியுள்ளது. மேலும் கட்டுப்படுத்தக்கூடிய தொற்று நோயாகவும் (Controllable Pandemic) அறிவித்துள்ளது. நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை (P1) துறையின் அரசாணை (Ms) எண்.95 நாள்.13.03.2020ல் நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID - 19 ) அறிவிக்கப்பட்ட நோயாக (Notified disease) அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசின் உத்திரவின்படி பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறை சார்பில் நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID - 19 ) பரவாமல் தடுக்க பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சலின் தாக்கம் தற்போது அதிகரிக்க தொடங்கியுள்ளது. இதன் காரணமாக பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் பெருநகர சென்னை மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதில் ஒரு பகுதியாக கொரோனா நோய் தடுப்பிற்கென மத்திய, மாநில அரசுகளின் வழிகாட்டுதல்களின்படி, மருத்துவர்கள்,. மருத்துவ சார் பணியாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு கோவிட்-19 தடுப்பூசி போடப்பட்டு வருகின்றது. பெருநகர சென்னை மாநகராட்சியில் 45 வயதிற்கு மேல் அனைத்து பொதுமக்களுக்கும், கோவிட் 19 தடுப்பூசி இலவசமாக நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையங்கள் மற்றும் நகர்ப்புற சமுதாய நல மையங்களில் காலை 8.00 மணி முதல் மாலை 5.00 வரையிலும், தண்டையார்பேட்டை தொற்றுநோய் மருத்துவமனையில் காலை 8.00 மணி முதல் 5.00 மணி வரையிலும் போடப்பட்டு வருகின்றது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் 138 நிரந்தர மருத்துவ அலுவலர்களும், தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்டதில் ஒப்பந்த அடிப்படையில் 121 மருத்துவ அலுவலர்களும், மினி கிளினிக்கில் 156 மருத்துவ அலுவலர்களும் பணிபுரிந்து வருகின்றனர். தற்போதுள்ள மருத்துவ அலுவலர்களை கொண்டு அன்றாட மருத்துவ சேவைகள் மக்களுக்கு அளிக்கப்பட்டு வருகின்றன.

மார்ச் 2020 முதல் பிப்ரவரி 2021 வரையில் கொரோனா தடுப்பு பணிக்கென வெவ்வேறு மாவட்டங்களில் இருந்து 300 க்கும் மேற்பட்ட மருத்துவ அலுவலர்கள் பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரிந்து வந்தனர். இதனால் கொரோனா தடுப்பு பணிகள் பெருநகர சென்னை மாநகராட்சியில் சிறப்புடன் நடைபெற்றன. தற்போது மற்ற மாவட்டங்களில் கொரோனா நோய் அதிகரித்ததின் காரணமாக அவர்கள் அனைவரும் அவர்களின் மாவட்டத்திற்கு பணி மாற்றம் செய்யப்பட்டனர்.

தற்போது கோவிட் தொற்று நோயின் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில், இதற்கென பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளோடு கோவிட் தடுப்பூசி போடும் பணியினையும் தீவிரப்படுத்த வேண்டியுள்ளது. மேலும் காய்ச்சல் மருத்துவ முகாம்கள் 1 முதல் 15 மண்டலங்களில் நடத்த வேண்டியுள்ளது.

இப்பணிக்கென கூடுதலாக தேவைப்படும் 100 மருத்துவர் அலுவலர்களை மினி கிளினிக் பணிக்கென விண்ணப்பித்த மருத்துவ அலுவலர்களில் பட்டியலில் இருந்து விருப்பம் உள்ள மருத்துவ அலுவலர்களை நேரடியாக ஒப்பந்த அடிப்படையில் ஒராண்டு காலத்திற்கு பணியமர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறை வாயிலாக செயல்பட்டு வரும் 200 மினி கிளினிக்களுக்கு தேவையான 200 மருத்துவ அலுவலர்களை தேர்வு செய்ய நேர்காணல் நடத்தப்பட்டு 198 மருத்துவ அலுவலர்கள் தேர்வு செய்யப்பட்டனர். இதில் 42 மருத்துவ அலுவலர்கள் பணியில் சேரவில்லை.

**சு.து.ந.க.எண்.பி2/2701/2021**

தற்போது பெருநகர சென்னை மாநகராட்சியில் 191 மினி கிளினிக்குகள் செயல்பட்டு வரும் நிலையில் 156 மருத்துவ அலுவலர்கள் பணியில் உள்ளனர். 35 மருத்துவ அலுவலர் பணியிடங்கள் காலியாக உள்ளன. இந்த காலி பணியிடங்களில் அடுத்த இடத்தில் உள்ள மருத்துவ அலுவலர்களை கொண்டு பணியமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் மினி கிளினிக்களுக்கென கீழ்க்கண்ட அளவில் விண்ணப்பங்கள் பெறப்பட்டு நேர்காணல் நடத்தப்பட்டது.

| வஎண் | மருத்துவ அலுவலர் பணியிடம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | மொத்தம் பெறப்பட்ட விண்ணப்பங்கள் | 552 |
| 2 | நேர்காணலில் கலந்து கொள்ளாதவர்கள் | 85 |
| 3 | நேர்காணலுக்கு தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் | 198 |
| 4 | நேர்காணலில் தேர்வு செய்யப்படாத மருத்துவ அலுவலர்கள் | 269 |
| 5 | மினி கிளினிக்களுக்கு தேவையான மருத்துவ அலுவலர்கள் | 35 |
| 6 | மீதமுள்ள மருத்துவ அலுவலர்கள் | 234 |

தற்போது உடனடியாக மருத்துவ அலுவலர்களை நேர்காணல் மூலம் நேரடி நியமனம் செய்ய இயலாத காரணத்தினால், கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள அவசர அவசியம் கருதி பெருநகர சென்னை மாநகராட்சி, மினி கிளினிக் பணிக்கு விண்ணப்பித்து தேர்வு செய்யப்படாத மருத்துவ அலுவலர்களை கொண்டு பணியமர்த்தவும், மீதம் தேவைப்படும் மருத்துவ அலுவலர்களை பொதுசுகாதாரத்துறையில் மருத்துவ அலுவலர் பணிக்கு பெறப்பட்ட விண்ணப்பங்களை கொண்டு நேர்காணல் மூலம் தேர்வு செய்து பணியமர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**Qualification of Staff**

| Sl.No | Category of Staff | Qualification |
|---|---|---|
| 1 | Medical Officer | MBBS from Medical colleges recognized by Medical Council and duly Registered with TNMC. |

நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை (N2) துறையின் அரசாணை (Ms) எண்.588 நாள்.30.12.2020ல் மினிகிளினிக்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்படும் மருத்துவ அலுவலர்களுக்கு மாத ஊதியமாக ரூ.60,000/ நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. எனவே, தற்போது கோவிட் தடுப்பு பணிகளுக்கான பணியமர்த்தப்படும் மருத்துவ அலுவலர்களுக்கும் மாத ஊதியம் ரூ.60,000/ ஆக நிர்ணயம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**தேவைப்படும் நிதி விவரம்**

| SNo | Name of the post | Mo's Monthly Salary (Rs) | Total Number Medical Officers | Period of contract | Total amount (Rs) |
|---|---|---|---|---|---|
| 1 | Medical Officer | 60000 | 100 | 12 | 7,20,00,000 |

நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை (P1) துறையின் அரசாணை (Ms) எண்.95 நாள்.13.03.2020 மற்றும் நிதித்துறை கடிதம் எண்.74/JS(MA)/Finance(Salaries) /2020 நாள்.01.04.2020ன்படியும், கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தங்கள் சட்டம் 1998 பிரிவு 16-a ல் அவசர காலங்களில் செயல்பட ஒப்பம் கோரும் அலுவலருக்கு ஒப்ப விதிகளில் தளர்வு செய்து ஒப்பம் கோருவதில் இருந்து விலக்களித்து நேரடியாக கொள்முதல் செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

Tamil Nadu Transparency in Tenders Act, 1998 Sec:16 :"Provision of Act not to apply in certain cases: The provisions of section 9 and 10 shall not apply to procurement."

(e) During natural calamities and emergencies declared by the Government;

சென்னை மாநகர நல சங்கம் (Chennai City Urban Health Mission) 2015 பதிவு செய்யப்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சியில் தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்டங்கள் அனைத்தும் இச்சங்கத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதில் மாநகர நல அலுவலர், உறுப்பினர்/செயலர் ஆக உள்ளார். இச்சங்க விதிமுறைகளில் உறுப்பினர்/செயலர்க்கு ஒப்பந்தங்கள் மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. (Authorize the Member Secretary to execute on behalf of the Society as it may deem fit in the conduct of the business of the Society). இதனடிப்படையில் ஒப்பந்தத்தில் தேர்ந்தெடுக்கப்படும் மருத்துவ அலுவலர்களை உறுப்பினர்/செயலர், சென்னை மாநகர நல சங்கம் அவர்களுடன் ஆணையர் அவர்களின் ஆணை பெற்று ஒப்பம் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறையில் நோவல் கொரோனா நோய் தடுப்பு பணி மற்றும் கோவிட் தடுப்பூசி பணிகளை தீவிரப்படுத்தவும், சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தவும், அவசர அவசியம் கருதி பொதுமக்களுக்கு மருத்துவ சேவைகள் வழங்க 100 மருத்துவ அலுவலர்களை ஒப்பந்த அடிப்படையில் ரூ.60,000/ மாத ஊதியத்தில் 1 முதல் 15 மண்டலங்களில் 19.04.2021 முதல் 18.04.2022 வரையில் ஒரு வருட காலத்திற்கு சென்னை மாநகர நல சங்கம் மூலமாக ஏற்கெனவே உள்ள விதிகளின்படி நேரடி நியமனம் மூலம் பணியமர்த்த அனுமதிக்கும்,
2. நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை (H2) துறையின் அரசாணை (Ms) எண்.161 நாள்.27.03.2020ல் நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID-19) அறிவிக்கப்பட்ட நோயாக (Notified disease) அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தங்கள் சட்டம் 1998 பிரிவு 16-a ல் அவசர காலங்களில் செயல்பட ஒப்பம் கோரும் அலுவலருக்கு நேரடியாக கொள்முதல் செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டதின் அடிப்படையில் 19.04.2021 முதல் 18.04.2022 வரையில் ஒரு வருட காலத்திற்கு சென்னை மாநகர நல சங்கம் மூலமாக ஏற்கெனவே உள்ள விதிகளின்படி நேரடியாக 100 மருத்துவ அலுவலர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த அனுமதிக்கும்,
3. இப்பணிக்கான நிர்வாக செலவினம் ரூ. 7,20,00,000/- (ரூபாய் ஏழு கோடியே இருபது லட்சம் மட்டும்) மேற்கொள்ள அனுமதிக்கும்,
4. சென்னை மாநகர நல சங்க விதிமுறைகளின்படி உறுப்பினர்/ செயலர் அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, ஒப்பந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படும் மருத்துவ அலுவலர்களுடன் ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்தம் மேற்கொள்ளவும்,
5. சம்பந்தபட்ட மண்டல நல அலுவலர்களின் வருகை சான்றின்படி மாத ஊதியம் வழங்கவும் மற்றும் வருமான வரி பிடித்தம் செய்ய அனுமதியும்,

6. இச்செலவினம் பெருநகர சென்னை மாநகராட்சி கோவிட் நிதியின் கீழ் பிரிவு குறியீடு 30-31-01 கணக்கு குறியீடு 230-70-12-03 என்ற தலைப்பின் கீழ் மேற்கொள்ள அனுமதியும் மற்றும் நிதி ஒதுக்கீடு செய்ய அனுமதிக்கும்,

மேற்கண்ட 1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 15.04.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*******

**பா.து.ந.க.எண்.பி3/ 0125/ 2021**

**தீர்மானஎண்.426/2021** **நாள்:21-04-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - பாலங்கள் துறை - மண்டலம் - 5,6,9,10 மற்றும் 13ல் உள்ள பாலங்களின் தூண்களில் செங்குத்து பூங்கா அமைக்கப்பட்டுள்ளது - செங்குத்து பூங்காவை தத்தெடுப்பு முறையில் பராமரிப்பதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டது - பல்வேறு நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு கலந்தாய்வு கூட்டம் நடத்தப்பட்டது - கலந்தாய்வு கூட்டத்தில் விண்ணப்பதாரர்கள் விருப்பத்தின்படி தேர்வு செய்யப்பட்ட இடங்களுக்கு அனுமதியும் - அந்நிறுவனத்தின் சொந்த செலவில் செங்குத்து பூங்காக்களை மேம்படுத்தி இரண்டு ஆண்டுகள் பராமரிக்க அனுமதி.**

கண்காணிப்பு பொறியாளர் (பாலங்கள்) அவர்களின் தலைமையில் செங்குத்து பூங்காக்களை பராமரிக்கும் பணிக்காக பெறப்பட்ட விண்ணப்பங்களின் அடிப்படையில், கீழ்க்கண்ட நிறுவன முகவர்களுடன் கலந்தாய்வு கூட்டம் 12.04.2021 அன்று நடைபெற்றது. கலந்தாய்வு கூட்டத்தில் கீழ்க்கண்ட அட்டவணையிலுள்ள நிறுவனங்கள் 15 பாலங்களில் உள்ள தூண்களில் அமைக்கப்பட்டுள்ள செங்குத்து பூங்காக்களை பராமரிப்பதற்கு விருப்பம் தெரிவித்து உள்ளனர்.
அதன் விவரம்:

| வ. எண் | தனியார் நிறுவனங்களின் பெயர் | மேம்பாலங்கள் (ம) நடைமேம்பாலங்களின் பெயர் | தூண்களின் எண்ணிக்கை | மையத் தடுப்புகள் |
|---|---|---|---|---|
| 1 | ஸ்டெர்லிங்க் டிஸ்ப்ளே பிரைவேட் லிமிடெட் திரு. எஸ்.ரமேஷ் (94455 66753) | மண்டலம் – 5, வார்டு – 53ல், வள்ளலார் நகர் தங்க சாலை சந்திப்பில் உள்ள மேம்பாலம் | 2 | - |
| | | மண்டலம் – 5, வார்டு – 58ல், டவுட்டன் சந்திப்பில் உள்ள மேம்பாலம் | 7 | 1 |
| | | மண்டலம் – 5, வார்டு – 61ல், பாந்தியன் சாலை – காசா மேஜர் சாலை சந்திப்பில் உள்ள மேம்பாலம் | 6 | 1 |
| | | மண்டலம் – 9, வார்டு – 119&121ல், டாக்டர். இராதாகிருஷ்ணன் சாலை – இராயப்பேட்டை நெடுஞ்சாலை சந்திப்பில் உள்ள மேம்பாலம் (அஜந்தா) | 9 | 1 |
| | | மண்டலம் – 13, வார்டு – 175&176ல், சர்தார் பட்டேல் சாலை – L.B. சாலை சந்திப்பில் உள்ள மேம்பாலம் | 16 | 1 |
| 2 | பீ வெல் மருத்துவமனை திரு. டி. பிரகாஷ் (80724 71197) | மண்டலம் – 9, வார்டு – 111&115ல், பீட்டர்ஸ் சாலை – கான்ரான்ஸ்மித் சாலை சந்திப்பிலுள்ள மேம்பாலம் | 8 | 1 |
| | | மண்டலம் – 9, வார்டு – 115&119ல், பீட்டர்ஸ் சாலை – வெஸ்ட் காட் சாலை சந்திப்பிலுள்ள மேம்பாலம் | 7 | 1 |
| | | மண்டலம்-9, கோட்டம்-117, ஜி.என்.செட்டி சாலை – கலைவாணர் மேம்பாலம் | 8 | - |
| 3 | திருவாளர்கள். அபார்ட் எண்டர்பிரைசஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் திரு. பி.அன்பரசு (98840 99919) | மண்டலம் – 9, வார்டு – 110&113ல், வடக்கு உஸ்மான் சாலை – மகாலிங்கபுரம் சாலை சந்திப்பில் உள்ள மேம்பாலம் | 4 | 4 |
| | | மண்டலம் – 10, வார்டு – 136ல், தெற்கு உஸ்மான் சாலை – துரைசாமி சாலை சந்திப்பில் உள்ள மேம்பாலம் | 10 | 7 |

**பா.து.ந.க.எண்.பி3/ 0125/ 2021**

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | அப்பல்லோ ஸ்பெக்ட்ரா மருத்துவமனை திரு.பி.முகேஷ் (95000 38933) | மண்டலம் – 9, வார்டு – 118&119ல், டாக்டர். இராதாகிருஷ்ணன் சாலை – டி.டி.கே. சாலை சந்திப்பில் உள்ள மேம்பாலம் | 22 | 1 |
| 5 | காவேரி மருத்துவமனை திரு.ஜெ.ராஜ்குமார் (90253 45728) | மண்டலம் – 9, வார்டு – 118&123ல், டி.டி.கே. சாலை – சி.பி.இராமசாமி சாலை சந்திப்பில் உள்ள மேம்பாலம் | 16 | 7 |
| 6 | டீப்உட்ஸ் இனிடியேடிவ்ஸ் ஆன் என்விரான்மென்ட் ட்ரஸ்ட் திரு. கே. அன்புநாதன் (98413 39293) | மண்டலம் – 13, வார்டு – 171&172ல், சர்தார் பட்டேல் சாலை – காந்தி மண்டபம் சாலை சந்திப்பில் உள்ள மேம்பாலம் | 8 | - |
| | | மண்டலம் – 9, வார்டு – 122ல், செனடாப் சாலை – டர்ன்புல்ஸ் சாலை சந்திப்பில் உள்ள ஜி.கே.மூப்பனார் மேம்பாலம் | 6 | 1 |
| 7 | பிரகாஷ் பெரஸ் இன்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட் திரு. தினேஷ் (99406 81441) | மண்டலம் – 6, வார்டு – 70&71ல், பெரம்பூர் சாலை சந்திப்பில் உள்ள மேம்பாலம் | 12 | 2 |

சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மானம் எண். 213/2020, நாள்.16.03.2020ன்படி பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பூங்காக்கள் மற்றும் விளையாட்டுத் திடல்களை உருவாக்கி பராமரிக்கவும், போக்குவரத்து தீவுத்திட்டுகளை மேம்படுத்தி மாநகராட்சிக்கு நிதிச்சுமை இல்லாமல் தனியாரின் பங்களிப்புடன் பராமரிக்க ஏற்கனவே மன்றம் அனுமதி அளித்துள்ளதின்படி பாலங்களிலுள்ள செங்குத்துப் பூங்காக்களையும் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு பராமரிக்கப்பட வேண்டும்.

1. செங்குத்து பூங்கா அமைக்கும் பணிமுடிக்கப்பட்ட நாளிலிருந்து இரண்டு வருடத்திற்கு பராமரிக்க தற்போது ஆணை வழங்கப்படுகிறது, மேலும், பராமரிப்புபணி திருப்திகரமாக இருக்கும்பட்சத்தில் தொடர்ந்து மேற்கொள்வதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை ஆணையருக்கு விண்ணப்பித்து அனுமதி பெற்று புதுப்பித்தல் வேண்டும்.
2. இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை முன்கொணர்பவரின் பராமரிப்புத் தன்மையை பொறுத்து பெருநகர சென்னை மாநகராட்சியின் விருப்பு உரிமையின் பேரிலும் ஒப்பந்தம் நீட்டிக்கப்படும்.
3. முன்கொணர்பவரால் பராமரிப்பு தொடங்கப்பட்டவுடன் பெருநகர சென்னை மாநகராட்சியின் பணியாளர்கள் பணியில் இருந்து விலக்கி கொள்ளப்படுவார்கள்.
4. முன்கொணர்பவர் கட்டமைப்பின் மீதோ இடத்தின் மீதோ அல்லது இதர சாதனங்கள் மீதோ யாதொரு உரிமையும் கோருதல் கூடாது.
5. பராமரிப்பு பணிக்கான பணியாட்களை முன்கொணர்பவரே ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்.
6. அனுமதிக்கப்பட்ட கட்டமைப்புகள் தவிர்த்து வேறு எந்த கட்டமைப்புகளையும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையரின் அனுமதி இன்றி அமைக்கக்கூடாது.
7. முன்கொணர்பவர் வடிவமைப்பிலும் மேம்படுத்துதலிலும் பெருநகர சென்னை மாநகராட்சி மாற்றங்கள் ஏதும் மேற்கொள்ள நேரும் போது அம்மாற்றங்களை மேற்கொள்ளுதல் வேண்டும்.

8. செங்குத்து பூங்காவினை பராமரிக்கும் நிறுவனம் தங்களது நிறுவனத்தின் பதாகை தங்களுடைய சொந்த செலவில் கீழ்க்கண்ட அளவின்படி அமைக்கப்பட வேண்டும். (ஒரு தூண் விட்டு ஒரு தூண்களில் 2' X 1 ½" என்ற அளவிலும் மற்றும் தூண்களுக்கு இடையில் அமைக்கப்பட்டுள்ள செங்குத்து பூங்காவில் 3' x 1 1/2' என்ற அளவிலும் பக்கத்திற்கு ஒன்று அமைக்கப்பட வேண்டும்).

9. பாலத்தில் அமைக்கப்பட்டுள்ள செங்குத்து பூங்கா பகுதியிலோ பாலத்திலோ எக்காரணத்தை முன்னிட்டும் மதம், சாதி மற்றும் அரசியல் ரீதியான காரணங்களுக்காக உபயோகப்படுத்தக்கூடாது.

10. செங்குத்து பூங்காக்களை எழில்மிகு வடிவமைப்புடன் ஆண்டுதோறும் பராமரிக்கப்பட வேண்டும்.

11. பூங்காவில் செய்ய வேண்டிய பணிகளான ஓரச்செடிகளை வெட்டுதல், *(Hedges and Edges Pruning)* களை எடுத்தல் மற்றும் மண் கிளறிவிடுதல் *(Digging - Hoeing)* பழுது நடவு *(Gap filling)* செடிகளுக்கு உரமிடுதல், பயிர் பாதுகாப்பு மருந்துகள் தெளித்தல் போன்ற பணிகளை அவ்வப்போதும் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் அறிவுறுத்தும் போதும் மேற்கொள்ள வேண்டும்.

12. முன்கொணர்பவர் கட்டமைப்பை சீரிய முறையில் பராமரிக்க வேண்டும், அதாவது மேம்பால தூண்களில் கொடுக்கப்பட்ட அளவின்படி (2' X 1 ½" (ம) 3' X 1 ½") விளம்பர பலகையை தவிர ஆணி அடித்தல் போஸ்டர் மற்றும் வேறு எந்தவிதமான விளம்பர பலகைகளையும் அமைக்கக் கூடாது.

13. பெருநகர சென்னை மாநகராட்சி உயர் அலுவலர்கள் செங்குத்து பூங்காவை ஆய்வு மேற்கொள்ளும் போது பராமரிப்பு தொடர்பான விளக்கங்களை அளிக்க வேண்டும்.

14. பெருநகர சென்னை மாநகராட்சிக்கு இவ்வொப்பந்தத்தினை எவ்வித காரணமுமின்றி ரத்து செய்ய உரிமை உள்ளது.

15. பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் நிர்வாக காரணங்களை முன்னிட்டு இவ்வொப்பந்தத்தை ரத்து செய்ய நேரிட்டால் முன்கொணர்பவர் எவ்வித இழப்பீடும் கோருதல்கூடாது, அவ்வாறு செங்குத்து பூங்கா பராமரிப்பினை பெருநகர சென்னை மாநகராட்சி ஒப்படைக்க கோரும் போது பெருநகர சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைக்கவேண்டும்.

16. செங்குத்து பூங்கா பராமரிப்பு திருப்திகரமாக இல்லாதிருந்தால் ஒப்பந்தத்தை எந்தவித முன்னறிவிப்பின்றி ரத்து செய்ய முழு அதிகாரம் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கும், ஆணையர் அதிகாரம் பெற்ற அலுவலர்களுக்கும் உண்டு.

17. பெருநகர சென்னை மாநகராட்சி ஒப்பந்த காலத்தின் போது உள்கட்டமைப்புகளால் விபத்துகள் ஏதும் நிகழ்ந்தால், அதற்கு பெருநகர சென்னை மாநகராட்சி பொறுப்பேற்காது, எக்காரணத்தை முன்னிட்டும் இழப்பீடு வழங்கப்படமாட்டாது.

18. ஒப்பந்தத்திலிருந்து விலக விரும்பினால் 2 மாதங்களுக்கு முன்னதாகவே பெருநகர சென்னை மாநகராட்சிக்கு கடிதம் மூலம் தெரிவிக்கப்பட வேண்டும்.

19. அவ்வாறு முன்கொணர்பவர் பராமரிப்பில் இருந்து விலகிக் கொள்ளும்போது ஏற்கனவே இருந்த கட்டமைப்புகள் மற்றும் நிலத்தின் எழில் அமைப்புகள் உரிய முறையில் சீர்திருத்தி ஒப்படைக்கப்பட வேண்டும்.

20. பெருநகர சென்னை மாநகராட்சிக்கு எப்போது வேண்டுமானாலும் மேற்கண்ட விதிகளை கூட்டவோ மாற்றி அமைக்கவோ அதிகாரம் உண்டு.

21. இப்பூங்கா பராமரிப்பில் மேற்கண்டுள்ள நிபந்தனைகள் குறித்த அல்லது இவை தவிரவும் எழும் கேள்விகளுக்கும். கருத்து வேறுபாடுகளுக்கும் பெருநகர சென்னை மாநகராட்சியின் முடிவே இறுதியானது மற்றும் முடிவானது.

**பா.து.ந.க.எண்.பி3/ 0125/ 2021**

22. செங்குத்து பூங்காவை மேம்படுத்தி இரண்டு ஆண்டுகள் பராமரிக்க முன்வரும் நிறுவனங்களுக்கு ஒப்புதல் வழங்கப்படும். பின்னர் இரண்டு வருடம் நிறுவனத்தின் பராமரிப்பு தன்மையை பொருத்து அனுமதி நீட்டிப்பு வழங்கப்படும்.

மேலும், சிறப்பு அதிகாரி, மன்றத் தீர்மான எண். 1073/2020, நாள்.24.12.2020ல் கீழ்க்கண்டவாறு அனுமதி அளித்துள்ளதின்படி, செங்குத்துப் பூங்கா பராமரிக்கும் பணிக்கும் இவை பொருந்தும்.

1. பசுமை சென்னை திட்டத்தின் கீழ் பெரு வணிக நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், அமைப்புகள் / குடியிருப்பு நலச் சங்கங்களுக்கு தத்தெடுப்பு முறையில் பூங்கா பராமரிப்பு பணி மேற்கொள்ள அனுமதி வழங்குவதற்கு ஏதுவாக தத்தெடுப்பு முறையில் பராமரிக்க முன்வருபவரால் அளிக்கப்படும் பிணை வைப்புத் தொகையினை முற்றிலுமாக ரத்து செய்யவும்,
2. தற்போது உள்ள ஓராண்டு காலத்திற்கு வழங்கப்படும் அனுமதியினை இரண்டாண்டு காலத்திற்கு ஒருமுறை புதுப்பிக்கவும் மன்றம் அனுமதி அளித்துள்ளது.

எனவே, இச்செங்குத்துப் பூங்காக்களை பராமரிக்கும் பணிக்கு சிறப்பு அதிகாரி, மன்றத் தீர்மான எண்.213/2020, நாள். 16.03.2020 மற்றும் சிறப்பு அதிகாரி, மன்றத் தீர்மான எண். 1073/2020, நாள். 24.12.2020ன்படி மேற்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு அனுமதி வழங்கலாம் என கருதப்படுகிறது.

எனவே,

1. மேற்குறிப்பிட்டுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி, **15** மேம்பாலங்களில் நிறுவப்பட்டுள்ள செங்குத்துப் பூங்காக்களை இரண்டு ஆண்டுகளுக்கு, 01.06.2021 முதல் 31.05.2023 வரை பராமரிப்பதற்காக **7** நிறுவனங்கள் தங்களது விருப்பத்தின் பேரில் தத்தெடுக்க அனுமதி வழங்கவும்,
2. தத்தெடுக்கப்பட்ட செங்குத்துப் பூங்கா பகுதியில், அந்நிறுவனத்தின் பெயர் பலகையை உரிய அனுமதி பெற்று பொது மக்களுக்கு இடையூறு இல்லாமல் ஒரு தூண் விட்டு ஒரு தூண்களில் 2" X 1 ½" அளவில் வைக்கவும், கழிவுநீர் சுத்திகரிப்பானைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள செங்குத்து பூங்கா மற்றும் தூண்களுக்கு இடையில் அமைக்கப்பட்டுள்ள (BAY) செங்குத்து பூங்காவிற்கு 3" X 1 ½" அளவில் பதாகைகள் வைக்க அனுமதியும்,
3. அப்பதாகைகளில் பராமரிப்பு நிறுவனத்தின் பெயருடன் ஆக்கம் -பெருநகர சென்னை மாநகராட்சி என்ற பெயருடன் அமைக்க அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 21.04.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*******

வ.து.ந.க.எண்.தொ.உ./331/2021

தீர்மான எண்.427/2021 நாள்:21-04-2021

**பெருநகர சென்னை மாநகராட்சி - வருவாய் துறை - பொது தேர்தல் - தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் 2021 - 2021-2022ம் ஆண்டுக்கான தொழில் உரிமம் புதுப்பிக்க காலக்கெடு 01.04.2021 முதல் 30.04.2021 வரை தண்ட தொகையில்லாமல் வசூலிக்க அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, வருவாய் துறையின் முக்கிய வருவாய் இனமான தொழில் உரிமம் வழங்க சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம், 1919ன்படி பின்வரும் பிரிவுகளில் உரிமம் வழங்க வரையறுக்கப்பட்டுள்ளது.

| Relevant section in CCMC Act 1919 | Description |
|---|---|
| 279 | Prohibition in respect of lodging houses, eating house, etc., |
| 287 & 288 | Industries and factories, |
| 299 | Regulation of milk trade |
| 304 | Licensing of Private markets |
| 309 | Butcher's fishmonger's and poulterer's licence |

2021-2022ம் ஆண்டுக்கான புதுப்பிக்கப்படவேண்டிய தொழில் உரிமங்களின் எண்ணிக்கை 81029 அவற்றில் 01.02.2021 முதல் 21.03.2021 வரை 26161 உரிமங்கள் புதுப்பிக்கப்பட்டன. மீதம் 54868 உரிமங்கள் புதுப்பிக்கப்படவேண்டும்.

சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம் 1919, உரிய பிரிவுகளின் கீழ் வழங்கப்படும் தொழில்உரிமம் அந்த நிதியாண்டு வரை செல்லத்தக்கதாகும். அவ்வாறு உரிய நிதியாண்டில் புதுப்பிக்க தவறிய உரிமங்கள் ஏப்ரல் 30ம் தேதி வரை உரிமக் கட்டணத்துடன், தண்டத் தொகையாக உரிமக் கட்டணத்தில் 50 சதவீதம் சேர்த்து வசூலிக்கவும், மே 1ம் தேதி முதல் புதுப்பிக்கப்படும் உரிமங்கள் உரிமக் கட்டணத்துடன் தண்டத் தொகையாக உரிமக் கட்டணத்தில் 100 சதவீதம் சேர்த்து உரிய நிதியாண்டு முடிய (மார்ச் 31 வரை) வசூலிக்கவும், அவ்வாறு புதுப்பிக்கத் தவறிய உரிமங்கள் அடுத்து வரும் நிதியாண்டில் எவ்வித அறிவிப்பின்றி தானாக இரத்து ஆகிவிடும் என்று மன்றத் தீர்மான எண்.44/2003, நாள் 30.01.2003ன்படி தீர்மானிக்கப்பட்டது.

தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 06.04.2021 அன்று நடைபெறும் என 26.02.2021 அன்று இந்திய தேர்தல் ஆணையம் அறிவிக்கப்பட்ட நிலையிலும், தேர்தல் நன்னடத்தை விதி அமலில் உள்ளதாலும் அனைத்து வருவாய் துறை அலுவலர்களும் தேர்தல் பணியினை மேற்கொண்டு வரும் காரணத்தினாலும், உரிமம் ஆய்வாளர்களால் குறிப்பிட்ட காலத்திற்குள் உரிமங்களை புதுப்பிக்கக் கோரி பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த இயலாத நிலை ஏற்படவுள்ளது. இந்நிலையில் 2021-2022ம் ஆண்டு உரிமத்தை தண்ட தொகையின்றி 30.04.2021 வரை அனுமதித்து, உரிமம் புதுப்பிக்கலாம் என சமர்ப்பிக்கப்படுகிறது.

எனவே, பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மண்டல வாரியான உரிமங்களை 30.04.2021க்குள் தண்டத் தொகையின்றி புதுப்பித்திட சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 22.03.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

| மண்டலம் | புதுப்பிக்கப்பட்ட தொழில் உரிமம் | புதுப்பிக்கப்படவேண்டிய தொழில் உரிமம் |
|---|---|---|
| 1 | 672 | 1882 |
| 2 | 491 | 633 |

| | | |
|---|---|---|
| 3 | 1876 | 2189 |
| 4 | 2674 | 4435 |
| 5 | 4735 | 12478 |
| 6 | 1801 | 3637 |
| 7 | 2128 | 3218 |
| 8 | 2483 | 4908 |
| 9 | 2768 | 6643 |
| 10 | 1687 | 4348 |
| 11 | 1073 | 2427 |
| 12 | 965 | 1721 |
| 13 | 1689 | 3438 |
| 14 | 472 | 1368 |
| 15 | 647 | 1543 |
| மொத்தம் | 26161 | 54868 |

**"தொழில் உரிமங்களை தண்டத் தொகையின்றி புதுப்பித்திட சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*******

**<u>பொ.து.ந.க.எண்.ஈ3/21640/2020</u>**

**தீர்மானஎண்.428/2021** **நாள்:22-04-2021**

**<u>அயற்பணி - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - திரு. ஆர். செல்வராஜா, துணை ஆட்சியர் (நில எடுப்பு), சிப்காட், சென்னை அவர்கள் - பெருநகர சென்னை மாநகராட்சி வட்டார துணை ஆணையர் (மத்தியம்) அலுவலகத்தில் துணை ஆட்சியர்(நிர்வாகம்) ஆக அயற்பணியில் 01.10.2020 முற்பகல் முதல் பணியேற்ற விவரம் தகவல் மற்றும் பதிவிற்கும் அனுமதி.</u>**

அரசாணை (2டி) எண்.167, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, பணிகள் அலகு, பணி-1 பிரிவு, நாள்: 16.09.2020ன்படி, திரு. ஆர். செல்வராஜா, துணை ஆட்சியர் (நில எடுப்பு), சிப்காட், சென்னை அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி வட்டார துணை ஆணையர் (மத்தியம்) அலுவலகத்தில் துணை ஆட்சியர்(நிர்வாகம்) ஆக அயற்பணியில் 01.10.2020 முற்பகல் முதல் பணியேற்ற விவரம் சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களின் தகவலுக்கும் மற்றும் பதிவுக்கும் சமர்ப்பித்த ஆணையரது 22.04.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"தகவல் மற்றும் பதிவிற்கு, சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*******

**ம.அ.10.ந.க.எண்.அ1/ 7501/ 2020**

**தீர்மானஎண்.429/2021** **நாள்:22-04-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - பொது சுகாதாரத்துறை - மண்டலம்-10 - பகுதி - 29 - கோட்டம்-129 ல் அமைந்துள்ள ஜவஹர் பொறியியல் கல்லூரியில் (தனியார்) கொரோனா பெருந்தொற்று நோய் பாதித்தவர்களுக்கு சித்தமுறையில் சிகிச்சை அளிக்கப்பட்டதற்கு - ஜுன் மற்றும் ஜூலை மாதங்களில் சிகிச்சை அளித்தபோது செலவிடப்பட்ட உணவு தொகை ரூ.66,09,750/- வழங்கப்பட்டதற்கு பின்னேற்பு அனுமதியும், ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் 2020 மாதங்களுக்கான உணவு தொகை ரூ.72,69,500/- வழங்குவதற்கு அனுமதி.**

கொரோனா பெருந்தொற்று கடந்த2019ஆம் ஆண்டு சீனாவில் தொடங்கி, உலக நாடுகளுக்கு பரவத் தொடங்கியது, இந்தியாவில் மார்ச் மாதம் 2020ல் பாரத பிரதமர் அவர்களால் நாட்டு மக்களுக்கு தொலைகாட்சி மூலம் உரையாற்றி, முதல் அமைச்சர்களுடன் ஆலோசனைக்குபின் முழு ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டன. அரசு அலுவலர்கள் 50 விழுக்காடு வருகைபுரியவும், சுழற்சி முறையில் பணிபுரியவும் ஆணையிடப்பட்டது. மேலும், இத்தொற்று சென்னை மாவட்டத்தில் அனைத்து பகுதிகளிலும் மற்றும் கோடம்பாக்கம் மண்டலத்தில் அதிக எண்ணிக்கையில் இருந்தது கண்டறியப்பட்டது

இதனைத் தொடர்ந்து திடக்கழிவு மேலாண்மை துறை நோய் தடுப்பு (COVID-19 ) நடவடிக்கைக்காக 30.03.2020 முதல் துப்புரவு பணியாளர்கள், ஓட்டுநர்கள் மற்றும் அனைத்து பணியாளர்களுக்கும் உணவு வழங்க ஆணையிடப்பட்டது. மேலும், ஊரடங்கு உத்தரவு தொடர்ந்து நீடிக்கப்பட்ட நிலையில் நோய் தொற்று பரவாமல் இருக்க தடுப்புகள் (Barricades ) வைத்து, நோயாளிகள் வெளியில் செல்லாமல் இருக்க கண்காணிக்கவும், பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு தேவையான பொருட்கள் மருந்துகள் வாங்கி தருவதற்கு Volunteers (தன்னார்வலர்கள்) நியமிக்கப்பட்டனர்.

மேலும், Dr. திரு.K.வீரபாபு அவர்களால் கபசுர குடிநீர் அனைத்து மக்களுக்கும் வீடு தோறும் சென்று வழங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் – 10, பகுதி – 29, கோட்டம் – 129ல் அமைந்துள்ள ஜவஹர் பொறியியல் கல்லூரியில் கொரோனா நோய் பாதிக்கப்பட்டவர்களுக்கு உள்ளிருப்பு தனிமைப்படுத்தப்பட்ட வளாகமாக (Covid Care Centre) மாற்றப்பட்டு கொரோனா உறுதி செய்யப்பட்ட நோயாளிகளுக்கு Dr..திரு.K.வீரபாபு அவர்களின் மூலமாக சித்த மருத்துவ முறைப்படி தொடர்சிகிச்சை அளிக்கப்பட்டு மூன்று வேளைகளிலும் சத்தான உணவு, சுண்டல் மற்றும் கசாய தேநீர் ஆகியவற்றை வழங்கியுள்ளார். ,இதனை தொடர்ந்து தமிழகம் முழுவதும் தெரிந்து அனைத்து மக்களும் சிகிச்சை பெற வரத் தொடங்கினர்.

மேற்கண்ட சிகிச்சை முறைகள் நடைபெறுவதை, சுகாதார செயலர், சட்டமன்ற உறுப்பினர்கள், ஆணையர் மற்றும் துணைஆணையர்கள் ஆகியோர்கள் பார்வையிட்டுள்ளனர்.

அவ்வாறு கடந்த ஜுன் மாதம் முதல் செப்டம்பர் -2020 வரை சிகிச்சை அளிக்கப்பட்ட நோயாளிகளின் விவரம் மற்றும் அதற்குண்டான உணவு தொகை வழங்கிட Dr. திரு. K.வீரபாபு அவர்கள் வழங்கிய பட்டியலில் ஜுன் மற்றும் ஜூலை மாதத்திற்கான தொகையான ரூ.66,09,750/-யை இரு தவணைகளாக (08.01.2021 மற்றும் 08.03.2021) Dr. திரு.K.வீரபாபு அவர்களுக்கு வழங்கப்பட்டது.

மேலும், ஆகஸ்டு மற்றும் செப்டம்பர் மாதம் (19 நாட்கள் மட்டும்) பட்டிகளின் உணவு தொகையாக ரூ.72,69,500/- வழங்க பட்டியல்/ரசீது சமர்ப்பித்துள்ளார். அதன் விவரம் வருமாறு

| வ. எண் | மாதம் / வருடம் | பயன்பெற்றநோயாளிகள் / மருத்துவஊழியர்களின் எண்ணிக்கை | ஒரு நாளுக்கு நபர் ஒன்றுக்கு (உணவு)வீதம் ரூ. | மொத்தம் ரூ |
|---|---|---|---|---|
| 1. | ஆகஸ்ட் -2020 | 15071 | ரூ.350/- | ரூ.52,74,850/- |
| 2. | செப்டம்பர் - 2020 | 5699 | ரூ.350/- | ரூ.19,94,650/- |
| மொத்தம் | | | - | ரூ72,69,500/- |

<u>ம.அ.10ந.க.எண்.அ1/ 7501/ 2020</u>

*Covid-19* நோயாளிகளுக்கு சிகிச்சை மற்றும் மருத்துவ செலவிற்கு எவ்வித *Reimbursement* தொகையும் கோரவில்லை, மாறாக உணவிற்காக மட்டும் ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு ரூ.*350/-* வீதம் அளிக்குமாறு கோரியுள்ளார். மேலும் சிகிச்சை அளித்த நோயாளிகளின் விவரப்பட்டியல் சமர்ப்பித்துள்ளார்.

இதன் பொருட்டு ஜவஹர் பொறியியல் கல்லூரியில் சிகிச்சை அளித்த பயனாளிகளை தோராயமாக *(Random)* அலைபேசியின் மூலம் தொடர்பு கொண்டு விசாரித்ததில் உண்மைதன்மை இருப்பது ஊர்ஜிதம் செய்யப்பட்டது.

எனவே,

அ) *Dr.*திரு.*K.*வீரபாபு சித்த மருத்துவர் அவர்கள் ஜவஹர் பொறியியல் கல்லூரியில் *(CCC) Covid-19 Care Centre* சிகிச்சைக்கான நோயாளிகளை தங்கவைத்து மூன்று வேளைகளிலும் உணவு மற்றும் கசாயதேநீர் வழங்கப்பட்டதற்கு பின்னேற்பு ஆணையும்,

ஆ) திரு. *K.*வீரபாபு சித்தமருத்துவர் அவர்கள் அளித்துள்ள உணவிற்கான இரண்டு மாதங்களுக்கான (ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் *-2020 (19* நாட்களுக்கு மட்டும்) உணவு செலவீன தொகையான ரூ.*72,69,500/-* ஐ வழங்கவும்,

இ) தேவையான செலவீனத் தொகையான ரூ.*72,69,500/-*ஐ திரு. *K.*வீரபாபு சித்த மருத்துவர் அவர்களுக்கு வழங்குவதற்கு நிதி ஆலோசகருக்கு ஆணையிடவும்,

ஈ) மேலும், திரு.*K.*வீரபாபு சித்த மருத்துவர் அவர்களுக்கு ஜுன் மற்றும் ஜுலை மாதத்திற்கு உரிய தொகையான ரூ.*66,09,750/-*யை இருதவணையாக *(08.01.2021* மற்றும் *08.03.2021)* வழங்கப்பட்டதற்கு பின்னேற்பு அனுமதியும், ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் *2020* மாதத்திற்கான செலவீனத் தொகை வழங்குவதற்கு அனுமதியும்,

மேற்கண்ட அ முதல் ஈ வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 22.04.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"அ முதல் ஈ வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*******

க.து.ந.க..எண்.பி1/450/2021

**தீர்மானஎண்.429A/2021** **நாள்:22-04-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - COVID-19 - கட்டடத்துறை - கொரோனா வைரஸின் இரண்டாவது அலையின் தாக்கத்தால் பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டவர்கள் பயன்படுத்த தலையணை, தலையணை உறை, போர்வை மற்றும் படுக்கை விரிப்பு, டவல் ஆகியவை கொள்முதல் செய்யும் பணிக்காக ரூ.77,42,428.00/-(Inculding GST)க்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி சென்னை, அண்டை மாவட்டங்கள் மற்றும் மாநிலங்களிலும் கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கை அதிகமாகி வரும் சூழ்நிலையில் கட்டில்கள் கொள்முதல் செய்வதில் சிறிது தாமதம் ஏற்பட்டாலும் நோயாளிகளை தனிமைப்படுத்துதல் மற்றும் கொரோனா பரவுதலை கட்டுப்படுத்துதலை பாதிக்கும் என்பதாலும் அப்படி தனிமைப்படுத்தாவிடில் அவர்கள் பலருக்கு தொற்றினை ஏற்படுத்தி அதனால் ஆகும் மனித பாதிப்பும் செலவீனமும் கணக்கில் கொள்ள முடியாத அளவிற்கு இருக்கும் என்றும் உயர் அதிகாரிகள் ஆலோசனை வழங்கியுள்ளார்கள்.

இப்பணிக்கான தலைமைச்செயலர் தலைமையில் நடந்த கூட்டத்தில் உடனடியாக பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு தேவையான பொருட்கள் வழங்க தயார் நிலையில் வைக்க உத்தரவிடப்பட்டது.

மேலும், அதற்கான தலைமைச் செயலர் அவர்கள் மற்றும் முதன்மை செயலர் (வணிக வரி) அவர்கள் தலைமையில் 15 மண்டலங்களுக்கும் தனித்தனியாக IAS அதிகாரிகள் தலைமையில் FST உருவாக்கப்பட்டுள்ளது. அதில் உள்ள அதிகாரிகள் கள ஆய்வு செய்து பல இடங்களில் ஆக்ஷிஜன் வசதி கொண்ட படுக்கைகள் மற்றும் தேவையான பொருட்கள் தயார் நிலையில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

அதனால் கொரோனா வைரஸ் தாக்கத்தால் பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டவர்கள் பயன்படுத்த தலையணை, தலையணை உறை, போர்வை, படுக்கை விரிப்பு மற்றும் டவல் ஆகியவை கொள்முதல் செய்யும் பணி மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இதனடிப்படையில் தலையணை, தலையணை உறை, போர்வை மற்றும் படுக்கை விரிப்பு, டவல் ஆகியவை கொள்முதல் செய்யும் பணிக்காக, ஏற்கனவே Covid-19 பணிகளுக்காக ஒப்புதல் பெறப்பட்ட விலைக்கே தற்போது நிர்வாக அனுமதி பெற்று பணி மேற்கொள்ளலாம் என கருதப்படுகிறது.

கொரோனா வைரஸ் தாக்கத்தால் பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டவர்கள் பயன்படுத்தப்படும் தலையணை, தலையணை உறை, போர்வை மற்றும் படுக்கை விரிப்பு, டவல் ஆகிய பொருட்களுக்கு ஏற்கனவே ஒப்புதல் பெறப்பட்ட விலைக்கே பொருட்களின் விவரம் கீழ்க்கண்டவாறு பட்டியலிடப்பட்டுள்ளது.

| வ. எண். | பொருட்களின் விவரம் | எண்ணிக்கை | விலையின் விவரம் | | | | மொத்த தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| | | | விலை | தொகை | GST | | |
| 1 | Pillow | 20000 | 95.93 | 19,18,600.00 | 18% | 3,45,348.00 | 22,63,948.00 |
| 2 | Pillow cover | 20000 | 55.54 | 11,10,800.00 | 5% | 55,540.00 | 11,66,340.00 |
| 3 | Bed sheet | 20000 | 170.00 | 34,00,000.00 | 5% | 1,70,000.00 | 35,70,000.00 |
| 4 | Towel | 20000 | 35.34 | 7,06,800.00 | 5% | 35,340.00 | 7,42,140.00 |
| **மொத்தம்** | | | | **71,36,200.00** | | **6,06,228.00** | **77,42,428.00** |

மேற்கண்ட பட்டியலில் உள்ள பொருட்களை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான மருத்துவமனைகள் மற்றும் பல்வேறு கல்லூரிகள், விடுதிகள் ஆகிய இடங்களில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டவர்களுக்கு இந்த பொருட்களை கட்டடத்துறை மூலமாக கொள்முதல் செய்து வழங்க வேண்டியுள்ளது.

**<u>க.து.ந.க..எண்.பி1/450/2021</u>**

எனவே,

1) மேற்கண்ட பட்டியலில் உள்ள பொருட்களை கொள்முதல் செய்யும் பணிக்காக ரூ.77,42,428.00/-(Inculding GST) (ரூபாய் எழுபத்தி ஏழுஇலட்சத்து நாற்பத்தி இரண்டாயிரத்து நாநூற்று இருபத்தி எட்டு மட்டும்)க்கு நிர்வாக அனுமதி வேண்டியும்,

2) அரசு கடித எண்.74./JS(MA)/Finance(Salaries/ 2020,நாள்.01.04.2020 Sec 16 (a) TNTT Actன்படி நேரடியாக கொள்முதல் செய்யவும், பணி மேற்கொள்ளவும்,

3) பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி இப்பணிக்காக ஏற்கனவே Covid-19 பணிகளுக்காக ஒப்புதல் பெறப்பட்ட விலைக்கே உடனடியாக பணி ஆணை வழங்கி பணியினை மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 21.04.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

*******

**பொ.து.ந.க.எண்.ஈ2/ 11303/ 2021**

**தீர்மான எண்.430 / 2021** **நாள்:23-04-2021**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - வகுப்பு -2 - திருமதி. E. நிர்மலா, உதவி வருவாய் அலுவலர் - வடக்கு வட்டார அலுவலகம் அவர்கள் 26.04.2021 அன்று பிற்பகல் முதல் தன் விருப்ப ஓய்வில் செல்ல அனுமதி.**

வட்டார துணை ஆணையர் (வடக்கு) அவர்களின் 15.04.2021 நாளிட்ட கடிதத்தில், திருமதி. E. நிர்மலா, உதவி வருவாய் அலுவலர், வடக்கு வட்டார அலுவலகம், என்பவர் தன் இரண்டு மகள்களுக்கு திருமணம் செய்ய கடன் பெற்றதாகவும், அந்த கடனை திருப்பி செலுத்த வேண்டியுள்ளதாகவும், அன்னாருக்கு 57 வயதாகிய நிலையில், 37 வருடம் பணிபுரிந்துள்ளதால் தன்னை பெருநகர சென்னை மாநகராட்சி உதவி வருவாய் அலுவலர் பணியிலிருந்து தன் விருப்ப ஓய்வில் செல்ல அனுமதிக்குமாறு சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களுக்கு 27.01.2021 அன்று மனு சமர்ப்பித்தார் எனவும் தெரிவிக்கப்பட்டது. இதன்தொடர்பாக, தனியரை 26.04.2021 அன்று பிற்பகல் முதல் தன் விருப்ப ஓய்வில் செல்ல சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் அனுமதி பெற்று தர கோரி கோப்பு பெறப்பட்டது.

திருமதி. E. நிர்மலா அவர்கள் 14.11.1983 அன்று பெருநகர சென்னை மாநகராட்சியில் பணியில் சேர்ந்தார். தனியரது தாய்மொழி தமிழ் ஆகும்.

தனியர் தன் விருப்ப ஓய்வுக்கு விண்ணப்பித்த நாளன்று 57 வயதினை பூர்த்தி செய்துள்ளார். தனியரின் மொத்த பணிக்காலம் 37 ஆண்டுகள் 05 மாதங்கள் 12 நாட்கள் ஆகும். தனியரின் பிறந்த நாள்- 27.05.1963. அரசு பணிவிதிகளின்படி தனியர் வயது முதிர்வில் ஓய்வு பெறும் தகுதியான நாள் 31.05.2023.

அரசாணை எண்.350, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள்.07.10.1991ன் படி, அரசு ஊழியர் தன் விருப்ப ஓய்வில் செல்ல 50 வயது பூர்த்தி அடைந்து அல்லது 20 வருட கால பணியினை முடித்து இருக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியர் பணிபுரிந்த மண்டலங்கள்/துறைகளின் விவரங்கள் பின்வருமாறு:

| வ. எண் | பதவி | துறை/மண்டலம் | பணிபுரிந்த காலம் |
|---|---|---|---|
| 1. | பதிவுரு எழுத்தர் | தேர்தல் | 14.11.1983 - 28.02.1984 |
| 2. | அட்டன்டர் | கல்வித்துறை | 01.03.1984 - 07.05.1986 |
| 3. | | மத்திய கணக்கு குழுமம் | 08.05.1986 - 20.02.1990 |
| 4. | | மண்டலம் - 4 (பழைய மண்டலம் -1) | 21.02.1990 - 24.05.1992 |
| 5. | | பொதுத்துறை | 25.05.1992 - 22.12.1994 |
| 6. | இளநிலை உதவியாளர் | மத்திய கணக்கு குழுமம் | 23.12.1994 - 09.09.1998 |
| 7. | உதவியாளர் | மண்டலம் - 4 (பழைய மண்டலம் -1) | 10.09.1998 - 23.09.2002 |
| 8. | | கல்வித்துறை | 24.09.2002 - 10.12.2002 |
| 9. | | மத்திய கணக்கு குழுமம் | 11.12.2002 - 13.05.2003 |
| 10. | | மண்டலம் - 4 (பழைய மண்டலம் -1) | 14.05.2003 - 07.01.2008 |
| 11. | உரிமம் ஆய்வாளர் | மண்டலம் - 13 (பழைய மண்டலம் -10) | 08.01.2008 - 03.12.2009 |
| 12. | வரி மதிப்பீட்டாளர் | மண்டலம் - 6 (பழைய மண்டலம் -3) | 04.12.2009 - 20.12.2011 |
| 13. | | மண்டலம் - 3 | 21.12.2011 - 31.05.2013 |
| 14. | | மண்டலம் - 2 | 01.06.2013 - 19.02.2014 |
| 15. | | மண்டலம் - 1 | 20.02.2014 - 19.10.2014 |
| 16. | | வட்டார அலுவலகம் (வடக்கு) | 20.10.2014 - 28.05.2015 |
| 17. | உதவி வருவாய் அலுவலர் | வட்டார அலுவலகம் (வடக்கு) | 29.05.2015 - 04.01.2016 |
| 18. | | மண்டலம் – 2 | 05.01.2016 - 07.02.2017 |
| 19. | | வட்டார அலுவலகம் (தெற்கு) | 08.02.2017 - 02.01.2018 |
| 20. | | வட்டார அலுவலகம் (வடக்கு) | 03.01.2018 - 08.03.2019 |
| 21. | | மண்டலம் – 3 | 08.03.2019 - 11.07.2019 |

| | | | |
|---|---|---|---|
| 22. | உதவி வருவாய் அலுவலர் | மண்டலம் - 1 | 11.07.2019 – 07.08.2019 |
| 23. | | மண்டலம் - 2 | 07.08.2019 – 03.12.2019 |
| 24. | | வட்டார அலுவலகம் (வடக்கு) | 03.12.2019 – இந்நாள் வரை |

மேலும், தனியருக்கு 14.11.1983 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்தும், 14.11.1985 முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டார்.

இணை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை அவர்களின் 15.03.2021 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக, தனியரின் பணிப்பதிவேடு முன் தணிக்கை செய்து, சான்று பெறப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி, கூட்டுறவு அலுவலக சங்கத்தின் 30.03.2021 நாளிட்ட கடிதத்தில், தனியர் உறுப்பினராக இல்லை என்று சான்று அளிக்கப்பட்டுள்ளது.

இயக்குநர், விழிப்பு மற்றும் ஊழல் தடுப்பு இயக்ககம் அவர்களின் 30.03.2021 நாளிட்ட கடிதத்தின்படி, தனியர் மீது விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிதி ஆலோசகர் அவர்களின் 03.04.2021 நாளிட்ட குறிப்பில், தனியர் உரிமம் ஆய்வாளர் முதல் உதவி வருவாய் அலுவலராக பணிபுரிந்த காலங்களில் 2007-2008 முதல் 2018-2019 ஆம் ஆண்டு வரையிலான தணிக்கை அறிக்கை குறித்த பத்திகள், இவ்வலுவலகத்தில் உள்ள உள்ளாட்சி நிதித் தணிக்கை அறிக்கைகளின்படி, கீழ்கண்ட அட்டவணையில் உள்ளவாறு 1 தணிக்கைத்தடைப் பத்தி தனிப்பொறுப்பில் நிலுவையில் உள்ளது.

| வ. எண் | மண்டலம்/ துறைகள் | ஆண்டு | பத்தி எண். | தணிக்கைக்கு உட்படுத்தப்பட்டத் தொகை ரூ. | தடைக்கு பொறுப்பான பணியாளர்களின் எண்ணிக்கை மொத்தம் | திருமதி. E. நிர்மலா, உதவி வருவாய் அலுவலரை பொறுப்பாக்கும் தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1 | ப.மண்டலம் -10<br>பு.மண்டலம் -13 | 2007 - 2008 | 11 | - | - | - |
| மொத்தம் | | | 1 | - | - | - |

மேலும் 2019-2020, 2020-2021 மற்றும் 2021-2022 ஆம் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்படாததால், தனியரை பொறுப்பாக்கும் தணிக்கைத்தடை பத்திகள் ஏதும் நிலுவயில் இல்லை என்ற சான்று பெறப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விழிப்பு அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் 14.04.2021 நாளிட்ட கடிதத்தில், தனியர் மீது இன்றைய தேதியில் பெருநகர சென்னை மாநகராட்சி விழிப்புக்குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியரின் 21.04.2021 நாளிட்ட உறுதிமொழி பத்திரத்தில், தான் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் – 5, வருவாய்த் துறையில் உதவி வருவாய் அலுவலராக பணிபுரிந்து 26.04.2021 அன்று தன் விருப்ப ஓய்வு செல்ல இருக்கும் தனக்கு ஓய்வூதிய பணப்பயன்கள் மற்றும் இதர பணப்பயன்கள் மிகையாக வழங்கப்பட்டது என பின்னர் தெரியரிவன், அத்தொகையினை ஒரே தவணையில் பெருநகர சென்னை மாநகராட்சியின் கருவூலத்தில் செலுத்திவிடுவேன் என தெரிவித்துள்ளார்.

தனியர் தன் விருப்ப ஓய்விற்கு 90 நாட்கள் முன்னறிவிப்புடன் சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களுக்கு கடிதம் அளித்துள்ளதால், தனியரை 26.04.2021 அன்று பணியிலிருந்து விடுவிக்க வேண்டியுள்ளது. மேலும், தனியர் வகுப்பு 2ஐ சார்ந்த அலுவலர் என்பதால் தனியரை வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கும் அதிகாரம் பெருநகர சென்னை மாநகராட்சி சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் வசம் உள்ளது.

**பொ.து.ந.க.எண்.ஈ2/ 11303/ 2021**

ஆகவே, நிதி ஆலோசகர் அவர்களின் *03.04.2021* நாளிட்ட குறிப்பின்படி, திருமதி. *E.* நிர்மலா, உதவி வருவாய் அலுவலர், வட்டார துணை ஆணையர் (வடக்கு) அவர்கள் தன் விருப்ப ஓய்வில் செல்ல சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களிடம் விண்ணப்பித்துள்ளபடி, தனியர் உரிமம் ஆய்வாளர் முதல் உதவி வருவாய் அலுவலராக பணிபுரிந்த காலங்களில் *2007-2008* முதல் *2018-2019* ஆம் ஆண்டு வரையிலான தணிக்கை அறிக்கை குறித்த பத்திகள், இவ்வலுவலகத்தில் உள்ள உள்ளாட்சி நிதித் தணிக்கை அறிக்கைகளின்படி, *1* தணிக்கைத்தடைப் பத்தி தனிப்பொறுப்பில் நிலுவையில் உள்ளதையும் மற்றும் *2019-2020*, முதல் *2021-2022* ஆம் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் வெளியிட்ட பின்னர், தணிக்கைத் தடைப் பத்திகள் ஏதேனும் பணியாளரை சார்ந்தது என்பது பின்னர் தெரியவரும் பட்சத்திலும், மேலும் தனியர் மீது முன்பண நிலுவை இருப்பது தெரியவரின், அதற்கும் தனியர் மீது பொறுப்பு நிர்ணயிக்கப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டும், தனியரை *26.04.2021* அன்று பிற்பகல் தன் விருப்ப ஓய்வில் செல்ல சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 23.04.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"தன் விருப்ப ஓய்வில் செல்ல, சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*******

**Br.D.C.No.B3/ 722/ 2006**

**Resolution No.431/2021** **Date:27-04-2021**

**Greater Chennai Corporation – Bridges Department – Arbitration case between M/s.Gammon India Ltd., and Corporation of Chennai in the work of Construction of 4 Nos. of Grade Separators in Chennai City – Award of Adjudicator on claims made by M/s.Gammon India Limited – Not accepted – Arbitration invoked – Arbitral Tribunal constituted – Hearings completed - Award given by the Aribitral Tribunal - Not accepted - Challenged the award in the High Court - Orders received from High Court of Madras to pay the amount awarded by the Arbitral Tribunal - Rs.2,78,35,019/- to be paid to the contractor – For orders.**

The work of Construction of 4 Nos. of Grade Separators at the following locations were awarded to the contractor M/s.Gammon India Limited, Mumbai.

1. North Usman Road – Kodambakkam High Road junction.
2. Usman Road – Duraisamy Road junction.
3. G.N.Road – Thirumalai Road junction.
4. Pasumpon Muthuramalingam Salai – Turnbulls Road junction.

These works were commenced in Feb'2007 and completed in Nov' 2009.

M/s.Gammon India Limited vide letter dated.19.10.2009, claimed a set of claims amounting to Rs.16,18,76,295 towards loss of overhead, profit, idling of machinery and reduced productivity. The claim was rejected by Corporation of Chennai. The contractor had invoked an Adjudication before the Adjudicator appointed for the work. The Adjudicator vide proceedings dated.23.09.2010, awarded an amount of Rs.11,56,25,925/- to M/s.Gammon India Limited towards loss of overhead, profit, idling of machinery and reduced productivity. As the award of the Adjudicator was not acceptable to Corporation of Chennai, orders of the Commissioner were obtained on 30.10.2010 to invoke Arbitration proceedings.

Orders of the Commissioner on 02.02.2011 were obtained to appoint Dr.D.Thirunakkarasu, Ph.D., (Engg), B.E., M.E., B.L., F.I.V., F.I.I.T., Arb., Retd., Deputy Director, Highways Research Station as the Arbitrator nominee for Corporation of Chennai in the arbitration case.

M/s Gammon India Limited have appointed Er.A.Sampath Kumar, B.E., FIE., F.I.V as their nominee Arbitrator to arbitrate the arbitration case vide Letter No.WSS/G/VM/8541/167, dated 03.03.2011.

The Arbitrator nominees of Corporation of Chennai and M/s Gammon India Limited after discussions choose Er.A.V.Rangaraju, BE, FIE, FIV, MICC, Retired Chief Engineer (Highways), Former Director, Highways Research Station, to be the Presiding Arbitrator of the tribunal. Er.A.V.Rangaraju conveyed his consent vide Proceedings of the Arbitral Tribunal, received on 09.05.2011.

In the Proceedings of the Arbitral Tribunal, dated 05.04.2011, it was informed that the Arbitral Tribunal with Er.A.V.Rangaraju as Presiding Arbitrator, Dr.D.Thirunakkarasu as Co-Arbitrator and Er.A.Sampath Kumar as Co-Arbitrator has been constituted to hear the disputes arising between the parties to Contract in respect of Agreement entered into between Corporation of Chennai and M/s. Gammon India Limited for the work of "Construction of 4 Nos. Grade Separators in Chennai City" has come into existence from 15.04.2011 onwards.

Orders of the Commissioner dated.30.04.2011 were obtained to appoint Mrs.Malini Ganesh as advocate to argue the Arbitration case on behalf of Corporation of Chennai.

A preliminary meeting of the Tribunal with the concerned parties was held on 26.04.2011. In the proceedings of the meeting of the Tribunal received on 09.05.2011, it has been intimated, that the fees for the Arbitrators shall be fixed at the 1.5% of the total claim to be shared by all the Arbitrators equally. On receipt of the claim petition the fee shall be intimated to the parties. The fee shall be paid in two installments. The amount in dispute is Rs.12,68,93,392/-. The approximate fees for the Arbitrators will be around Rs.20,00,000/-.

M/s.Gammon India Ltd. have submitted the claim statement to the Arbitral Tribunal and Corporation of Chennai vide letter dated.06.07.2011 and Corporation of Chennai submitted the Counter Statement prepared by the Advocate Mrs.Malini Ganesh to the Arbitral Tribunal and M/s.Gammon India Ltd vide this office letter dated.10.08.2011.

Totally 9 hearings were held by the Arbitral Tribunal and completed the case. An Award has been published by the Arbitral Tribunal dated.15.02.2014, received on 28.02.2014. In the Award the Arbitral Tribunal have awarded an amount of Rs.1,64,85,124/- as against the amount of Rs.12,68,98,362/- plus interest claimed by the contractor.

Mrs.Malini Ganesh, Advocate opined that, the award can be challenged successfully based on the following facts vide opinion dated 25.03.2014.

i. The Tribunal has not done their job well and has made a very convenient award which on the face of it intended to favour of the claimant.
ii. The basic fact of the case has been wrongly stated in the award and the Tribunal has avoided reference to all the defenses taken by our side while arguing the claims.
iii. The Tribunal has misconstrued the compensation paid to the Claimant during the first adjudicatory process which misinterpretation seems to be deliberate and goes to the very root of the award.
iv. The Tribunal has not given any reasons for deciding the entitlement of the Claimant on Claim Nos. 1 and 2.
v. The Tribunal has not given any valid reasons for their decision in favour of the Claimant.

Hence it was decided to challenge this award before the High Court. Mrs.Malini Ganesh, Advocate who has been engaged for advocate for this Arbitration case was appointed for arguing the case in the High Court on behalf of Corporation of Chennai.

In the Hon'ble High Court of Madras order dated 17.02.2021 in O.P.No.377 of 2014, stated as " this section 34 Court is of the considered view that the lone ground which impugned award is assailed fails and the captioned OP deserves to be dismissed."

The summary of the Arbitral Tribunal award dated 15.02.2014 is given below

| Sl. No. | Claim Description | Amount claimed by the claimant | Amount awarded by the Arbitral Tribunal | Remarks |
|---|---|---|---|---|
| 1 | Claim towards reimbursement of<br>i Uncovered overhead and loss of profit for the period from Feb 2007 to Oct 2009 amounting to Rs.6,93,75,555/- | 11,56,25,925/- | 1,20,00,000/- | The Tribunal has awarded this amount without assigning any reasons and awarded as a lump sum compensation to |

| | | | | |
|---|---|---|---|---|
| | ii Loss due to the idling of Machinery and for reduced productivity @ 10% from Feb.2007 to Oct.2009 amounting to Rs.4,62,50,370/- | | | meet the ends of the justice. |
| 2. | Claim towards difference in value of contract for the Pasumpon Muthuramalingam Salai-Turnbulls Road junction flyover (Turnbulls Road-Cenetoph Road junction) | 39,24,887/- | 39,24,887/- | The Tribunal has not given any reasons to award this amount. |
| 3. | Claim towards difference in escalation cost paid | 45,67,782/- | NIL | |
| 4. | Claim towards interest for the unpaid price escalation | 24,12,245/- | NIL | |
| 5. | Claim towards difference in amount of variation and non-tendered items. | 3,62,523/- | NIL | |
| 6. | Claim towards interest from cause of action to date of award and post award period. | To be quantified | 5,60,237/- | The Tribunal has not given any reasons to award this amount. |
| 7. | Cost of Arbitration | To be quantified | NIL | |
| | **Total Award** | **12,68,98,362** | **1,64,85,124** | |

M/s.Gammon India Ltd. vide letter dated.11.03.2021, has requested to pay Rs.2,78,35,019/- based on the above High Court order dated 17.02.2021 (Arbitration amount of Rs.1,64,85,124 and interest @ 10% p.a. commencing from 3 months from the date of award (i.e.) from 15.05.2014 to 31.03.2021 - Rs.1,13,49,895/-) plus GST as applicable as per GST Act.

As this payment is being made for the Award of Arbitration as per the orders of the High Court and no service has been rendered by the M/s.Gammon India Ltd., the question of GST does not arise.

The Advocate appointed for Greater Chennai Corporation vide lettere dated.23.03.2021, has clarified that *"When the Court asked a question on whether COC did not file any O.P. challenging the said award, efforts to present an application within the prescribed time and the condonable cap ran into rough weather and therefore, for all practicable purposes, there is no cross O.P. (Note: Infact the O.P. filed by COC had been misplaced by the High Court section and all our sincere efforts to retrieve the same for years were in vain (O.P D.No.17623/2014 on 30/04/2014)).*

*The rest of the parts of the order passed by the Single Judge of High Court, Madras make it very clear that there is no scope for interference by the Hon'ble High Court of Judicature at Madras in the award.*

*Infact even COC's challenge to the award would have resulted only in a similar finding. Since the scope of interference by the Court under Sec 34 of the Arbitration & Conciliation Act is very limited. Even assuming that COC had filed a cross O.P. under Sec34, the same would not have had any impact on the award being uphold by the High Court as has been now in the O.P. filed by Gammon.*

*On a perusal of letter dated 11.03.2021, by Gammon to yourselves, it appears that Gammon is not challenging the order dated 17.02.2021 in O.P.377/2014 by the single Judge by preferring any Original Side Appeal.*

*The contents of para 18 of the said order refers to the fact that if at all COC had challenged the award, the award of Rs.1.20 Crores which is a part of Claim No.1 should have also passed the rigor of the above challenge. This will simply mean that the Court*

*would have reviewed whether at all the Hudson's formula approach by the AT is correct or not. It is to be noted that under the limited scope of Sec 34, the reversal of Hudson's formula approach usually will not happen."*

Hence, there is no scope for further appeal in this case.

The amount payable to M/s.Gammon India Ltd., as per the orders of the High Court is as follows:

| Claim No. | Description | Amount Awarded in Rs. |
|---|---|---|
| 1 | Award Amount (A) | 1,64,85,124/- |
| 2 | Interest @ 10% p.a. commencing from 3 months from the date of award i.e. from 15.05.2014 to till 31.03.2021 (B) | 1,13,49,895/- |
| **Total Amount (A+B)** | | **2,78,35,019/-** |

Hence,

1. To pay the amount of Rs.2,78,35,019/- based on the High Court Order dated 17.02.2021 (Arbitration Award - Rs.1,64,85,124/- and interest @10% p.a. commencing from 3 months from the date of award (i.e.) from 15.05.2014 to 31.03.2021 - Rs.1,13,49,895/-) for the construction of 4 Nos. of Grade Separators in Chennai City.
2. To meet out the expenditure of Rs.2,78,35,019/- from the Capital Fund of Greater Chennai Corporation.

Sl.No 1 & 2 above, orders of the Special Officer- Standing Committee (Works), Standing Committee (Taxation and Finance) and Council are requested. Commissioner's Note dated.26.04.2021 is read.

**"Sl.No. 1 & 2 are approved by Special Officer-Standing Committee (Works), Standing Committee (Taxation and Finance) and Council."**

*******

**ம.வ.அ.ந.க.எண். ஆர்1/ 1940/2021**

**தீர்மானஎண்.432/2021** **நாள்:27-04-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மத்திய வட்டார அலுவலகம். -கொரோனா நோய் தடுப்பு பணி - பேரிடர் பணிகள் மேற்கொள்ளவும் - அவசர அவசியம் கருதி 6 முதல் 10 வரையிலான மண்டலங்களில் கொரோனா தடுப்பு தன்னார்வலர்களை (Focus Volunteers) 16.04.2021 முதல் 15.07.2021 வரையில் மூன்று மாத காலத்திற்கு மண்டல அலுவலர் மூலம் அந்தந்த மண்டலத்திலேயே சிறப்பு அதிகாரி/மன்றத்தின் பின்னேற்பு ஆணையினை எதிர்நோக்கி ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தமைக்கு பின்னேற்பு அனுமதி.**

கொரோனா வைரஸ் காய்ச்சல் (*COVID -19*) இரண்டாம் அலை பல நாடுகளில் பரவியுள்ள நிலையில் உலக சுகாதார நிறுவனம் (*WHO*) உலகமெங்கும் அவசர நிலையினை (*Public Health Emergency of International Concern (PHEIC)*) பிரகடனப்படுத்தியுள்ளது. மேலும் கட்டுப்படுத்தக்கூடிய தொற்று நோயாகவும் (*Controllable Pandemic*) அறிவித்துள்ளது. நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை (*P1*) அரசாணை (*Ms*) எண்.*95*, நாள்.*13.03.2020*ல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (*COVID - 19*) அறிவிக்கப்பட்ட நோயாக (*Notified disease*) அறிவிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் இரண்டாம் அலை தாக்கம் தற்போது அதிகரிக்க தொடங்கியுள்ளது. இதன் காரணமாக பெருநகர சென்னை மாநகராட்சியால் பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கோவிட் நோய் தடுப்பு பணிகளுக்கென வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டவர்களை கண்காணிக்கும் திட்டத்தின் கீழ் *Focus Volunteers (Friend of Covid Citizen under Surveillance)* தன்னார்வலர்களை ஐந்து தெருக்களுக்கு ஒருவர் வீதம் 1 முதல் 15 மண்டலங்களில் 4000 நபர்களை கோவிட்-19 நோய் தொற்றின் போது கடந்த ஆண்டு இப்பணிக்கென நியமிக்கப்பட்டிருந்தனர். இந்த தன்னார்வலர்கள் நோய் அதிகம் பாதிக்கப்பட்ட தெருக்களில் உள்ள ஒவ்வொரு வீடுகளை கண்காணிப்பதோடு வீட்டில் உள்ளவர்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் பணிகளை மேற்கொண்டு வந்தனர். இதனால் நோய் பாதிக்கப்பட்டவர்கள் வெளியில் செல்லாமல் இருந்த காரணத்தினால் கொரோனா நோயினை வெகுவாக கட்டுப்படுத்த முடிந்தது. மேற்படி தன்னார்வலர்கள் மண்டல உதவி வருவாய் அலுவலர்களின் கட்டுப்பாட்டில் பணிபுரிந்தனர்.

தற்போது கோவிட் இரண்டாம் அலை பணிக்கென முதற்கட்டமாக வார்டு ஒன்றிற்கு பத்து தன்னார்வலர்கள் வீதம் 200 வார்டுகளுக்கு 2000 தன்னார்வலர்கள் பணியமர்த்த ஆணையர் அவர்களால் 12.04.2021 அன்று நடத்தப்பட்ட கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. அதனடிப்படையில், மண்டலம் *6* முதல் *10* மண்டலங்களில் உள்ள 79 வார்டுகளுக்கு 790 தன்னார்வலர்களை மூன்று மாத காலத்திற்கு பணியமர்த்தலாம்.

பெருநகர சென்னை மாநகராட்சியில், பொதுசுகாதாரத்துறையில் 1 முதல் 15 மண்டலங்களில் 3577 கொசு ஒழிப்பு பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இதில் 2326 தற்காலிக பணியாளர்கள் *NULM* மூலம் பணியமர்த்தப்பட்டுள்ளனர். இந்த பணியாளர்கள் சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் குறைந்தபட்ச தினக்கூலி ஊதிய அடிப்படையில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் 07.07.2020 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி *2020-2021* ம் ஆண்டிற்கான குறைந்தபட்ச ஊதிய நிர்ணயத்தில், கொசு ஒழிப்பு பணியாளர்களுக்கு தினக்கூலியாக ஒரு நாளைக்கு ரூ.*391/-* என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. எனவே, ஒரு மாத கால ஊதியம் *30x391=* ரூ.*11,730/-*ஆகும். மாநகராட்சி மூலம் பணியமர்த்தப்படும் கொசு ஒழிப்பு பணியாளர்களும் இந்த சம்பள அடிப்படையிலேயே பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

எனவே, கொரோனா நோய் இரண்டாம் அலை தடுப்பு நடவடிக்கைக்காக மத்திய வட்டாரத்திற்குட்பட்ட மண்டலம் 6 முதல் 10 வரையான 79 வார்டுகளுக்கு 790 தன்னார்வலர்களை மாதம் ரூ.*11,730/-* சம்பளத்தில் ஒப்பந்த அடிப்படையில் *3* மாத காலத்திற்கு பணியமர்த்தலாம் என சமர்ப்பிக்கப்படுகிறது. இப்பணிக்கென கீழ்க்கண்ட அளவில் செலவினம் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

| S No | Zone | Number of Focus Volunteers | Salary Per Person Per Month (Rs.) | Total Salary Per Month (Rs.) | Total Salary for 3 Months (Rs.) |
|---|---|---|---|---|---|
| 1 | 6 | 150 | 11,730 | 17,59,500 | 52,78,500 |
| 2 | 7 | 150 | 11,730 | 17,59,500 | 52,78,500 |
| 3 | 8 | 150 | 11,730 | 17,59,500 | 52,78,500 |
| 4 | 9 | 180 | 11,730 | 21,11,400 | 63,34,200 |
| 5 | 10 | 160 | 11,730 | 18,76,800 | 56,30,400 |
| | Total | 790 | | 92,66,700 | 2,78,00,100 |

நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை *(P1)* துறையின் அரசாணை *(Ms)* எண்.*95*, நாள்.*13.03.2020* மற்றும் நிதித்துறை கடிதம் எண்.*74/JS(MA)/Finance(Salaries)/2020*, நாள்.*01.04.2020*ன்படியும், கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தங்கள் சட்டம் *1998* பிரிவு *16-a* ல் அவசர காலங்களில் செயல்பட ஒப்பம் கோரும் அலுவலருக்கு ஒப்ப விதிகளில் தளர்வு செய்து ஒப்பம் கோருவதில் இருந்து விலக்களித்து நேரடியாக கொள்முதல் செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

Tamil Nadu Transparency in Tenders Act, 1998 Sec:16 :"Provision of Act not to apply in certain cases: The provisions of section 9 and 10 shall not apply to procurement."

(f) During natural calamities and emergencies declared by the Government;

எனவே,

1) பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா நோய் இரண்டாம் அலை தொற்று தடுப்பு பணிகளை தீவிரப்படுத்தவும், அவசர அவசியம் கருதி மத்திய வட்டாரத்திற்குட்பட்ட மண்டலம் 6 முதல் 10 வரையிலான 79 வார்டுகளுக்கு 790 தன்னார்வலர்களை *(Focus Volunteers)* *16.04.2021* முதல் 15.07.2021 வரையிலான மூன்று மாத காலத்திற்கு மாவட்ட ஆட்சியர், சென்னை மாவட்டம், சென்னை *-1* அவர்களின் செயல்முறை ஆணை எண். *C2/7393/2018* நாள்.07.07.2020ன்படி நிர்ணயம் செய்யப்பட்ட குறைந்தபட்ச தினக்கூலி ரூ.391/- என்ற அடிப்படையில் மாத ஊதியம் ரூ. *11730/-* என நிர்ணயம் செய்து பணியமர்த்தியமைக்கு பின்னேற்பு அனுமதியும்,

2) அரசாணை *(Ms)* எண்.*161*, நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை *(H2)* நாள்.27.03.2020ன்படி கொரோனா வைரஸ் காய்ச்சல் *(COVID-19)* அறிவிக்கப்பட்ட நோயாக *(Notified disease)* அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தங்கள் சட்டம் *1998* பிரிவு *16-a* ல் அவசர காலங்களில் செயல்பட ஒப்பம் கோரும் அலுவலருக்கு ஒப்ப விதிகளில் தளர்வு செய்து கொள்முதல் செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டதின் அடிப்படையில் நேரடியாக *790* கொரோனா நோய் தடுப்பு தன்னார்வலர்களை *(Focus Volunteers)* *16.04.2021* முதல் *15.07.2021* வரையிலான *3* மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தியமைக்கு பின்னேற்பு அனுமதியும்,

3) ஏற்கெனவே இப்பணியில் ஈடுபட்டிருந்த தன்னார்வலர்களையே முன்னுரிமை அடிப்படையில் பணியமர்த்த அனுமதியும்,

4) மாதந்தோறும் சம்பந்தப்பட்ட மண்டல உதவி வருவாய் அலுவலர்களிடம் இருந்து சான்று பெற்று மண்டல அளவில் பட்டி தீர்வு செய்ய அனுமதியும்,

5) இப்பணிக்கான நிர்வாக செலவினம் ரூ. 2,78,00,100/- (ரூபாய் இரண்டு கோடியே எழுபத்தி எட்டு லட்சத்து நூறு மட்டும்) மேற்கொள்ள அனுமதியும்,

6) இதற்கான செலவினம் கோவிட்-19-க்கென ஒதுக்கப்பட்ட நிதியில் மண்டல அளவில் மேற்கொள்ள அனுமதியும் மற்றும் நிதி ஒதுக்கீடு செய்யவும்,

மேற்கண்ட 1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் பின்னேற்பு அனுமதி கோரிய ஆணையரது 26.04.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் பின்னேற்பு அனுமதி அளிக்கப்பட்டது".**

*******

**க.து.ந.க.எண்.பி1/450/5/2021**

**தீர்மானஎண்.432A/2021** **நாள்:27-04-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - COVID-19 மதிப்பீடு - 2020-2021 - கட்டடத்துறை - மண்டலம் -12 நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் கொரோனா வைரஸின் இரண்டாவது அலையின் தாக்கத்தால் பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப் பட்டுள்ளவர்களுக்காக Hall-1, Hall-2 and Hall-3 cubicle அறைகள் அமைக்கும் பணிக்கு ரூ.92,17,000/-க்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி சென்னை, அண்டை மாவட்டங்கள் மற்றும் மாநிலங்களிலும் கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கை அதிகமாகி வரும் சூழ்நிலையில் நோயாளிகளை தனிமைப்படுத்துதல் மற்றும் கொரோனா பரவுதலை கட்டுப்படுத்துதலை பாதிக்கும் என்பதாலும் அப்படி தனிமைப்படுத்தாவிடில் அவர்கள் பலருக்கு தொற்றினை ஏற்படுத்தி அதனால் ஆகும் மனித பாதிப்பும், செலவீனமும் கணக்கில் கொள்ள முடியாத அளவிற்கு இருக்கும் என்றும் உயர் அதிகாரிகள் ஆலோசனை வழங்கியுள்ளார்கள்.

இப்பணிக்கான தலைமைச்செயலர் தலைமையில் நடந்த கூட்டத்தில் உடனடியாக படுக்கைகள் தயார் நிலையில் வைக்க உத்தரவிடப்பட்டது.

மேலும், அதற்கான தலைமைச் செயலர் அவர்கள் மற்றும் முதன்மை செயலர் (வணிக வரி) அவர்கள் தலைமையில் 15 மண்டலங்களுக்கும் தனித்தனியாக IAS அதிகாரிகள் தலைமையில் FST உருவாக்கப்பட்டுள்ளது. அதில் உள்ள அதிகாரிகள் கள ஆய்வு செய்து பல இடங்களில் ஆக்ஷிஜன் வசதி கொண்ட படுக்கைகள் தயார் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது

இதனால் மண்டலம் -12 நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் கொரோனா வைரஸின் இரண்டாவது அலையின் தாக்கத்தால் பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களுக்காக Hall-1, Hall-2 and Hall-3ல் cubicle அறைகள் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. இப்பணிக்காக பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி மதிப்பீடு தயாரித்து நிர்வாக அனுமதி பெற்று பணி மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாசிறது. இப்பணிக்காக கீழ்க்கண்டவாறு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | பணியின் பெயர் | மண்டலம் -12 நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் கொரோனா வைரஸின் இரண்டாவது அலையின் தாக்கத்தால் பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப் பட்டுள்ளவர்களுக்காக Hall-1, Hall-2 and Hall-3 cubicle அறைகள் அமைக்கும் பணி. |
| 2 | பணியின் தொகை | ரூ. 78,10,549.00 |
| 3 | GST 18 % | ரூ. 14,05,899.00 |
| 4 | Contingencies | ரூ. 552.00 |
| 5 | மொத்தம் | **ரூ. 92,17,000.00** |
| 6 | நிதியின் தன்மை | COVID - 19 |

எனவே,

1. மண்டலம் -12 நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் கொரோனா வைரஸின் இரண்டாவது அலையின் தாக்கத்தால் பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப் பட்டுள்ளவர்களுக்காக Hall-1, Hall-2 and Hall-3ல் cubicle அறைகள் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள தோராய திட்ட மதிப்பீட்டிற்கு ரூ.92,17,000.00-க்கு (Inculding GST) (ரூபாய் தொண்ணூற்று இரண்டு இலட்சத்து பதினேழாயிரம் மட்டும்) நிர்வாக அனுமதியும்,

**<u>க.து.ந.க.எண்.பி1/450/5/2021</u>**

*2.* அரசு கடித எண்.74./JS(MA)/Finance(Salaries/ 2020,நாள்.01.04.2020 Sec 16 (a) TNTT Act ன்படி பணி ஆணை வழங்கி பணி மேற்கொள்ளவும்,

மேற்கண்ட *1* மற்றும் *2* ஆகிய இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் நிர்வாக அனுமதி கோரிய ஆணையரது 24.04.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"*1* மற்றும் *2* ஆகிய இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*******

**க.து.ந.க..எண்.பி1/450/1/2021**

**தீர்மானஎண்.432B/2021** **நாள்:27-04-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - COVID-19 - கட்டடத்துறை - கொரோனா வைரஸின் இரண்டாவது அலையின் தாக்கத்தால் பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டவர்கள் பயன்படுத்த Disposable Bedsheet & Pillow Cover கொள்முதல் செய்யும் பணிக்காக ரூ.59,64,000.00/- (Inculding GST)க்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி சென்னை, அண்டை மாவட்டங்கள் மற்றும் மாநிலங்களிலும் கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கை அதிகமாகி வரும் சூழ்நிலையில் கட்டில்கள் கொள்முதல் செய்வதில் சிறிது தாமதம் ஏற்பட்டாலும் நோயாளிகளை தனிமைப்படுத்துதல் மற்றும் கொரோனா பரவுதலை கட்டுப்படுத்துதலை பாதிக்கும் என்பதாலும் அப்படி தனிமைப்படுத்தாவிடில் அவர்கள் பலருக்கு தொற்றினை ஏற்படுத்தி அதனால் ஆகும் மனித பாதிப்பும், செலவீனமும் கணக்கில் கொள்ள முடியாத அளவிற்கு இருக்கும் என்றும் உயர் அதிகாரிகள் ஆலோசனை வழங்கியுள்ளார்கள்.

இப்பணிக்கான தலைமைச்செயலர் தலைமையில் நடந்த கூட்டத்தில் உடனடியாக பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு தேவையான பொருட்கள் வழங்க தயார் நிலையில் வைக்க உத்தரவிடப்பட்டது.

மேலும், அதற்கான தலைமைச் செயலர் அவர்கள் மற்றும் முதன்மை செயலர் (வணிக வரி) அவர்கள் தலைமையில் 15 மண்டலங்களுக்கும் தனித்தனியாக IAS அதிகாரிகள் தலைமையில் FST உருவாக்கப்பட்டுள்ளது. அதில் உள்ள அதிகாரிகள் கள ஆய்வு செய்து பல இடங்களில் ஆக் ஷிஜன் வசதி கொண்ட படுக்கைகள் மற்றும் தேவையான பொருட்கள் தயார் நிலையில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

அதனால் கொரோனா வைரஸ் தாக்கத்தால் பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டவர்கள் பயன்படுத்த Disposable Bedsheet & Pillow Cover ஆகியவை கொள்முதல் செய்யும் பணி மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இதனடிப்படையில் Disposable Bedsheet & Pillow Cover கொள்முதல் செய்யும் பணிக்காக, ஏற்கனவே Covid-19 பணிகளுக்காக ஒப்புதல் பெறப்பட்ட விலைக்கே தற்போது நிர்வாக அனுமதி பெற்று பணி மேற்கொள்ளலாம் என கருதப்படுகிறது.

கொரோனா வைரஸ் தாக்கத்தால் பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டவர்கள் பயன்படுத்தப்படும் Disposable Bedsheet & Pillow Cover இதற்காக ஏற்கனவே ஒப்புதல் பெறப்பட்ட விலைக்கே பொருட்களின் விவரம் கீழ்க்கண்டாவறு பட்டியலிடப்பட்டுள்ளது.

| வ. எண். | பொருட்களின் விவரம் | எண்ணிக்கை | விலையின் விவரம் | | | | மொத்த தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| | | | விலை | தொகை | GST | | |
| 1 | Disposable Bedsheet & Pillow Cover | 20000 | 284.00 | 56,80,000.00 | 5% | 2,84,000.00 | 59,64,000.00 |
| **மொத்தம்** | | | | **56,80,000.00** | | **9,29,276.00** | **59,64,000.00** |

மேற்கண்ட பட்டியலில் உள்ள பொருட்களை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான மருத்துவமனைகள் மற்றும் பல்வேறு கல்லூரிகள், விடுதிகள் ஆகிய இடங்களில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டவர்களுக்கு இந்த பொருட்களை கட்டடத்துறை மூலமாக கொள்முதல் செய்து வழங்க வேண்டியுள்ளது.

எனவே,

1. மேற்கண்ட பட்டியலில் உள்ள பொருட்களை கொள்முதல் செய்யும் பணிக்காக **ரூ.59,64,000.00/- (Inculding GST)** (ரூபாய் ஐம்பத்தி ஒன்பது இலட்சத்து அறுபத்தி நான்காயிரம் மட்டும்) க்கு நிர்வாக அனுமதி வேண்டியும்,

<u>க.து.ந.க..எண்.பி1/450/1/2021</u>

2. அரசு கடித எண்.74./JS(MA)/Finance(Salaries/ 2020,நாள்.01.04.2020 Sec 16 (a) TNTT Act ன்படி பணி நேரடியாக கொள்முதல் செய்யவும்பணி மேற்கொள்ளவும்,

3. பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி இப்பணிக்காக ஏற்கனவே Covid-19 பணிகளுக்காக ஒப்புதல் பெறப்பட்ட விலைக்கே உடனடியாக பணி ஆணை வழங்கி பணியினை மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் நிர்வாக அனுமதி கோரிய ஆணையரது 26.04.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*******

**பொ.து.ந.க.எண்.ஈ2/ 18461/ 2019**

**தீர்மான எண்.433/2021** **நாள்:30-04-2021**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - மருத்துவ சேவைகள் துறையில் பணிபுரியும் - மருத்துவ அலுவலர்களுக்கு பணிவரன்முறை மற்றும் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்க அனுமதி.**

பெருநகர மருத்துவ அலுவலர் கூடுதல் இயக்குநர் (பொ) அவர்களின் 10.07.2019 நாளிட்ட கடிதத்தில், மருத்துவ சேவைகள் துறையில் பணிபுரியும் டாக்டர்.எம்.கே.தேவிகா பிரியதர்ஷினி, டாக்டர்.வி.சங்கீதா மற்றும் டாக்டர்.சி.சந்தியாராணி, மருத்துவ அலுவலர்களுக்கு பணிவரன்முறை மற்றும் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவித்து ஆணை வழங்கக் கோரி கோப்பு பெறப்பட்டுள்ளது.

மருத்துவ சேவைகள் துறையில் பணிபுரியும் மருத்துவ அலுவலர்களின் பணிக்கால விவரங்கள் பின்வருமாறு:

| வ. எண். | பெயர்/பதவி திருவாளர்கள் | பணியில் சேர்ந்த நாள். | துறைத் தேர்வில் தேர்ச்சி பெற்ற நாள். |
|---|---|---|---|
| 1. | டாக்டர்.எம்.கே.தேவிகா பிரியதர்ஷினி, மருத்துவ அலுவலர் | 15.04.2013 மு.ப. | 1. மருத்துவ குறியீடு தேர்வு எழுதிய நாள்-மே 2014 (அறிக்கைத் தாள் (Bulletin) வெளியிடப்பட்ட நாள். 16.08.2014)<br>2. செயல் அலுவலர்களுக்கான கணக்குத் தேர்வு எழுதிய நாள். மே 2014 (அறிக்கைத் தாள் (Bulletin) வெளியிடப்பட்ட நாள். 16.08.2014) |
| 2. | டாக்டர்.வி.சங்கீதா மருத்துவ அலுவலர் | 14.05.2013 | 1. மருத்துவ குறியீடு தேர்வு எழுதிய நாள்-மே 2016 (அறிக்கைத் தாள் (Bulletin) வெளியிடப்பட்ட நாள். 16.08.2014)<br>2 செயல் அலுவலர்களுக்கான கணக்குத் தேர்வு எழுதிய நாள்.மே 2016 (அறிக்கைத் தாள் (Bulletin) வெளியிடப்பட்ட நாள். 16.08.2016) |
| 3. | டாக்டர்.சி.சந்தியாராணி மருத்துவ அலுவலர் | 01.10.2014 மு.ப. | 1. மருத்துவ குறியீடு தேர்வு எழுதிய நாள்-டிசம்பர் 2015 (அறிக்கைத் தாள் (Bulletin) வெளியிடப்பட்ட நாள். 16.03.2016)<br>2 செயல் அலுவலர்களுக்கான கணக்குத் தேர்வு எழுதிய நாள் டிசம்பர் 2015 (அறிக்கைத் தாள் (Bulletin) வெளியிடப்பட்ட நாள். 07.03.2016)<br>3. தமிழ் மொழி தேர்வு பகுதி 1 (ம) 2 தேர்ச்சி பெற்ற நாள். மே 2017 (அறிக்கைத் தாள் (Bulletin) வெளியிடப்பட்ட நாள். 16.08.2017)<br>4. தமிழ் மொழிக்கான வாய் மொழியிலான தேர்வு - 24.08.2017 |

**பொ.து.ந.க.எண்.ஈ2/ 18461/ 2019**

மேற்காண் தனியர்களின் மீது ஒழுங்கு நடவடிக்கை/விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்றும், தகுதிகாண் பருவ காலத்திற்குள் எவ்வித விடுப்பும் துய்க்கவில்லை என்றும் அறிக்கை பெறப்பட்டுள்ளது.

மேற்காண் மருத்துவ அலுவலர்களுக்கு விடுப்பு துய்த்த காலம், துறைத் தேர்வினை எழுதிய காலத்திற்கு முன்பாகவே வருவதால் தேர்வு எழுதிய நாளன்றே தகுதிகாண் பருவ காலத்தினை பூர்த்தி செய்தவராக அறிவிக்கப்பட வேண்டும். (தேர்வு எழுதிய நாள் முறையே 31.05.2016 (ம) 31.05.2017). (G.O.Ms.No.446, Public (Services-B) Department, 01.05.1934ன்படி, "*Government consider that a person who passed an Examination or test should be deemed to have passed it on the last day on which the Examination or test is held, irrespective of the date on which the results are announced. If, therefore the passing of such examination or test confers on a Government servant the title to any right, benefit or concession, such title should be deemed to have accrued on the day following the last day of the Examination or test which he passed".*

*"An examination or test can, in certain cases, be passed in installments, in such cases the title to the right benefit or concession will be deemed to have accrued on the day following the last day of the examination in the subject or subjects in which he has last passed*"

மேலும், ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை பொ.து.ந.க.எண்.ஈ3/49369/2012, நாள்.24.11.2012ன்படி, பெருநகர சென்னை மாநகராட்சியில் வகுப்பு-2ன் கீழ் வரும் பதவிகளுக்கு தகுதிகாண்பருவம் முடித்தவராக அறிவிக்க உரிய அதிகார பங்களிப்பு சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களின் வசம் உள்ளது.

ஆகவே, மருத்துவ சேவைகள் துறையில் பணிபுரியும் டாக்டர்.எம்.கே.தேவிகா பிரியதர்ஷினி, டாக்டர்.வி.சங்கீதா மற்றும் டாக்டர்.சி.சந்தியாராணி, மருத்துவ அலுவலர்களுக்கு கீழ்கண்டவாறு பணிவரன்முறை மற்றும் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்க சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 27.04.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

| வ. எ ண். | பெயர்/பதவி திருவாளர்கள் | பணியில் சேர்ந்த நாள். | பணிவரன் முறைப் படுத்த வேண்டிய நாள். | விடுப்பு துய்த்த நாட்கள் | துறைத் தேர்வு விவரங்கள் | | தகுதி காண் பருவம் முடித்த நாள். |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | தேர்வு எழுதிய நாள். | தேர்ச்சி பெற்ற விவரங்கள் | |
| 1. | டாக்டர்.எம்.கே. தேவிகா பிரியதர்ஷினி, மருத்துவ அலுவலர் | 15.04.2013 | 15.04.2013 | மருத்துவ சான்றின் பேரில் ஈட்டிய விடுப்பு – 19.05.2014-25.05.2014=7 22.12.2014-28.12.2014=7 24.05.206-31.05.2016=8 மொத்தம் 22 நாட்கள். | மருத்துவ குறியீடு (ம) செயல் அலுவலர் களுக்கான கணக்குத். தேர்வு எழுதிய நாள்-மே 2014 | 16.08.2014 | 07.05.2015 |
| 2. | டாக்டர்.வி.சங்கீதா மருத்துவ அலுவலர் | 14.05.2013 | 14.05.2013 | EOL on MC= 15.5.13-14.7.13=61 09.2.13-22.12.13=14 24.6.14-28.6.14=5 9.5.15-29.5.15–21 | மருத்துவ குறியீடு (ம) செயல் அலுவலர்களுக்கான கணக்குத் தேர்வு எழுதிய நாள். மே 2016 | 16.08.2016 | 28.05.2016 |

**பொ.து.ந.க.எண்.ஈ2/ 18461/ 2019**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | ஈட்டிய விடுப்பு= 9.6.14-15.6.14=7 20.4.15-29.4.15=10 மொத்தம் 101 நாட்கள். | | | |
| 3. | டாக்டர்.சி.சந்தியா ராணி மருத்துவ அலுவலர் | 01.10.2014 | 01.10.2014 | ஈட்டிய விடுப்பு – 15.02.2016-24.02.2016=10 09.04.2016-23.04.2016=15 மொத்தம் 25 நாட்கள். | மருத்துவ குறியீடு (ம) செயல் அலுவலர்களுக்கான கணக்குத் தேர்வு எழுதிய நாள். டிசம்பர் 2015 தமிழ் மொழி தேர்வு பகுதி 1 (ம) 2 தேர்வு எழுதிய நாள். மே 2017 தமிழ் மொழிக்கான வாய்மொழித் தேர்வு நடைபெற்ற நாள்.- 24.08.2017 | 16.03.2016, 07.03.2016 (ம) 16.08.2017, 24.08.2017 | 24.08.2017 |

**"மருத்துவ அலுவலர்களுக்கு பணிவரன்முறை மற்றும் தகுதிகாண்பருவம் முடித்தவர்களாக அறிவிக்க, சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*******

சு.து.நக.எண்.B1/ 2325 / 2020

தீர்மான எண்.434/2021 நாள்:30-04-2021

**பெருநகர சென்னை மாநகராட்சி - பொது சுகாதாரத்துறை - கோவிட் நோய் தடுப்பு பணி - தினந்தோறும் மற்றும் இதுவரையில் கோவிட் நோய் உறுதி செய்யப்பட்ட நபர்களின் விவரங்கள் (Positive Case Details) சேகரிக்கவும் மற்றும் உயர் அலுவலர்கள் உடனுக்குடன் கோவிட் சம்பந்தமான விவரங்களை தெரிந்து கொள்ளவும் பெருநகர சென்னை மாநகராட்சியில் M/s. ATSUYA TECHNOLOGIES நிறுவனம் மூலமாக ஒப்பந்த அடிப்படையில் கோவிட் மென்பொருள் மேலாண்மையை (Design, Development and Deployment of GCC Covidcare Digital Platform for end to end Covid Management) உருவாக்கி செயல்படுத்தப்பட்டு வருவது - இப்பணியினை மேலும் 01.05.2021 முதல் 31.10.2021 வரையில் ஆறுமாத காலத்திற்கு பணிநீட்டிப்பு செய்ய அனுமதி.**

நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID - 19) உலகமெங்கும் பரவியுள்ள நிலையில் உலக சுகாதார நிறுவனம் (WHO) உலகமெங்கும் அவசர நிலையினை (Public Health Emergency of International Concern (PHEIC)) பிரகடனப்படுத்தியுள்ளது. மேலும் கட்டுப்படுத்தக்கூடிய தொற்று நோயாகவும் (Controllable Pandemic) அறிவித்துள்ளது.

தமிழக அரசின் உத்திரவின்படி பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறை சார்பில் நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID - 19 ) பரவாமல் தடுக்க பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சலின் தாக்கம் தற்போது அதிகரிக்க தொடங்கியுள்ளது. இதன் காரணமாக பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் பெருநகர சென்னை மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பெருநகர சென்னை மாநகராட்சியில், தினந்தோறும் மற்றும் இதுவரையில் கோவிட் நோய் உறுதி செய்யப்பட்ட நபர்களின் விவரங்கள் சேகரிக்கவும், இது சம்பந்தமான செயல்பாடுகளை எளிமைப்படுத்தவும், மாநகராட்சி பணியாளர்களின் பணி சுமையினை குறைக்கும் வகையிலும், பொதுமக்கள் எளிதாக கோவிட் சம்பந்தமான மருத்துவ வசதிகளை பெறவும் மற்றும் உயர் அலுவலர்கள் உடனுக்குடன் இது சம்பந்தமான விவரங்களை தெரிந்து கொள்ளவும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கென கோவிட் மென்பொருள் மேலாண்மையை (Design, Development and Deployment of GCC Covidcare Digital Platform for end to end Covid Management) உருவாக்கி செயல்படுத்த M/s. ATSUYA TECHNOLOGIES நிறுவனத்திற்கு கீழ்க்கண்டவாறு ஆணை வழங்கப்பட்டது.

| S.NO | Cost Line Item | Total Cost (Inclusive GST charges) Rs. |
|---|---|---|
| 1 | Phase-1 Development Cost for Phase-1 features for 11 resources working on the project from May 2020 to Aug 2020 | 55,03,365 |
| 2 | Phase-2 Development Cost for Phase-2 features for 8 resources working on the project from Sep 2020 to Nov 2020 | 31,01,567 |
| 3 | Infrastructure Cloud Cost for May-15th – 31st Oct 2020* | 16,96,000 |
| 4 | AMC Cost for 5 Resources who would be supporting from Dec 2020 to Apr 2021 | 15,00,000 |
| TOTAL | (Rupees One Crore Eighteen Lakhs Nine Hundred and thirty two only) | 1,18,00,932 |

மேற்கண்ட நிறுவனத்தினர் பணியாணையில் தெரிவித்தவாறு மென்பொருளை உருவாக்கி தற்போது வரையில் பராமரித்து வருகின்றனர். மென்பொருள் பராமரிப்பு காலமானது 31.04.2021 ல் முடிவடைகின்றது.

மேற்கண்ட நிறுவனத்தினர் 18.03.2021 நாளிட்ட கடிதத்தில் மேலும் இப்பணியினை தொடர்ந்து மேற்கொள்ள, மென்பொருள் பராமரிப்பிற்கென கீழ்கண்டவாறு விலைப்புள்ளி அளித்துள்ளனர்.

**சு.து.நகஎண்.B1/ 2325 / 2020**

| SNo | Description | Cost /Month (inclusive GST) |
|---|---|---|
| 1 | Monthly maintenance cost (including resources) | Rs.3,00,000 |
| 2 | Infra Cost-cloud | Rs.1,75,000 |
| | Total Cost | Rs.4,75,000 |

தற்போது கொரோனா தொற்று மிக வேகமாக அதிகரித்து வரும் நிலையில் மேற்கண்ட நிறுவனத்தின் மென்பொருள் பராமரிப்பினை ரூ.28,50,000/ செலவினத்தில் மேலும் ஆறுமாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை (P1) துறையின் அரசாணை (Ms) எண்.95 நாள்.13.03.2020 மற்றும் நிதித்துறை கடிதம் எண்.74/JS(MA)/Finance(Salaries) /2020 நாள்.01.04.2020ன்படி கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தங்கள் சட்டம் 1998 பிரிவு 16-a ல் அவசர காலங்களில் செயல்பட ஒப்பம் கோரும் அலுவலருக்கு ஒப்ப விதிகளில் தளர்வு செய்து ஒப்பம் கோருவதில் இருந்து விலக்களித்து நேரடியாக கொள்முதல் செய்ய அதிகாரம் அளிக்கப்படுள்ளது.

Tamil Nadu Transparency in Tenders Act, 1998 Sec:16 :"Provision of Act not to apply in certain cases: The provisions of section 9 and 10 shall not apply to procurement."

(g) During natural calamities and emergencies declared by the Government;

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறையில் அவசர அவசியம் கருதி தினந்தோறும் மற்றும் இதுவரையில் கோவிட் நோய் உறுதி செய்யப்பட்ட நபர்களின் விவரங்கள் சேகரிக்கவும், கோவிட் சம்பந்தமான செயல்பாடுகளை எளிமைப்படுத்தவும், மாநகராட்சி பணியாளர்களின் பணி சுமையினை குறைக்கும் வகையிலும், பொதுமக்கள் எளிதாக கோவிட் சம்பந்தமான மருத்துவ வசதிகளை பெறவும் மற்றும் உயர் அலுவலர்கள் உடனுக்குடன் இது சம்பந்தமான விவரங்களை தெரிந்து கொள்ளவும் ஏதுவாக ஒப்பந்த அடிப்படையில் கோவிட் மென்பொருள் மேலாண்மையை (Design, Development and Deployment of GCC Covidcare Digital Platform for end to end Covid Management) உருவாக்கி செயல்படுத்த M/s. ATSUYA TECHNOLOGIES, Mumbai-400610, நிறுவனத்திற்கு பணியாணை வழங்கப்பட்டு மென்பொருள் உருவாக்கப்பட்டு டிசம்பர் 2020 முதல் ஏப்ரல் 2021 வரையில் மென்பொருள் பராமரிப்பிற்கென பணியாணை வழங்கப்பட்டது, தற்போது கொரோனா தொற்று மிக வேகமாக அதிகரித்து வரும் நிலையில் மேற்கண்ட நிறுவனத்தின் மென்பொருள் பராமரிப்பினை 01.05.2021 முதல் 31.10.2021 வரையில் மேலும் ஆறுமாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்ய அனுமதிக்கும்,
2. தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தங்கள் சட்டம் 1998 பிரிவு 16-aல் அவசர காலங்களில் செயல்பட ஒப்பம் கோரும் அலுவலருக்கு ஒப்ப விதிகளில் தளர்வு செய்து கொள்முதல் செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டதின் அடிப்படையில் ஒப்பம் கோருவதில் இருந்து விலக்களித்து நேரடியாக மேற்கண்ட நிறுவனத்தின் மூலம் மென்பொருள் பராமரிப்பினை 01.05.2021 முதல் 31.10.2021 வரையில் மேலும் ஆறுமாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்ய அனுமதிக்கும்
3. இப்பணிக்கான நிர்வாக செலவினம் ரூ.28,50,000/- (ரூபாய் இருபத்தி எட்டு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மேற்கொள்ள அனுமதியும்,
4. மேற்கண்ட நிறுவனத்தினரிடம் பிணை வைப்பு தொகையாக மற்றும் ஒப்பந்தம் செய்வதில் இருந்து விலக்கு அளிக்கவும்,

<u>சு.து.நக.எண்.B1/ 2325 / 2020</u>

5. பணி முடிந்து கணினி பிரிவு/மின்சாரத்துறை (EDP Cell)யின் சான்று பெற்று பட்டி தீர்வு செய்யவும்,
6. இச்செலவினம் கோவிட் நிதியின் கீழ் பிரிவு குறியீடு 30-31-01 கணக்கு குறியீடு 230-70-12-03 என்ற தலைப்பின் கீழ் மேற்கொள்ள அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 30.04.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*******

**க.து.ந.க.எண்.பி1/450/12/2021**

**தீர்மானஎண்.434A/2021** **நாள்:30-04-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - COVID-19 - கட்டடத்துறை - கொரோனா வைரஸின் இரண்டாவது அலையின் தாக்கத்தால் பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டவர்கள் பயன்படுத்த தலையணை, தலையணை உறை, போர்வை மற்றும் படுக்கை விரிப்பு, டவல் ஆகியவை கொள்முதல் செய்யும் பணிக்காக ரூ.93,65,000.00/-(Inculding GST)க்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி சென்னை, அண்டை மாவட்டங்கள் மற்றும் மாநிலங்களிலும் கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கை அதிகமாகி வரும் சூழ்நிலையில் கட்டில்கள் கொள்முதல் செய்வதில் சிறிது தாமதம் ஏற்பட்டாலும் நோயாளிகளை தனிமைப்படுத்துதல் மற்றும் கொரோனா பரவுதலை கட்டுப்படுத்துதலை பாதிக்கும் என்பதாலும் அப்படி தனிமைப்படுத்தாவிடில் அவர்கள் பலருக்கு தொற்றினை ஏற்படுத்தி அதனால் ஆகும் மனித பாதிப்பும் செலவீனமும் கணக்கில் கொள்ள முடியாத அளவிற்க இருக்கும் என்றும் உயர் அதிகாரிகள் ஆலோசனை வழங்கியுள்ளார்கள்.

இப்பணிக்கான தலைமைச்செயலர் தலைமையில் நடந்த கூட்டத்தில் உடனடியாக பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு தேவையான பொருட்கள் வழங்க தயார் நிலையில் வைக்க உத்தரவிடப்பட்டது.

மேலும், அதற்கான தலைமைச் செயலர் அவர்கள் மற்றும் முதன்மை செயலர் (வணிக வரி) அவர்கள் தலைமையில் 15 மண்டலங்களுக்கும் தனித்தனியாக *IAS* அதிகாரிகள் தலைமையில் *FST* உருவாக்கப்பட்டுள்ளது. அதில் உள்ள அதிகாரிகள் கள ஆய்வு செய்து பல இடங்களில் ஆக்ஷிஜன் வசதி கொண்ட படுக்கைகள் மற்றும் தேவையான பொருட்கள் தயார் நிலையில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

அதனால் கொரோனா வைரஸ் தாக்கத்தால் பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டவர்கள் பயன்படுத்த தலையணை, தலையணை உறை, போர்வை, படுக்கை விரிப்பு மற்றும் டவல் ஆகியவை கொள்முதல் செய்யும் பணி மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இதனடிப்படையில் தலையணை, தலையணை உறை, போர்வை மற்றும் படுக்கை விரிப்பு, டவல் ஆகியவை கொள்முதல் செய்யும் பணிக்காக, ஏற்கனவே *Covid*-19 பணிகளுக்காக ஒப்புதல் பெறப்பட்ட விலைக்கே தற்போது நிர்வாக அனுமதி பெற்று பணி மேற்கொள்ளலாம் என கருதப்படுகிறது.

கொரோனா வைரஸ் தாக்கத்தால் பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டவர்கள் பயன்படுத்தப்படும் தலையணை, தலையணை உறை, போர்வை மற்றும் படுக்கை விரிப்பு, டவல் ஆகிய பொருட்களுக்கு ஏற்கனவே ஒப்புதல் பெறப்பட்ட விலைக்கே பொருட்களின் விவரம் கீழ்க்கண்டாவறு பட்டியலிடப்பட்டுள்ளது.

| வ. எண். | பொருட்களின் விவரம் | எண்ணிக்கை | விலையின் விவரம் | | | | மொத்த தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| | | | விலை | தொகை | GST | | |
| 1 | Pillow | 25000 | 95.00 | 23,75,000.00 | 18% | 4,27,500.00 | 28,02,500.00 |
| 2 | Pillow cover | 25000 | 55.00 | 13,75,000.00 | 5% | 68,750.00 | 14,43,750.00 |
| 3 | Bed sheet | 25000 | 160.00 | 40,00,000.00 | 5% | 2,00,000.00 | 42,00,000.00 |
| 4 | Towel | 25000 | 35.00 | 8,75,000.00 | 5% | 43,750.00 | 9,18,750.00 |
| **மொத்தம்** | | | | **86,25,000.00** | | **7,40,000.00** | **93,65,000.00** |

மேற்கண்ட பட்டியலில் உள்ள பொருட்களை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான மருத்துவமனைகள் மற்றும் பல்வேறு கல்லூரிகள், விடுதிகள் ஆகிய இடங்களில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டவகளுக்கு இந்த பொருட்களை கட்டடத்துறை மூலமாக கொள்முதல் செய்து வழங்க வேண்டியுள்ளது.

எனவே,

1) மேற்கண்ட பட்டியலில் உள்ள பொருட்களை கொள்முதல் செய்யும் பணிக்காக **ரூ.93,65,000.00/-(Inculding GST)** (ரூபாய் தொண்ணூற்று மூன்று இலட்சத்து அறுபத்தி ஐந்தாயிரம் மட்டும்)க்கு நிர்வாக அனுமதி வேண்டியும்,

**<u>க.து.ந.க..எண்.பி1/450/12/2021</u>**

2) அரசு கடித எண்.74./JS(MA)/Finance(Salaries/ 2020,நாள்.01.04.2020 Sec 16(a) TNTT Act ன்படி பணி நேரடியாக கொள்முதல் செய்யவும், பணி மேற்கொள்ளவும்,

3) பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி இப்பணிக்காக ஏற்கனவே *Covid-19* பணிகளுக்காக ஒப்புதல் பெறப்பட்ட விலைக்கே உடனடியாக பணி ஆணை வழங்கி பணியினை மேற்கொள்ளவும்,

மேற்கண்ட *1* முதல் *3* வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் நிர்வாக அனுமதி கோரிய ஆணையரது 29.04.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"*1* முதல் *3* வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

***********

**க.து.ந.க.எண்.பி1/450/13/2021**

**தீர்மானஎண்.434B/2021** **நாள்:30-04-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - COVID-19 - கட்டடத்துறை - கொரோனா வைரஸின் இரண்டாவது அலையின் தாக்கத்தால் பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டவர்கள் பயன்படுத்த Disposable Bedsheet & Pillow Cover கொள்முதல் செய்யும் பணிக்காக ரூ.74,55,000.00/- (Inculding GST)க்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி சென்னை, அண்டை மாவட்டங்கள் மற்றும் மாநிலங்களிலும் கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கை அதிகமாகி வரும் சூழ்நிலையில் கட்டில்கள் கொள்முதல் செய்வதில் சிறிது தாமதம் ஏற்பட்டாலும் நோயாளிகளை தனிமைப்படுத்துதல் மற்றும் கொரோனா பரவுதலை கட்டுப்படுத்துதலை பாதிக்கும் என்பதாலும் அப்படி தனிமைப்படுத்தாவிடில் அவர்கள் பலருக்கு தொற்றினை ஏற்படுத்தி அதனால் ஆகும் மனித பாதிப்பும் செலவீனமும் கணக்கில் கொள்ள முடியாத அளவிற்கு இருக்கும் என்றும் உயர் அதிகாரிகள் ஆலோசனை வழங்கியுள்ளார்கள்.

இப்பணிக்கான தலைமைச்செயலர் தலைமையில் நடந்த கூட்டத்தில் உடனடியாக பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு தேவையான பொருட்கள் வழங்க தயார் நிலையில் வைக்க உத்தரவிடப்பட்டது.

மேலும், அதற்கான தலைமைச் செயலர் அவர்கள் மற்றும் முதன்மை செயலர் (வணிக வரி) அவர்கள் தலைமையில் 15 மண்டலங்களுக்கும் தனித்தனியாக IAS அதிகாரிகள் தலைமையில் FST உருவாக்கப்பட்டுள்ளது. அதில் உள்ள அதிகாரிகள் கள ஆய்வு செய்து பல இடங்களில் ஆக்ஷிஜன் வசதி கொண்ட படுக்கைகள் மற்றும் தேவையான பொருட்கள் தயார் நிலையில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

அதனால் கொரோனா வைரஸ் தாக்கத்தால் பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டவர்கள் பயன்படுத்த Disposable Bedsheet & Pillow Cover ஆகியவை கொள்முதல் செய்யும் பணி மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இதனடிப்படையில் Disposable Bedsheet & Pillow Cover கொள்முதல் செய்யும் பணிக்காக, ஏற்கனவே Covid-19 பணிகளுக்காக ஒப்புதல் பெறப்பட்ட விலைக்கே தற்போது நிர்வாக அனுமதி பெற்று பணி மேற்கொள்ளலாம் என கருதப்படுகிறது.

கொரோனா வைரஸ் தாக்கத்தால் பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டவர்கள் பயன்படுத்தப்படும் Disposable Bedsheet & Pillow Cover இதற்காக ஏற்கனவே ஒப்புதல் பெறப்பட்ட விலைக்கே பொருட்களின் விவரம் கீழ்க்கண்டாவறு பட்டியலிடப்பட்டுள்ளது.

| வ. எண். | பொருட்களின் விவரம் | எண்ணிக்கை | விலையின் விவரம் | | | | மொத்த தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| | | | விலை | தொகை | GST | | |
| 1 | Disposable Bedsheet & Pillow Cover | 25000 | 284.00 | 71,00,000.00 | 5% | 3,55,000.00 | 74,55,000.00 |
| **மொத்தம்** | | | | **71,00,000.00** | | **3,55,000.00** | **74,55,000.00** |

மேற்கண்ட பட்டியலில் உள்ள பொருட்களை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான மருத்துவமனைகள் மற்றும் பல்வேறு கல்லூரிகள், விடுதிகள் ஆகிய இடங்களில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டவகளுக்கு இந்த பொருட்களை கட்டடத்துறை மூலமாக கொள்முதல் செய்து வழங்க வேண்டியுள்ளது.

எனவே,

1) மேற்கண்ட பட்டியலில் உள்ள பொருட்களை கொள்முதல் செய்யும் பணிக்காக **ரூ.74,55,000.00/- (Inculding GST)** (ரூபாய் எழுபத்தி நான்கு இலட்சத்து ஐம்பத்தி ஐந்தாயிரம் மட்டும்) க்கு நிர்வாக அனுமதி வேண்டியும்,

2) அரசு கடித எண்.74./JS(MA)/Finance(Salaries/ 2020,நாள்.01.04.2020 Sec 16 (a) TNTT Act ன்படி பணி நேரடியாக கொள்முதல் செய்யவும், பணி மேற்கொள்ளவும்,

**க.து.ந.க.எண்.பி1/450/13/2021**

3) பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி இப்பணிக்காக ஏற்கனவே Covid-19 பணிகளுக்காக ஒப்புதல் பெறப்பட்ட விலைக்கே உடனடியாக பணி ஆணை வழங்கி பணியினை மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் நிர்வாக அனுமதி கோரிய ஆணையரது 29.04.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*******